விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii
E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 28 வெள்ளிக்கிழமை (10.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 174

WESTERN UNION MONEY TRANSFER

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
(க-4841)

## யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக 30 ஆண்டுகளுக்கு பின் தமிழரொருவர் நியமனம்

### ஸ்ரனிஸ்லஸ் நாளை பதவியேற்கிறார்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக தமிழரான கஸ்ரன் ஸ்ரனிஸ்லஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது பதவியை நாளை சனிக்கிழமை காலை பொறுப்பேற்கவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக நிலவி வரும் குற்றச் செயல்களை கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடைந்துள்ள நிலையில்,


யாழ்.மாவட்டத்திற்கு தமிழரான கஸ்ரன் ஸ்ரனிஸ்லஸ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை முழுமைக்குமான ஒழுக்கம் நன்னடத்தைப் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிய இவர் 1982களில் யாழ்ப்பாணம்

24ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவம் இருப்பதால்தான் அசம்பாவிதங்கள் ஏற்பட்டுள்ளன

### இராணுவ பேச்சாளருக்கு சி.வி பதில்



(வவுனியா)

வட மாகாணத்தில் யாரால் அசம்பா விதங்கள் ஏற்படும் என இராணுவப் பேச்சாளர் எதிர்பார்க்கின்றார் என கேள்வி எழுப்பிய வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இராணுவம் இருப்பதால் தான் அசம்பாவிதங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மக்களை பாதுகாக்கவே அங்கு இராணுவ முகாம்கள் அக

23ஆம் பக்கம் பார்க்க....

# நிதியமைச்சருக்கு எதிரான பிரேரணை தோற்கடிப்பு

## 94 மேலதிக வாக்குகளால்

(கொழும்பு)

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக பொது எதிரணியினரால் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் 94 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

24ஆம் பக்கம் பார்க்க....



### நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஜே.வி.பி ஆதரவு; டக்ளஸ் எதிர்ப்பு; மகிந்த, த.தே.கூ வாக்களிக்கவில்லை

(கொழும்பு)

நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை 94 மேலதிக வாக்குகளால் தோல்வியடைந்துள்ளது.

குறித்த, பிரேரணைக்கு எதிராக 145 வாக்குகளும், ஆதரவாக 51 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன. 28 பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால், குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்தப் பிரேரணை மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் பாராளு மன்றத்தில் இடம்பெறவிருந்தது.

எனினும், பாராளுமன்றத்தின் ஒலி வாங்கிக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக சபை நடவடிக்கைகள் நேற்று காலை வரை ஒத்திவைக்கப்பட்டன.

இதற்கமைய நேற்று குறித்த விவாதம் மற்றும் வாக்கெடுப்பும் நடைபெற்றது.

இந்த வாக்கெடுப்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உட்

24ஆம் பக்கம் பார்க்க....

### அவதானம்!!!

## இளைஞர்கள் மத்தியில் அதிகரிக்கிறது எயிட்ஸ்!

(கொழும்பு)

நாட்டிலுள்ள இளைஞர்கள் மத்தியில் எச்.ஐ.வி தொற்று அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

15 தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களே இவ்வாறு அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக, பாலியல் நோய்கள் மற்றும் எச்.ஐ.வி எயிட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியின் முதல் ஐந்து மாதங்களில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான 135 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதன்படி, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த நோய்த்

24ஆம் பக்கம் பார்க்க....

### திட்டத்தை கைவிடும் எண்ணம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு இரணைமடு குளத்திலிருந்து நீரைக் கொண்டு வரும் திட்டத்தை கைவிடும் எண்ணமில்லையென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் சபையில் உறுதியாகத் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட பாரா

24ஆம் பக்கம் பார்க்க....

### பிரபல சோதிடர் எச்சரிக்கை!

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் இலங்கைக்குள் பாரிய மோதலான நிலைமை ஏற்படும் என தென்பகுதி பிரபல சோதிடர் இந்திக்க தொட்டவத்த எச்சரித்துள்ளார்.

1988ஆம் 89ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட நிலைமைகளுக்கு இணையான நிலைமையாக இது இருக்கும் எனவும் கிரக மாற்றங்களே இதற்கு காரணம் எனவும் அவர் கூறி

24ஆம் பக்கம் பார்க்க....

### பள்ளிவாசலை விஸ்தரிக்க தடை

(கொழும்பு)

கொழும்பு புறநகர் பகுதியான தெகிவளை பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல் விஸ்தரிப்புக்கு மாநகர சபை தடை விதித்துள்ளது.

அந்த பகுதியிலுள்ள பௌத்த கடும் போக்காளர்களின் எதிர்ப்புகள் காரணமாகவே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

ஏற்கெனவே பள்ளிவாசல் நிர்

24ஆம் பக்கம் பார்க்க....

## இளைஞர்களை அரசியல்வாதிகள் அடிதடிக்கு பயன்படுத்துகின்றனர்

### பெற்றோர்களே அவதானம்-பொலிஸ் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழில் உள்ள இளைஞர் களை அரசியல்வாதிகள் சிலர் அடிதடியில் ஈடுபடுவதற்கு பயன்படுத்தி வருவதாக தெரிவித்த யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஐ.வீரசிங்க பெற்றோர்களால் கவனிப்பின்றி வளர்க்கப்படும் பல இளைஞர்களை அரசியல்வாதிகள் தூண்டி விடுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு ஜே/123 கிராம சேவையாளர் பிரிவில் நேற்றைய தினம் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலிஸ் நிலைய பிரிவிற்குள் தற்போது குற்றங்கள் கட்டுபபாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

கொக்குவில் பிரதேசத்தில் வாள் வெட்டு மற்றும் திருட்டில் ஈடுபட்டவர்களையும் கைது செய்து நீதி மன்றில் முற்படுத்தி தண்டனை பெற்றுக் கொடுத்துள்ளோம். குற்றங்களில்

24ஆம் பக்கம் பார்க்க....

### ஒலிவாங்கி கோளாறு; பலரும் விமர்சிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றில் நேற்றுமுன்தினம் ஒலி வாங்கிகளில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டமை குறித்து ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

பாராளுமன்றின் ஒலிவாங்கிக் கட்டமைப்பு மிகவும் பழமையானது என்பது தெரிந்து கொண்டே கூட்டு எதிர்க்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அபாண்டமாக அரசாங்கம் மீது குற்றம் சுமத்துவதாக அவைத

24ஆம் பக்கம் பார்க்க....

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும்

# குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொலிஸ் - மக்கள் சந்திப்புக்கள்



யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு விசேட நடவடிக்கை நேற்று தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் மக்கள் சந்திப்புக்களை நடத்தி மக்களால் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸார் தயாராகி வருகின்றனர்.

இதில் முதற்கட்ட நடவடிக்கை நேற்றைய தினம் கொக்குவில் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள கொக்குவில் கிழக்கு ஜே/123 கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது. நேற்றைய சந்திப்பின் போது யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஐ. வீரசிங்க கலந்து கொண்டிருந்தார்.

தொடர்ந்து இந்த சந்திப்புக்கள் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் நடைபெறவுள்ளன. இச்சந்திப்புகளின் போது பொது மக்கள் தமது வீட்டருகில் அல்லது வீதிகளில் நடைபெறும் குற்ற செயல்கள் குறித்து பொலிஸாருக்கு தெளிவு படுத்தும் நிலையில், பொது மக்கள் கூறிய இடங்களை பொலிஸார் தமது கண்காணிப்புக்கு உட்படுத்துவர்.

கிராமங்களில் நடைபெறும் வாள்வெட்டு சம்பவங்கள் மற்றும் குழு மோதல்களில் ஈடுபடுபவர்களை பொது மக்களது பங்களிப்புடன இனங்கண்டு, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதை முக்கிய நோக்கமாக கொண்டு இச்சந்திப்புக்கள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

குறிப்பாக வன்முறை சம்பவங்களில் ஈடுபடும் இளைஞர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி கிராம சேவையாளர் நற்சான்றிதழ் பத்திரம், பொலிஸ் பத்திரம் என்பவற்றையும் வழங்காமல் நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இளைஞர்கள் தமது நடவடிக்கைகள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தமக்கு தெரிந்த குற்ற சம்பவங்கள் தொடர்பில் வெளிப்படையாக கூற தயங்கினால் 021 222 2222, 071 445 6499 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு முறைப்பாட்டினை தெரிவிக்க முடியும். வாள்வெட்டு சம்பவங்கள் தற்போது கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், புதிதாக சம்பவங்கள் எதுவும் நடைபெறாமல் இருப்பதற்கு,

அவற்றை ஆரம்பித்திலேயே கிள்ளியெறிய வேண்டும். இவர்களை இனங்காட்ட வேண்டிய பொறுப்பு பொதுமக்களிடமே உள்ளது. யாழ்ப்பாணம் அமைதியாக இருப்பதற்கு பொலிஸாராகிய நாம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்.

இந்த சந்திப்புக்களை ஏனைய பிரதேசங்களிலும் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-4)

# நல்லூர், யாழ்ப்பாண கோட்ட தொகை மதிப்பீட்டு கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கான தொகை மதிப்பீடு தொடர்பான கூட்டம் அந்தந்த கோட்ட அலுவலகங்களில் இன்று நடைபெறும்.

யாழ்ப்பாண கோட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கும், நல்லூர் கோட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கும் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தொகை மதிப்பீட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர்களை பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 13-ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும். (ந)

**ஏல விற்பனை**

யா/ சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வளாகத்தில் 24.06.2016 அன்று காலை 11.00 மணிக்கு பாவித்த பழைய நூலகப்புத்தகங்களும் ஏனைய பொருட்களுக்கான ஏல விற்பனை நடைபெறும்.

- அதிபர்

(4906)

# மங்கள இந்.விஜயம்

இரு நாள் உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நாளை மறுதினம் இந்தியா செல்கின்றார். மும்பையில் நடைபெறவுள்ள இருநாள் கருத்தரங்கு ஒன்றில் கலந்துக் கொளவதற்காகவே அவர் இந்தியா செல்கின்றார்.

புது டில்லியில் எதிர்வரும் திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய இரு தினங்கள் நடைபெறவுள்ள இந்த கருத்தரங்கில் வெளிவிவகாரம் மற்றும் வர்த்தகம் சார்ந்த விவகாரங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடப்படத்தக்கது. (செ-12)

**சமரச சுத்த சன்மார்க்க ஞானக்குடில் அங்குரார்ப்பணம்**

**அழைப்பு**

காலம்:
12.06.2016
ஞாயிற்றுக்கிழமை
காலை 7.00 மணிமுதல்
பி.ப 4.00 மணி வரை

இடம்
இல.25, நக்கா வீதி
(புனித யோன் பொஸ்கோ வித். முன்பாக)

தலைமை:
**திரு. முத்துவேலு இராஜேந்திரன்**
(ஸ்தாபகர் சமரச சுத்த சன்மார்க்க ஞானக்குடில்)

0777 621644, 077 6219843, 077 2773801

[4904]

**பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

**அமரர் கனகம்மா ஆறுமுகம்**
(இளைப்பாறிய ஆசிரியை)

தோற்றம்
30
01
1931



மறைவு
25
05
2004

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
திகழ்ந்த எம் அன்புத் தாயே
அறிவூட்டி சீராட்டி வளர்த்த அன்னையே
அன்பான அறிவு தந்து
அறுசுவை உணவூட்டி
அரவணைத்து மகிழ்ந்தவளே
பொன்னான வாழ்வு தனை
போற்றி வளர்த்த அன்புத்தாயே
கூடிக் குலம் மகிழ்ந்து
நேசமுடன் வாழ்ந்த எம்மை
விட்டுப் பிரிந்து பன்னிரண்டு ஆண்டுகள்
கடந்தாலும் மறப்போமா அம்மா
உங்களை எம்வாழ்வில்



(C-4854)

தாமோதரம் வீதி, சாவகச்சேரி.
ஜெயபதி குடும்பம்

**சேவைநலன் பாராட்டுவிழா**

திருமதி
**கௌரி பாலகிருஷ்ணன்**
(B.Sc.PG.DIP.IN.Edu.SLTS-1)



**சேவை விபரம்**

1984 - 1989 - மாத்/மாத்தளை பாக்கியா வித்தியாலயம்
1989 - 1996 - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
1996 - 1997 - திரு/திருகோணமலை விபுலானந்த வித்தியாலயம்
1997 - 1998 - திரு/திருகோணமலை அல் பத்தாஹ் மகா வித்தியாலயம்
1998 - 2003 - திரு/செல்வநாயகபுரம் இந்து மகளிர் வித்தியாலயம்
2004 - 2016 - யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

எமது கல்லூரியில் கடந்த 12 வருடங்களாக சிறந்த விஞ்ஞான ஆசிரியையாக சேவையாற்றி இன்று (10.06.2016) ஓய்வு பெற்று 11.06.2016 இல் மணி விழாக்காணும் ஆசிரியை சகல நலன்களும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல வைத்தீஸ்வரப் பெருமானின் அருள் வேண்டி ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி சமூகம்

(C-4852)

# அமைச்சர்களின் வாகன கொள்வனவு; 1.1 பில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு

## கூட்டு எதிர்க்கட்சி கண்டனம்

அரசாங்கத்தின் 30 அமைச்சர்களுக்காக வாகனங்களை கொள்வனவு செய்ய 1.1 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்படுவதை கூட்டு எதிர்க்கட்சி கண்டித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ஜி. எல். பீரிஸ். அரசாங்கம் பொதுமகன் ஒருவரை கவனிப்பதற்கு பதிலாக அமைச்சர்களின் வரப்பிரசாதங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாக தெரிவித் துள்ளார்.

அரசாங்கத்தை பொறுத்தவரை தற்போது அண்மையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள்மற்றும் கொஸ்கம இராணுவ முகாம் தீப்பரவலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நலன்களைகவனிக்க வேண்டும்.


இதனைவிடுத்து ஏற்கனவே வாகனங்களை கொண்டுள்ள அமைச்சர்களுக்கு வாகனங்களை கொள்வனவு செய்வது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று பீரிஸ் தெரிவித்தார்.இது தமது அமைச்சர் களின் நலனுக்காக பொதுமகனை நசுக்கும் செயற்பாடு என்றும் அவர் குற்றம்சுமத்தியுள்ளார். (இ-10)

## சீன வங்கியுடன் இலங்கை உடன்பாடு

சீனாவின் EXIM வங்கியிடம் இருந்து 1.7 பில்லியன் டொலர்களை கடனாக பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்நிதி தெற்கு அதிவேக பாதையின் விஸ்தரிப்புக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்கான யோசனையை நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

ஏற்கனவே இலங்கை அரசாங்கம் குறித்த சீன வங்கியுடன் நான்கு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது. சீனாவுடன் உறவுகள் சீரற்றுப் போயிருந்தபோதும் இலங்கை அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு குறித்த சீன வங்கியிடம் கடன்களுக்கான விண்ணப்பத்தை செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)




# பாரிய கடன் சுமைக்கு மத்தியில் அமைச்சர்களுக்கு வாகனங்கள்

## வெளிநாட்டு ஊடகம் விமர்சனம்

(கொழும்பு)

**இலங்கை கடனில் மூழ்கிக்கொண்டிருக்கின்ற நிலையில் அமைச்சர்களுக்கு அதிசொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக ஹொங்கொங்கிலிருந்து வெளியாகும் த ஸ்ரான்டர்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

பலதரப்பட்ட தவறான கொள்கைகள். அதிகளவான வெளிநாட்டுக்கடன். கொள்கைப் பின்னடைவு தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகியிருக்கும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்நோக்கியுள்ளார்.

32 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டு இந்த பிரேரணையை சமர்ப்பித்துள்ளனர்.

2016 ஆம் ஆண்டிற்கான வருவாய் தான் ஆரம்பத்தில் எதிர்வுகூறியிருந்த 1.87 டிரில்லியன் ரூபாவிலும் பார்க்க குறைவானதாக இருக்கும் என நாடாளுமன்றத்தில் ரவிகருணாநாயக்க தெரிவித்திருந்தார்.

இந்த தொகை 2.03 டிரில்லியனாக இருக்கும் என திட்டமிடப்பட்டிருந்தது. அதே வேளை அதிகளவு கடனைப் பெற்றுக்கொண்டுள்ள அரசாங்கம் 1.17 பில்லியன் ரூபா தொகைக்கான குறைநிரப்பு பிரேரணையை சபையில் சமர்ப்பித்திருந்தது.

30 அமைச்சர்களுக்கு சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக இப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனை எதிரணியினர் கண்டித்துள்ளனர்.

கடன்பொறிக்குள் சிக்கியுள்ள இலங்கை முன்னொரு போதுமில்லாத வெளிநாட்டு கடனில் மூழ்கப்போவதாக அவர்கள் கருதுவதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# தற்கொலை அதிகம் இடம்பெறும் நாடுகளில் இலங்கை நாலாமிடம்

அதிகம் தற்கொலை இடம்பெறும் உலக நாடுகளின் வரிசையில் இலங்கை நான்காவது இடத்தில் இருப்பதாக உலக சுகாதார அமைப்பு விடுத்துள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் அறிக்கையை மேற்கோள்காட்டி சுகாதார அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

உலக நாடுகளில் காணப்படும் மக்கள் தொகைக்கு ஏற்பட அந்நாடுகளில் இடம்பெறும் தற்கொலை வீதம் ஒரு இலட்சம் பேருக்கு 11 வீதமானவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும், இலங்கையில் அது ஒரு இலட்சம் பேருக்கு 28.8 வீதமானோர் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையில் நூற்றுக்கு 50 பேரே மதுபானம் மற்றும் போதைப் பொருட்கள் பாவனையுடன் தொடர்புடையவர்கள். இதுவே அவர்களைத் தற்கொலையின் பால் தூண்டும்காரணியாக காணப்படுவதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நாட்டிலுள்ள மக்களில் 10 பேரில் ஒருவர் ஏதோ ஒருவகையில் மன நோயினால்பாதிக்கப்பட்டவர்எனவும் இவர்களில் சிகிச்சை பெற்றுக் கொள்பவர்கள்நூற்றுக்கு 20 வீதமானவர்களே எனவும் சுகாதார அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-10)

# அநுர சேனாநாயக்கவிற்கு தொடர்ந்து விளக்கமறியல்

## சிந்தித்து பார்க்குமாறு நீதிமன்றம் உத்தரவு



ரக்பி வீரர் வசிம் தாஜுடீன் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்கவிற்கு தொடர்ந்தும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.


கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் அவர் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ரக்பி வீரர் வசிம் தாஜுடீனின் கொலை சம்பவம் தொடர்பிலான சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நாரஹேன்பிட்டி போக்குவரத்து பிரிவின் முன்னாள் நிலைய பொறுப்பதிகாரி சுமத் குமாரவிற்கு கருத்து தெரிவிப்பதற்கு நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

அது தொடர்பில் மீண்டும் சிந்தித்து பார்க்குமாறு நீதிமன்றம் சுமத் குமாரவிற்கு அறிவித்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், விருப்பத்தின் பிரகாரம் முன்வந்தால் இன்று விசேட கருத்தை தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க முடியுமென கொழும்பு மேலதிக நீதவான் சந்தேநபருக்கு தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-10)

# மக்கள் பார்வைக்கு ஜனாதிபதி மாளிகை





கொழும்பு ஜனாதிபதி மாவத்தையில் உள்ள ஜனாதிபதி மாளிகை பொதுமக்கள் பார்வைக்காக நேற்று முன்தினம் முதல் 14 ஆம் திகதி வரை திறந்து விடப்பட்டுள்ளது. இதனையடுத்து பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் நேற்று முன்தினம் அதனைப் பார்வையிட்டனர். அத்துடன் அங்கு ஜனாதிபதிகளுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

# கத்துக்குட்டி ஹெய்டியை கதறவிட்ட பிரேசில்

கோபா அமெரிக்க கால்பந்து போட்டியில் கவுடினோ 'ஹட்ரிக்' கோல் அடிக்க, பிரேசில் அணி 7:1 என்ற கோல்கள் கணக்கில் ஹெய்டியை துவம்சம் செய்தது.

அமெரிக்காவில் 45ஆவது கோபா அமெரிக்க கால்பந்து தொடர் நடக்கிறது. இதில் பிரேசில், உருகுவே, ஆர்ஜெண்டினா உள்ளிட்ட 16 அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு லீக் சுற்றில் விளையாடுகின்றன.

இதன் 'பி' பிரிவு லீக் போட்டியில் 'நம்பர்-7' அணியான பிரேசில், தர வரிசையில் 97ஆவது இடத்திலுள்ள 'கத்துக்குட்டி' ஹெய்டி அணியை சந்தித்தது.

வலிமையான பிரேசிலை சமாளிக்கத் தெரியாமல் ஹெய்டி வீரர்கள் விழித்தனர். வாய்ப்பை பயன்படுத்திய பிரேசில் அணியினர் அலை அலையாக தாக்குதல் தொடுத்தனர். 14, 29ஆவது நிமிடங்களில் பிரேசில் வீரர் கவுடினோ, இரு கோல் அடித்தார். அகஸ்டோ (35வது) ஒரு கோல் அடிக்க, பிரேசில் அணி முதல் பாதியில் 3:0 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை பெற்றது.

**கவுடினோ ஹட்ரிக்**

இரண்டாவது பாதியில் பிரேசில் அணியின் கேப்ரியல் (59), லூகாஸ் (67), அகஸ்டோ (86) தலா ஒரு கோல் அடித்தனர். போட்டியின் 'ஸ்டாப்பேஜ்' நேரத்தில் (90+2) மீண்டும் அசத்திய கவுடினோ, 'ஹட்ரிக்' கோல் அடித்தார். ஹெய்டி அணி சார்பில் மார்சலின் மட்டும் (70) கோல் அடித்தார். முடிவில், பிரேசில் அணி 7:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

அரிசோனாவில் நடந்த ஈகுவடோர், பெரு அணிகள் மோதிய 'பி' பிரிவு மற்றொரு லீக் போட்டி 2:2 என சமனிலையானது.

**காலிறுதிக்கு சிக்கல**

'பி' பிரிவில் தலா 2 போட்டிகள் முடிந்த நிலையில் பிரேசில், பெரு அணிகள் தலா ஒரு வெற்றி, ஒரு ட்ரோ பெற்று சம புள்ளிகள் (4) பெற்றுள்ளன. மூன்றாவது இடத்தில் ஈகுவடோர் (2) அணி உள்ளது. இந்த அணிகள் மோதும் மூன்றாவது மற்றும் கடைசி லீக் போட்டியின் முடிவைப் பொறுத்து காலிறுதிக்கு செல்லும் அணிகள் முடிவாகும். (க)



## டென்னிஸ் புயல் ஷரபோவாவுக்கு
# 2 ஆண்டுகள் தடை விதிப்பு



ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கிய ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவாவுக்கு 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா, (வயது-29) 'மேல்டோனியம்' என்ற ஊக்க மருந்தை பயன்படுத்தியதாக இவருக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டு இருந்தது.

இதுகுறித்த சர்வதேச டென்னிஸ் கூட்டமைப்பு (ஐ.டி.எப்.,) விளையாட்டு தீர்ப்பாயத்தின் விசாரணை முடிந்த நிலையில், நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில் கடந்த 2016, ஜன., 26 முதல் இரு ஆண்டுக்கு டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்க ஷரபோவாவுக்கு தடை விதிக்கப்பட்டது.

இதுகுறித்து ஷரபோவா கூறுகையில், "இரண்டு ஆண்டு தடை என்பதை ஏற்க முடியாது. இது கடினமான, ஒருதலைப்பட்சமான முடிவு" என்றார். தடையை எதிர்த்து ஷரபோவா 'அப்பீல்' செய்யவுள்ளார்.

வரும் ரியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் ரஷ்ய டென்னிஸ் அணியில் ஷரபோவா பெயர் சேர்க்கப்பட்டு இருந்தது. தற்போது தடை காரணமாக, இவருக்குப் பதில் வேறு வீராங்கனை சேர்க்கப்படவுள்ளார். (க)

# துரையப்பா விளையாட்டரங்க திறப்பு விழாவில் காணொலி மூலம் இணைகிறார் நரேந்திர மோடி!

## நேரில் ஜனாதிபதி மைத்திரி திறந்து வைப்பார்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புனரமைக்கப்பட்ட துரையப்பா விளையாட்டரங்குத் திறப்புவிழாவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் உரையாற்றவுள்ளதாக இந்திய தூதரக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விளையாட்டரங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இணைந்து திறந்து வைக்கவுள்ளனர் என முன்னர் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த விளையாட்டரங்கினை எதிர்வரும் 18ஆம திகதி சனிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரடியாக திறந்து வைக்கவுள்ளதோடு, அதே நேரத்தில் இந்தியப் பிரதமர் இந்தியாவிலிருந்து காணொலி மூலம் குறித்த விளையாட்டரங்கினை திறந்து வைப்பது போன்ற காட்சி திரையில் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மைதான திறப்பு விழாவினை அடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இந்திய பிரதமரும் உரையாற்றவுள்ளனர். இந்திய அரசாங்கம் வழங்கிய 145 மில்லியன் ரூபாய் நிதி உதவியுடன இலங்கையின் தனியார் நிறுவனமொன்று கடந்த இரண்டு ஆண்டுகளாக துரையப்பா விளையாட்டரங்கின் புனரமைப்பு பணிகளை மேற்கொண்டிருந்தது.

துரையப்பா விளையாட்டரங்கில் முதலாம், இரண்டாம் நிலை பார்வையாளர் மண்டபங்களைத் தவிர புதிதாக உடற்பயிற்சி நிலையமொன்றும் கட்டப்பட்டுள்ளது.

மேலும் சர்வதேச விளையாட்டரங்குக்கு இணையான புற்தரைகள் என்பனவும் வடிவமைக கப்பட்டு, இரவு நேர விளையாட்டுக்கள் இடம்பெறு வதற்கு ஏதுவாக மின்குமிழ்களும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த விளையாட்டரங்கு திறக்கப்பட்டதன் பின்னர் இதனால் 50 ஆயிரம் மாணவர்கள் பயனடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, பாடசாலை மற்றும் விளையாட்டுக்கழக மாணவர்களுக்கு இந்த மைதானம் பெரிதும் பயனளிக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-4)

## யூரோ கிண்ண கால்பந்து
# இன்று பிரான்ஸில் ஆரம்பம்

'கிப்-ஒப்' விசில் எப்போ அடிப்பார்கள், யூரோ கிண்ணம் எப்போ தொடங்கும் என தவமாய் தவமிருந்த கால்பந்து ரசிகர்களுக்கு ஒரு மாத விருந்து காத்திருக்கிறது. ஐரோப்பாவின் முன்னணி 24 அணிகளபங்கேற்கும் இத் தொடரில் கிறிஸ்டியானோ ரொனால்டோ, ரூனே, பொடோல்ஸ்கி உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் பம்பரமாக சுழன்று ஆட தயாராக உள்ளனர்.

ஸ்பெயின் அணி 'ஹட்ரிக்' பட்டம் வெல்லுமா, உலக சம்பியன் ஜேர்மனி முத்திரை பதிக்குமா, இங்கிலாந்து, இத்தாலி ஆதிக்கம் செலுத்துமா, சொந்த மண்ணில் பிரான்ஸ் பட்டையை கிளப்புமா என்ற எதிர்பார்ப்புகளுடன் யூரோ தொடர் இன்று ஆரம்பமாகிறது.

ஐரோப்பிய நாடுகள் இணைந்து நடத்தும் யூரோ கோப்பை கால்பந்து தொடர் 1960ல் துவங்கியது. தற்போது 15ஆவது தொடர் பிரான்சில் நடக்க உள்ளது. இதில் ஐரோப்பாவின் ஜாம்பவான் அணிகள் மோதுவதால், ஆட்டத்தில் அனல் பறப்பது நிச்சயம்.

உலக கிண்ண கால்பந்து போட்டிக்கு அடுத்து மிகவும் பிரபலம் பெற்றது ஐரோப்பிய கோப்பை போட்டியாகும். ஐரோப்பிய கண்டத்தில் உள்ள நாடுகள் மட்டுமே இதில் விளையாடும் 1960ஆம் ஆண்டு இந்தப்போட்டி அறிமுகம் செய்யப்பட்டது. கடைசியாக 2012ஆம் ஆண்டு போலந்தும், உக்ரைனும் இணைந்து இந்தப் போட்டியை நடத்தியது. இதில் ஸ்பெயின் சம்பியன் பட்டம் பெற்றது.

UEFA EURO2016 FRANCE

15ஆவது ஐரோப்பிய கால்பந்து போட்டி பிரான்சில் இன்று தொடங்குகிறது. ஜுலை 10ஆம் திகதி வரை ஒரு மாத காலம் இந்த கால்பந்து திருவிழா நடக்கிறது.

இதில் 24 நாடுகள் பங்கேற்கின்றன. அவை 6 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் இடம்பெற்றுள்ள அணிகள் விபரம்:

**குரூப் 'ஏ'** பிரான்ஸ், ருமேனியா, அல்போனியா, சுவிட்சர்லாந்து. **குரூப் 'பி':** இங்கிலாந்து, ரஷ்யா, வேல்ஸ், சுலோவாக்கியா. **குரூப் 'சி'** ஜெர்மனி, உக்ரைன், போலந்து, வடக்கு அயர்லாந்து. **குரூப் 'டி'** ஸ்பெயின் (நடப்பு சம்பியன்), செக்குடியரசு, துருக்கி, குரோஷியா. **குரூப் 'ஈ'** பெல்ஜியம், இத்தாலி, அயர்லாந்து, சுவீடன். **குரூப் 'எப்'** போர்த்துக்கல், ஐஸ்லாந்து, ஆஸ்திரியா, ஹங்கேரி.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்றைய அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். 'லீக்' முடிவில் புள்ளிகள் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் 'நொக் அவுட்' சுற்றுக்கு முன்னேறும்.

22ஆம் திகதிவரை 'லீக்' ஆட்டம் நடக்கிறது. 25ஆம் திகதி 'நொக் அவுட்' சுற்று தொடங்கும். ஜுலை 6 மற்றும் 7ஆம் திகதிகளில் அரையிறுதியும், 10ஆம் திகதி இறுதிப் போட்டியும் நடைபெறும்.

**இதுவரை சம்பியன்கள்**

'யூரோ' கிண்ண கால்பந்து தொடரில், ஜேர்மனி (1972, 1980, 1996), ஸ்பெயின் (1964, 2008, 2012) அணிகள் தலா 3 முறை கோப்பை வென்றன.

**ஜேர்மனி முன்னிலை**

'யூரோ' கிண்ண வரலாற்றில் அதிக முறை பைனலுக்கு முன்னேறிய அணிகளுக்கான பட்டியலில் ஜேர்மனி முன்னிலை வகிக்கிறது. இதுவரை 6 முறை பைனலில் விளையாடிய ஜேர்மனி 3ல் (1972, 1980, 1996) வெற்றி பெற்று கோப்பை வென்றது. மூன்றில் (1976, 1992, 2008) தோல்வி அடைந்து 2ஆவது இடம்பிடித்தது.

# உண்டியல் உடைத்து திருடியவர் உறங்கியதால் மாட்டினார்!

புத்தூர், வீரவாணி நரசிம்ம கோயில் உண்டிலை உடைத்து அதிலிருந்த பணத்தைத் திருடிய திருடன், அயர்ந்து உறங்கியதால் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்ட சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளொன்றில் சென்று உண்டியலை உடைத்துத் திருடிய மேற்படி நபர், அந்த இடத்துக்குச் சற்றுத் தொலைவிலுள்ள ஆள்நடமாற்றம் அற்ற இடத்தில், தான் பயணித்த மோட்டார் சைக்கிளை வீதியோரத்தில் நிறுத்திவிட்டு ஆழ்ந்து நித்திரை கொண்டுள்ளார். வீதிரோந்தில் ஈடுபட்ட பொலிஸார், மோட்டார் சைக்கிளை அவதானித்து தேடுதல் நடத்தினர். இதன்போது சற்று ஒதுக்குப்புறமான இடத்தில் பணம் நிரம்பிய உரைப்பையுடன் தூங்கிக் கொண்டிருந்தவரை அவதானித்து அவரை விசாரணை செய்தனர். இதன்போது கோயில் உண்டியல் உடைத்த விடயம் தெரியவந்தது.

பண்டத்தரிப்புப் பகுதியைச் சேர்ந்த மேற்படி நபரிடமிருந்து 8 ஆயிரத்து 550 ரூபாய் உண்டியல் பணம் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# வீதி மின்விளக்கு ஒளிரவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். அத்தியடி பிள்ளையார் கோவில் வீதி மற்றும் யாழ். ஸ்ரான்லி வீதியின் ஒரு பகுதி ஆகியவற்றில் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் வீதி மின் விளக்கு ஒளிரவில்லை என பொது மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த நான்கு நாட்களாக வீதி மின்விளக்குகள் எரியாததனால் தாம் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவித்த அப்பகுதி மக்கள்,

இது தொடர்பில் பலமுறை இலங்கை மின்சார சபையிடம் முறையிட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் விசனம் வெளியிட்டுள்ளனர். (செ-11)

# குடும்பஸ்தர் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றிரவு 7.30 மணியளவில் வட்டுக்கோட்டை அராலி தெற்கில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சபாரட்ணம் அருட்செல்வன் (வயது-45) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-30)

# பூகோள அமைதிச் சுட்டி - 2016 இல் 18இடங்கள் முன்னேறிய இலங்கை

பூகோள அமைதிச் சுட்டியில், இலங்கை ஒரே ஆண்டில் 18 இடங்கள் முன்னேறி, 97 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. பொருளாதார மற்றும் அமைதிக்கான நிறுவகத்தினால் ஆண்டு தோறும் வெளியிடப்பட்டுவரும். பூகோள அமைதிச் சுட்டி-2016 (Global Peace Index) என்ற தரவரிசைப் பட்டியலிலேயே இலங்கை 97 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

163 நாடுகள் வரிசைப் படுத்தப்பட்டுள்ள இந்தப் பட்டி யலில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இலங்கை 18 இடங்கள் முன்னேறியிருக்கிறது. இந்தப் பட்டியலில், மிகவும் அமைதியான நாடாக- ஐஸ்லாந்து முதலிடத்தில் உள்ளது. அதையடுத்து டென்மார்க், ஒஸ்ரியா ஆகிய நாடுகள் உள்ளன.

கடைசி இடத்தில் சிரியா உள்ளது. தென்சூடான், ஈராக், ஆப்கானிஸ்தான், சோமாலியா ஆகிய நாடுகள் கடைசி வரிசையில் உள்ளன. கடந்த ஆண்டை விட இரண்டு இடங்கள் முன்னேறியுள்ள இந்தியா 141 ஆவது இடத்தில் உள்ளது.தெற்காசிய நாடுகளில், பூட்டான் 13 ஆவது இடத்திலும், நேபாளம் 78 ஆவது இடத்திலும், பங்களா தேஷ் 83 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 153 ஆவது இடத்திலும் ஆப்கானிஸ்தான் 160 ஆவது இடத்திலும் உள்ளன. (இ-10)


## ஏலவிற்பனை

யா/ இளைய தம்பி இந்துவித்தியாலயத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான பொருட்கணக்கெடுப்பில் பிரகாசம் ஒரு தொகுதி பழைய நூல்கள் (பழைய பாடத்திட்டங்கள், நூல்கள்) ஏலவிற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனைத் திகதி-27.06.2016

நேரம்-10.00, இடம்-குறித்த பாடசாலை

பங்கு கொள்ள விரும்புவர்கள் நேரில் சமுகமளிக்கவும்

அதிபர் , யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம்

வண்ணார்பண்ணை , யாழ்ப்பாணம். (4903)

## கிருஸ்ணா அடகு சேவை
## பதிவு இல J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2015 ஆம் ஆண்டு 2015.12.15 ஆம் திகதிக்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி (15.07.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்க தவறின் 2016.07.15 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உரிமையாளர் A.S.Surendran

(சீ-4851)

இல 370,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.021 490 0311

இல 09,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.021 222 5046


# 13 எம்.பிக்கள் சீனா பயணம்

பாராளுமன்ற உறுப்பினர் கள் 13 பேர் சீனாவுக்கு விஜ யம் செய்ய தீர்மானித்துள்ளனர். சீன - இலங்கை நட்புறவு சங்கத்தின் அழைப்பின் பேரிலேயே இவர்கள் அங்கு செல்லவுள்ளதாக மீன் பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தை பிரதி நிதித்துவப் படுத்தும் பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த விஜயத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த குழுவுக்கு தலைவ ராக ஐக்கிய மக்கள் சுதந்தி ரக் கூட்டமைப் பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர நியமிக்கப்பட்டுள்ளதோடு, அவர் இன்று சீனாவுக்கு செல்ல வுள்ளார்.

மேலும், பிரதி அமைச்சர் களான அஷோக் அபேசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்க ளான டலஸ் அழகப்பெரும, வாசுதேவ நாணயக்கார, ஜே.சி. அலவதுவல, வடிவேலு சுரேஷ், ஜயந்த சமரவீர, கே.கே.பியதாஸ, சந்தித் சமரசிங்க, நிஹால் கலப்ப த்தி, அரவிந்த் குமார், விஜித பேருகொட மற்றும் கென்டர் அப்புகாமி ஆகியோரும் செல்ல வுள்ளனர். (இ-10)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 01 11 1956

விண்ணில் 12 05 2016



### அமரர் கந்தசாமி பேரின்பசிவம் (ரவி)
[நிலஅளவை வெளிக்கள உதவியாளர்]

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை நாளை (11.06.2016) சனிக்கிழமை காலை 4 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சீ-4846)

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

கரணவாய் மேற்கு, கரவெட்டி.

தகவல்: சமன், பிரசாத் - குடும்பத்தினர்

## வேதாகம சோதிட பூஷணம்
## அமரர் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்கள்



அவர்களின் 10.06.2016 அன்று நடைபெறும் வருஷாப்திக சிராத்த தினம் நினைவேந்தல்

அமரர் சி.சிதம்பரநாதக் குருக்கள்

திருவும் கல்வியும் சீரும் சிறப்பும் நின்
திருக்கணித பஞ்சாங்கத் திறனும்
உருவும் சீலமும் ஊக்கமும் தாழ்வுறா
உணர்வும் தந்து எமதுள்ளத்தமர்ந்தவா

குருவும் தெய்வமுமாகி அன்பாளர் குறைதவிர்க்கும்
சிவ.சிதம்பரநாதக் குரு வள்ளலே- விரவும்
வேதாகம சோதிட பூஷணமே -நின்
திருவடித் தாளினை சரணம் சரணம்

(4877)

இவ்வண்ணம்
விழிநீர் மல்க இறைஞ்சும் மைத்துனர்
சிவஸ்ரீ கி.சோமசுந்தரக்குருக்கள் (J.P),மட்டுவில்.


# இராசி பலன்

10.06.2016
(வைகாசி 28, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சஷ்டி பின்னிரவு 3.40 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 12.21 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம்10.22-11.52 மணிவரை
சஷ்டி விரதம்

| | | | |
|---|---|---|---|
| | | சூரி புத சுக் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தராடம்,திருவோணம் பகல் 10.29 இற்கு சிம்-சந் | | சந் |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்:** வழிபாடு திருப்தி தரும் வகையில் அமையும், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் குடும்ப. பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.

**இடபம்:** பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**மிதுனம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் வந்து சேரும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்:** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், குடும்பச் சுமை கூடும், திட்டமிட்ட காரியங்களில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள், பணியில் சிறு மனஉளைச்சல் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உறவினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வழிபாடு ஆனந்தம் தரும்.

**மகரம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பிரயாண பயமுண்டு, தேகநலனில் கவனம் அவசியம்.

**கும்பம்:** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மீனம்:** கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், தேகநலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும்.

வளவன்

# இனவிடுதலைக்காக தம்மை அர்ப்பணித்தோருக்கு கௌரவமான இடத்தை கொடுக்கத் தவறிவிட்டோம்

## பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆதங்கம்



(யாழ்ப்பாணம்)

**எமது இனத்தின் விடிவுக்காக தம்மை தியாகம் செய்த போராளிகளுக்கு கௌரவமான இடத்தை கொடுப்பதற்கு நாம் அனைவரும் தவறிவிட்டோம் என பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் ஆதங்கப்பட்டுள்ளார்.**

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை மேற்கொள்ளும் விசேட கலந்துரையாடல் ஒன்று வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சரின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பொழுது தமிழ் மக்களுக்கு இரண்டு தெரிவு இருந்தது. ஒன்று சலுகைகளைப்பெற்று வாழ்வது. மற்றையது உரிமைகளுக்காக போராடுவது.

அந்த நேரத்திலே தந்தை செல்வாவும் அவருடன் சேர்ந்த சகாக்களும் தேடிய பாதை உரிமைகளுக்காக போராடுவது. இந்த உரிமைப்போராட்டம் 30 ஆண்டுகளாக சாத்வீக அடிப்படையிலே நடைபெற்றது. தலைவர்கள் எல்லோரும் இழக்க வேண்டிய அனைத்தையும் இழந்து தியாகிகளாக மறைந்தனர்.

சாத்வீக ரீதியில் உரிமை போராட்டம் நடத்தும் நேரத்தில் அரசும் அதை பக்குவமாக அணுகி இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்வராத நிலையில் அரச நடவடிக்கைகளும் அவர்களின் பயங்கரவாதமும் தலை தூக்கிய நிலையிலே இளைஞர்கள் மத்தியில் ஆயுதப் போராட்டம் தான் இதற்கு பதில் சொல்லும் என்ற முனைப்பு காணப்பட்டது.

அந்த முனைப்பின் விளைவாகத்தான் 30 வருடமாக இந்த ஆயுதப் போராட்டம் நடத்தப்பட்டது. இதில் பல்வேறு பகுதியினர் இணைந்து தம்மை அர்ப்பணித்து செயற்பட்டார்கள். இதில் ஈடுபட்ட இளைஞர்கள் தமக்காக போராடவில்லை. தமது குடும்ப நலனுக்காக போராடவில்லை. தமிழ் இனத்தின் விடிவுக்காக தம்மை மெழுகுவர்த்தி போல அழித்து போராடினார்கள். இன்று அவர்களுடைய குடும்பங்கள் நடுத் தெருவில் இருக்கின்றன. அவர்கள் செய்தது தான் உண்மையான தியாகம். இன்று பலர் தியாகம் பற்றி பேசுகிறார்கள். தியாகம் என்றால் எந்தவிதமான பலனும் அனுபவிக்காமல் ஒரு கொள்கைக்காக தங்களை அர்ப்பணிப்பதுதான்.

போராளிக்கு தெரியும் போராட்டத்தில் தான் சாவேன் என்று. மற்றவருடைய பிள்ளையை போராட்டத்துக்கு இணைய சொல்வதற்கு முன்னர் உங்களது பிள்ளைகளை போராட்டத்தில் இணைக்க வேண்டும் என்று அன்று ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்தேன். வசதியான குடும்பங்களில் உள்ளவர்கள் பல வசதிகளை அனுபவிக்கும்போது வசதி அற்ற குடும்பங்கள் தான் இந்த போராட்டத்தில் போராளிகளாகி தம்மை அழித்தார்கள்.

போராட்டம் முடிந்து விட்டது. போராட்டத்தில் என்ன நடக்கும் அதன் பிறகு என்ன செய்வது என பதை பற்றி நாங்கள் ஒருவரும் சிந்திக்கவில்லை. போராட்டத்தை நடத்தியவர்களும் சிந்திக்கவில்லை. போராட்டம் பிழைத்தால் போராளி குடும்பங்களை யார் காப்பாற்றுவது அவர்களுக்கு என்ன முடிவு என்று யாரும் சிந்திக்கவில்லை. 2009 ஆம் ஆண்டு எமது போராட்டம் ஆயுத முனையில் தோற்கடிக்கப்பட்ட நேரத்தில் இதற்கு என்ன முடிவு என்று பெருமளவு சிந்திக்க தவறிவிட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## முத்தமிழ் அரங்கம் இன்று

யாழ்.புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய தமிழ்ச் சங்கம் வழங்கும் முத்தமிழ் அரங்கம் இன்று முற்பகல் 10 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

தமிழ்ச்சங்கத் தலைவர் க.சுஜீவா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வடக்கு மாகாண தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கௌரி முகுந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக முன்னாள் அதிபர் மு.பேரின்பமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது ஆசியுரையினை வித்தியாலய அதிபர் ஏ.தவநாயகம் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

## பிராணிகளால் ஏற்படும் பாதிப்புக்களை தடுத்தல்

புகையிரதத்தில் வளர்ப்பு பிராணிகள் மோதுவதால் புகையிரதத்தின் இயந்திரம். பெட்டிகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படுவதோடு புகையிரதம் சென்றடைவதில் காலதாமதம் ஏற்படுகின்றது.

இதனால் பயணிகள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகின்றனர். எனவே வளர்ப்பு பிராணிகளை வளர்க்கும் உரிமையாளர்கள் இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்தும்படியும் அவ்வாறு கவனம் செலுத்தப்படாத வளர்ப்பு பிராணிகள் புகையிரதத்துடன் மோதும் சந்தர்ப்பத்தில் அதன் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இலங்கை புகையிரத சேவை பொது முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

## பிரம்மோற்சவ பெருஞ்சாந்தி

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் தேவஸ்தான பிரம்மோற்சவ பெரும்சாந்திப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11தினங்கள் நடைபெறவுள்ளன.

இதற்கமைய 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு வேட்டைத்திருவிழாவும் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5மணிக்கு சப்பறத்திருவிழாவும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு தேர்த்திருவிழாவும் 20ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (இ-5)

## சுகாதார நடைமுறைகளை பூரணமாக அமுல்படுத்தவும்

### மல்லாகம் நீதவான் அறிவுறுத்து

மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார நடைமுறைகளை பூரணமாக அமுல்படுத்த மல்லாகம் நீதவானால் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார நடைமுறைகளை பூரணமாக அமுல்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் மல்லாகம் நீதவான் ஏ.யூட்சன் தலைமையில் மல்லாகம் நீதிமன்றில் நடைபெற்றது.

மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட கோப்பாய், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், உடுவில், சங்கானை ஆகிய 5 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை சேர்ந்த சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை சுகாதார பரிசோதகர்கள், சுகாதார பரிசோதகர்கள் ஆகியோருடன் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் சுகாதார நடைமுறைகள் குறித்த பகுதிகளில் பூரணமாக அமுல்படுத்துவதற்கு நீதவானால் பல அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் புகைத்தல் தொடர்பான சட்டங்களை ஒழுங்கு முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அதாவது சிகரெட், பீடி, சுருட்டு, வெற்றிலையுடன் சேர்ந்த புகையிலை என்பவற்றை 80 வீத சுகாதார எச்சரிக்கை இன்றி விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் சுகாதார எச்சரிக்கை இன்றி புகைப்பொருட்களை தனியாக விற்பனை செய்வோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உணவகங்களில் மட்டுமன்றி பலசரக்கு கடைகளிலும் சுகாதார நடைமுறைகள் சமச்சீராக கடைப்பிடிக்க வேண்டும் என்பதை உறுதிசெய்ய வேண்டும். பாடசாலை சிற்றுண்டிச்சாலை சுற்றுநிருபத்தை முறையாக அமுல்படுத்த வேண்டும்.

தனியார் கல்வி நிலையங்களில் வெள்ளிக்கிழமை மாலையிலும், ஞாயிற்றுக்கிழமை காலையிலும் தரம் 9 க்குட்பட்ட மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடைபெறாமல் இருப்பது உறுதிசெய்யப்பட வேண்டும்.

கழிவகற்றல் பொறிமுறை ஒழுங்குமுறையில் நடைபெறுகின்றனவா? எனவும் அவற்றை கடைப்பிடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கால்நடைகளை ஒழுங்கு முறையில் பராமரித்தலும் கொல்கலன்கள் சுகாதார முறைப்படி அமைந்திருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

உரப்பாவனையை கட்டுப்படுத்தவும் பழக்கடைகள். சந்தைகளில் மருந்து வகை பாவிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்லுடைக்கும் ஆலைகள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பின்றி இயங்குகின்றனவா என்பதை உறுதிசெய்ய வேண்டும்.


அத்துடன் பாதுகாப்பற்ற கிணறுகள் தொடர்பாக அடையாளம் கண்டு அவற்றின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்துவதுடன் குறித்த பகுதிகளில் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் எனவும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பதவி நிலை பார்க்காமல் பாரபட்சம் காட்டாமல் குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு வழக்குகளை மன்றில் உடனடியாக தாக்கல் செய்ய வேண்டும் என்றும் இவற்றை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் நீதவானால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (இ-9)

## திண்மக் கழிவகற்றல் குறித்து நிகழ்வு



யாழ்.மாநகர சபையானது உலக சுற்றாடல் தின நிகழ்வை யாழ்.பழைய பூங்கா வளாகத்தினுள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தியிருந்தது. திண்மக்கழிவுகளை தரம் பிரிப்பீர் முகாமை செய்தலில் தரம் கோர்ப்பீர் என்ற தொனிப்பொருளில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பலர் கலந்து கொண்டிருந்தனர்.




இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 7வது ஆண்டு இரத்ததான முகாம் ஒன்று இளவாலை கலைமகள் படிப்பகத்தில் அண்மையில் இடம்பெற்றபோது...

# சிவஸ்ரீ குமாரசாமி-சுமுகலிங்கம் அவர்களின் பணி நிறைவுப் பாராட்டு மலர்-10.06.2016



குருவே துணை
அன்பே சிவம்

சைவ சமயத் தோன்றலான சுத்த சைவர், பூசகர் பரம்பரை இறையாண்மை மிக்கவர், சைவப்புலவர் சிவ ஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் சைவசிவாச்சாரியார் ஆவார்.

தந்தை வழியைத் தொடரும் பாக்கியம் பெற்றவர். எமது ஆச்சிரமத்தில் ஆன்மீக நிகழ்வுகளில் சிறுபராயம் தொடக்கம் பங்குபற்றி கல்விகற்று சைவசமய ஆசாரசீலராக ஆசிரிய மணியாக, பண்டித மணியாக, புலவர் மணியாக திகழ்கின்றார். அகவை அறுபதினை அடைவது அறிந்து மணிவிழா மலர் மலர முன்னின்று செயற்படும் அன்பர்கள் அனைவரும் சிறந்த சிந்தனையாளர்களாவர். அவ்வகை MA பட்டம் பெற்று சைவ சமய மக்களை நல்வழிகாட்டும் பண்பாளர்கள் வழியில் நற்பணி, சிவப்பணி, திருப்பணி, இறைபணி, அறப்பணி தொடரவும் தல யாத்திரைகள் சிறப்பு அமையவும் அன்பு, வழி செல்லவும் உருத்திரபுரீஸ்வரர் திருவருள் புரிய வேண்டும் எனக் குருபாதம் பணிந்து வேண்டி இறைபணி தொடர ஆசி கூறுவதும் அவன் திருவருளேயாம்.

வண. தவத்திரு ஸ்ரீமத் கணேசானந்த
மகாதேவா சுவாமிகள்,
பீடாதிபதி, மகாதேவா ஆசிரமம், கிளிநொச்சி.



சைவத்தமிழ் காவலன்

சைவத்தையும் தமிழையும் வளர்க்க காலத்துக்கு காலம் அறிஞர்களும் [illegible]னிகளும் தோன்றியுள்ளார்கள். வரலாற்றையும் விழுமியங்களையும் தமிழர்களின் பூர்வீக அடையாளங்களையும் கொண்டிருக்கும் பூநகரி மண்ணில் வேரவில் எனும் பழம்பெரும் சைவத்தமிழ்க் கிராமத்தில் வெள்ளிப் பள்ளத்து விநாயகனின் அவதாரமாய் தோற்றம் பெற்றவரே சைவப் புலவர் குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா அவர்கள் இயற்கையாலும் சூழல் தாக்கங்களாலும் இன்றும் நெருக்கடிகளைச் சந்திக்கும் சைவ சமயத்தினை காப்பதில் சுமுகலிங்கம் ஐயாவின் பங்கு மகத்தானது.

பள்ளிப் பிள்ளைகள் மத்தியில் சைவ சமயத்தின் மகிமையையும் பெற்றோர் மத்தியில் சமய சொற்பொழிவு, நற்சிந்தனை, பஜனை, கதாபிரசங்கம், பயன்சொல்லல் மூலம் சைவசமயத்தின் இருப்பை நிலைநாட்டிக் கொண்டிருப்பவர். அதன் உண்மையை உயிரோட்டமான சமய தத்துவத்தை அறநெறிப் பள்ளிகள் ஊடாக, ஆன்மீக யாத்திரைகள் ஊடாக இன்றும் சைவ சமயம் சுனாமி போல் எதிர்கொள்ளும் எதிர் தாக்கங்களை சவாலுடன் சந்திப்பதில் சுமுகலிங்கம் ஐயாவின் பங்கும் பெயரும் நீக்கப்பட முடியாதது.

1975 முதல் தொண்டராசிரியராக தனது கற்பித்தல் பணியை தொடங்கி 2000 ஆம் ஆண்டு முதல் நிரந்தர ஆசிரியராகி சைவத்தையும் தமிழையும் தன் ஆன்மாவாக கொண்டு இன்று தனது 60 ஆவது வயதில் அரச பணிக்கு ஓய்வு கொடுத்து ஆன்மீக பணிக்கு இன்னும் வேகமாய் உயிர் கொடுக்க உள்ள மணிவிழா நாயகன் சுமுகலிங்கம் ஐயா அவர்கள் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வெள்ளிப் பள்ளத்து விநாயகனை வேண்டுகிறேன்.

சி. சிறிதரன்
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம், கிளிநொச்சி.



வாழ்க பல்லாண்டு

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், சைவ சித்தாந்த முதுகலைமாணி, ஆசிரியமணி, சிவ ஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் MA. அவர்களின் அறுபது ஆண்டு அகவையினைப் வெளிவரும் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகவும் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். என்னும் எனது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய சைவசித்தாந்த முதுகலைமாணி மாணவராகிய சைவத்திரு சுமுகலிங்கம் அவர்கள் ஓர் ஆன்மீகப் பேச்சாளர். சைவசமய சமூகப்பணிகளில் முழு மூழுதாக தன்னை என்றும் ஈடுபடுத்தி வருபவர். சைவ நெறியைத் தன்வாழ்வியல் நெறியாகக் கொண்டு வாழ்ந்து வருபவர். அண்மைக் காலத்தில் சிவத்தலங்களுக்குப் பாதயாத்திரை செய்யும் பண்பாட்டை வளர்த்தெடுத்து வரும் சிந்தனையாளர். இவர் இன்னும் பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு சகல செல்வம் மிக்க பெருவாழ்வு வாழ்ந்து சைவத்தமிழ்ப்பண்பாட்டை வளர்த்தெடுக்க எங்கள் குல தெய்வமாகிய நயினாதீவு நாகபூஷணி அம்பாளின் பாதார விந்தங்களை பணிந்து வாழ்த்தி அமைகின்றேன்.


பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதன், தலைவர்,
இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.



தினம் தினம் எனது உள்ளங்கவர்ந்த மாணவன் சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் நல்லாசிரியனாக, சிறந்த சமூக சேவையாளனாக, தமிழ் உணர்வு கொண்டு ஓயாத மனிதனாக எண்ணிலடங்காத சிரமங்களின் மத்தியில் இந்து வளர்ச்சியில் மிகவும் அர்ப்பணிப்பான சேவையாற்றி அகவை 60 ஐ சென்றடைகின்ற என் அன்பிற்கும் விசுவாசத்திற்கும் உரிய என் நல் மாணவன் சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் அவர்கள் உண்மையிலே என் ஆசிரிய கலாசாலை கடமைக் காலத்திலே மிக்க அர்ப்பணிப்புடன் எல்லோருக்கும் உதவி செய்கின்ற வகையில் தனது பயிற்சி காலத்தை நிறைவு செய்தவர். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பல பயிற்சி பெற்ற நிருந்தாலும் இவரது சிறந்த உழைப்பால் பல்வேறு கலாசாலை நிகழ்வுகள் பாராட்டு கூடியவனாக இருந்ததை நினைவு கூர்ந்து பார்க்கின்றேன். சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் அவர்கள் தனது வாழ்வியலில் சமூக சுத்திற்கு ஓர் முன்னுதாரண ஆசிரியனாக இருந்து தனது கடமையை செவ்வனே நிறைவேற்றி கல்விப் புலத்தில் சிறந்த ஆசிரியனாக செயற்பட்டு வந்துள்ளார். ஆசிரியர் வரிசையில் இவர் ஓர் அசைக்க முடியாத சொத்தாகும். அன்னாரின் இனிய வாழ்க்கை எல்லோர்க்கும் நல்ல அறிவூட்டும்.

இவரது நற்பணி தொடர்ந்து கல்விப்புலத்திற்கும் சமூகத்திற்கும் கிடைக்க இறையருள் வேண்டி சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் அவர்களை இனிது வாழ்த்துகின்றேன்.

வே. கா. கணபதிப்பிள்ளை,
முன்னாள் அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.



முழுப்பெயர்:- சிவஸ்ரீ குமாரசாமி- சுமுகலிங்கம்
பெற்றோர்:- கதிரவேலு குமாரசாமி, குமாரசாமி செல்வலக்சுமி
மனைவி, பிள்ளைகள்:- இரத்தினேஸ்வரி, குருவரதன், அபிசேகசாயினி
பிறந்த இடம்:- வேரவில்
ஆரம்பக்கல்வி:- கிளி/ வேரவில் இந்து ம.வி.
இடைநிலை, உயர் கல்வி:- யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
கல்வித் தகைமை:- இளமாணி (தமிழியல்), முதுமாணி (சைவசித்தாந்தம்), கல்வி முகாமைத்துவ டிப்ளோமா, சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர், இந்து தர்மாசிரியர்.
சமய நிறுவனங்கள் சமூக நிறுவனங்கள் வழங்கிய விருதுகள். சிவ நெறித் தொண்டன், சிவப்பணிதாசன், அறநெறிக்குரு, ஜோதிதாசன், சைவசிரோன்மணி,
தேசோதய தீபம்-(Dr. ஆரியரத்தின, தலைவர், சர்வதோயம்)
சமூக திலகம் (கொட்டடி சனசமூக நிலையம், கிராம முன்னேற்ற சங்கம்)
ஆசிரியப்பணி
2000-2002- கிளி/ வேரவில் இந்து ம.வித்தியாலயம்
2002-2004- ஆசிரியர் கலாசாலை -கோப்பாய்.
2004-2008- கிளி/ வேரவில் இந்து ம.வி.
2009- இன்று வரை யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. மட்டுவில்.

பொதுப்பணிகள்
1. சாரணர்:- கௌரவ உதவி மாவட்ட ஆணையாளர்- கிளிநொச்சி.
2. இலங்கை முதலுதவிச் சங்கம்- உதவி மாவட்ட ஆணையாளர்
ஆன்மீக பணிகள்:- தீர்த்த யாத்திரை, தல யாத்திரை, ஆன்மீக பிரசங்கம்
30 இற்கும் மேற்பட்ட ஆன்மீக நூல்கள் (இலவச வெளியீடு



சமூகங்களை உயிர்ப்பிக்க சமயப்பணி
ஆற்றும் குமாரசாமி சுமுகலிங்கம்
தெய்வம் பல பல சொல்லி பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வதனைத்திலும் ஒன்றாய் ஓங்கு
பொருளானது தெய்வம்
எனும் முதுமொழிக்கேற்ப தெய்வப்பணி ஆற்றி சமூகங்களை உயிர்ப்பிக்கும் தொண்டைச் செய்து வருபவர் குமாரசாமி சுமுகலிங்கம்.

ஈழத்தமிழரின் புராதன இராச்சியம் இருந்த பூமியாகிய பூநகரி பிரதேசத்தில் அமைந்துள்ள வேரவில் கிராமத்தில் பிறந்து ஆரம்பக்கல்வியை வேரவில் இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பெற்று தொண்டர் ஆசிரியராகி, அரச பாடசாலை ஆசிரியராகி கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் M.A. சைவசித்தாந்தம் பயின்று பட்ட மேற்படிப்பு பட்டங்களையும் பெற்று இன்று ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறும் சுமுகலிங்கம் சமூகத்தொண்டுக்காக சமயப்பணி ஆற்றி வருபவர். வேரவில் வெள்ளிப் பள்ளத்து வீரகத்தி விநாயகர் கோவில், திருப்பணியோடு பொன்னாவெளி சிவன் கோவில், கிராஞ்சி முருகன் கோயில் என பல்வேறு கோவில் திருப்பணிகளோடும் தம்மை ஈடுபடுத்தி வருபவர்.

அதுமட்டுமல்லாமல் சாயி பக்தனாகி, ஐயப்ப பக்தனாகி மக்களை பக்திப்பரவசத்தில் ஆழ்த்தும் நோக்கோடு சமயப் பிரசங்கங்களை மேற்கொண்டு வருபவர். அவரது சமய, சமூக, கல்விப் பணிக்காக பல்வேறு விருதுகளையும் பட்டங்களையும் பெற்று சிறப்புடன் வாழ்ந்து வரும் பெரியவர், குமாரசாமி தம்பதிகளின் மூத்த மைந்தனாக குடும்பச் சிறப்புக்களையும் செவ்வனே ஆற்றி வருவது பாராட்டத்தக்கது. மேலும் மேலும் இறைபணியை கல்வி, சமூகப்பணியூடாக செய்து மக்களை உயிர்ப்பிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன்
சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ்ப்பாண் பல்கலைக்கழகம்



சைவ சமயத் தொண்டன்

எமது தென்மராட்சி கல்வி வலயத்தில் சைவ சமயத்தைக் கற்பித்து வரும் ஆசிரியர்களில் சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் அவர்கள் தனித்துவமானவர். சமய ஆசிரியர் அந்தச் சமயத்தின் பிரதிபலிப் புகளுடன் வாழ்ந்து காட்டுவத னூடாக மாணவர்களினதும் சமூகத்தினதும் முன்மாதிரியாகத் திகழ்ந்து அவர்களை நல்வழியில் மாற்றமுடியும். இதற்கேற்ப சுமுகலிங்கம் அவர்கள் சைவ சமய நெறியில் ஒழுகுபவராக நான் கண்டு மகிழ்ந் திருக்கின்றேன்.

சில காலங்களில் ஐயப்பன் பக்தனாகவே நடமாடுவார். தனது பிள்ளைகளையும் சைவ சமய வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபடுத்தியுள்ளார் என்பதை அறிந்துள்ளேன். ஆசிரியர் ஒருவர் என்றுமே கற்றுக் கொண்டிருக்க வேண்டும், புதிய விடயங்களையும் அனுபவங்களையும் இற்றைப்படுத்திய வண்ணம் இருக்க வேண்டும். இதற்கமைவாக சுமுகலிங்கம் அவர்கள் இலங்கையில் இருக்கக் கூடிய சைவ நெறி சார்ந்த உயர் பரீட்சைகளில் எல்லாம் தேர்ச்சி அடைந்தும் சைவ சித்தாந் தத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றும் தொடர்ந்தும் தனது வாண் மையை விருத்தி செய்து வருவதை எண்ணியும் அகமகிழ்ந்திருக்கின்றேன்.

கிளிநொச்சியில் வேரவில் இந்துக் கல்லூரி, பூநகரி மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் ஆசிரிய பணியை ஆற்றிய இவர் எமது வலயத்தில் கடந்த பத்து வருடமாக ஆசிரியப் பணியை பாராட்டத்தக்க வகையில் ஆற்றி வருகின்றார். மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் சுமுகலிங்கம் அவர்களை தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளை மனமுவந்து பாராட்டுவதுடன் மேலும் ஓய்வு காலத்தில் எமது சமூகத்திற்கு நற்பணிகளைத் ஆற்ற வேண்டும். அதற்கு இறைவனையும் வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

திரு. சு.கிருஷ்ணகுமார் வலயக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி கல்வி வலயம், சாவகச்சேரி.



முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி

சமய, சமூகப் பணியாளர் சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் அவர்கள் அகவை அறுபதை எய்தி மணிவிழா காணும் இத்தினத்தில் அவரை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன். இன்றைய சமூகத்திற்கு ஆன்மீக வழிப்படுத்தல் மிகவும் அவசியமாக இருக்கின்றது. இந்தத் தேவையை நிறைவு செய்யக் கூடியவராக, வழிப்படுத்தக் கூடிய வல்லமை பெற்றவராக சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் அவர்கள் விள ங்குகின்றார்கள். ஆன்மீக ரீதியாக தன்னலம் கருதாது இறைபணி செய்து வரும் இவர் சமய தீட்சை, தீர்த்த யாத்திரை, தல யாத்திரை, ஆலயங்க ளில் சமயப் பிரசங்கங்கள், நேரடிவர்ணணைகள் மூலம் ஆன்மீகவழிப்ப டுத்தல்களை மேற்கொண்டு வருவது நாம் அனைவரும் அறிந்ததே.

அவரது ஆன்மீக முயற்சிகளில் பல புத்தகங்களை எழுதி அச்சிட்டு இலவசமாக வழங்கியது மட்டுமல்லாமல் நல்லூரில் இருந்து திருக்கேதீச்சரம் வரையான பாதயாத்திரை ஒன்றை ஒழுங்கு செய்திருந்தமையை நினைவு கூரும் இச் சந்தர்ப்பத்தில் அவரின் அன்பான வேண்டுதலை மறுக்க முடியாது அப்பாத யாத்திரையை நானே நல்லூரில் இருந்து தொடக்கி வைத்திருந்தமையும் இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருகின்றேன்.

அவர் சைவசமயத்தின் பால் கொண்டிருந்த அதீத ஈடுபாடு காரணமாக சைவ சித்தாந்தப் பண்டிதர், சைவப் புலவர் ஆகிய சிறப்புப் பட்டங்களையும் பெற்றிருந்தார்.

இத்தகைய ஒருவர் எம்முடன் சமயப்பணிகளில் ஈடுபட்டு சைவத்தையும் தமிழையும் வளர்க்க பாடுபடும் இக் கைங்கரியம் எமக்கு பெருமை தருவதாகும். அவர் அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் தொடர்ந்து ஆன்மீகப் பணிகளில் ஈடுபட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர், வடமாகாணம்.



சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் அவர்கள் ஈழ நாட்டின் பழம் பெரும் ஊரான வேரவில் பிரதேசத்தைச் சார்ந்தவர். தனது ஊரிலே தமிழையும் சைவசித்தாந்தத்தையும் பாலகனாக இருந்த காலத்திலேயே கற்று ஆராய்ந்தவர்.

தனது மூதாதையினரின் வழிநடத்தலில் சிறுவயது முதலே இறைவனின் ஒரு பக்தனாக மாறுவதற்கு தன்னை அர்ப்பணித்தவர்.

சொந்த ஊரில் வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் தனது கல்வியைத் தொடர்ந்து பின்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உயர் தரத்தைக் கற்று வெளிவாரிப் பட்டதாரியாக பட்டப் படிப்பை கற்று பட்டதாரியாக திகழ்ந்து, தனது ஊரிலே தொண்டர் ஆசிரியராக கல்வி கற்பித்து கடின உழைப்பால் ஆசிரியர் சேவையில் நியமனம் பெற்றவர். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத்தில் முதுநிலைப் பட்டம் பெற்றதோடல்லாமல் சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர், இந்து தர்மாசிரியர் என்ற பல பட்டங்களைப் பெற்ற சைவத் தமிழ்த் தொண்டன்.

மட்டுவில் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக பணியாற்றி இன்று இளைப்பாறுகை காணும் ஆசானை இத்தருணத்தில் பாராட்டுவதில மகிழ்வடைகின்றேன்.

முப்பத்திற்கும் மேற்பட்ட ஆன்மீக நூல்களைத் தொகுத்து அவற்றை இலவசமாக வெளியிட்டதோடல்லாமல் பல சமய விழாக்களிலே நேரடி வர்ணனையாளராக தனது முத்திரையைப் பதித்துள்ளார்.

அதனோடல்லாமல் தன்னை முற்றிலுமாக சிவத்தொண்டனாக மாற்றிய நிலையில் ஆசிரியப் பணியிலிருந்து இளைப்பாறுகை காணும் சிவ ஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் அவர்களின் பணி மேலும் விரிவடைய வேண்டும் என்று மலர் ஊடாக வாழ்த்துவதோடு நோய்நொடியற்ற வாழ்வை வாழ இறைவனை வேண்டி எனது நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

திரு. த.குருகுலராசா,
கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர், வடக்கு மாகாணம்.



சிறப்பான கடமையால் நிறைவு
காணும் பண்பாளன்

உற்ற துணையாய், உடன் பிறவா சகோதரனாய், பற்றுறுதிமிக்க சேவையாளனாய், பாங்குடன் பணியாற்றிய நல்லாசான்- சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் அவர்கள் தன் அறுபதாவது வயதை நிறைவு காணும் இந் நாளில் அன்னாரோடு கடமையாற்றிய இனிய நாட்களை எண்ணிப் பார்க்கிறோம். ஈடில்லாப் பெருமிதத்தில் இதயம் நிறைகிறது. கிளி/வேரவில் இந்து ம.வி. இன் வளர்ச்சிக்காய், உயர்ச்சிக்காய் அவர் ஆற்றிய பணிகள் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவை. இடப்பற்றாக் குறை காரணமாக பாடசாலையை புதிய இடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட போது சிவஸ்ரீ சுமுகலிங்கம் அவர்கள் அதிபரின் வலக்கரமாகவும் அங்கு பணியாற்றிய 45 ஆசிரியர்கள், பணியாளர்களின் வாஞ்சை மிகு சகோதரனாயும் இருந்து ஆற்றிய வளம் மிக்க பணிகள் காலத்தால் அழியாதவை.

1975 ஆம் ஆண்டு வேரவில் இந்து ம.வி. இல் NCGE தரத்தை ஆரம்பிக்க ஆசிரியர்கள் இல்லாத வேளை அதிபர் இளையதம்பி அவர்களின் வேண்டுதலினால் சாவ. இந்துக்கல்லூரி உயர்தர கணிதப் பிரிவில் கற்றுக் கொண்டிருந்த அவர் கணித, விஞ்ஞான ஆசிரியராக ஆசிரியர்கள் நியமிக்கப்படும் வரை பல வருடங்கள் தொண்டராசிரியராக பணியாற்றினார்.

பின்னர் 1991 இல் பூநகரி ம.வி. இடம்பெயர்ந்து ஜெயபுரத்தில் இயங்கிய போது ஆசிரியர் இல்லாதபோது மீண்டும் கணித, விஞ்ஞான தொண்டராசிரியராக பெரும்பணி புரிந்தார்.

வேரவில் மண் தந்த இந்த முத்து வேரவில் இந்து ம.வி. இன் விலை மதிப்பற்ற சொத்து என்று சொல்வதே சாலவும் பொருந்தும். தனது பரந்துபட்ட பணிகள் காரணமாக இவருக்கு வழங்கப்பட்ட பட்டங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல. அத்தனைக்கும் அப்பால் இவ் வேளையில் இப் பெருமகனாருக்கு நாம் வழங்கும் பட்டம் "மனிதன்" என்பதாகும்.

வேரவிலிற்கு கடமையாற்ற வரும் வெளி மாவட்ட ஆசிரியர்களுக்கு தனது வீட்டில் உணவும் உறையுளும் வழங்கி உபசரித்த உயர் குடும்ப பாரம்பரியம் கொண்டவர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கனியன் பூங்குன்றனாரின் வரிகளுக்கு வலுச்சேர்த்த இந்த மனிதன் பல்லாண்டு காலம் நிறை வாழ்வு வாழ அவர் சேவைகள் யாவும் சிறப்புற இதயம் நிறைந்த அன்போடு இறையாசி வேண்டி வாழ்த்துகிறேன்.

துரைராசா இளங்குமரன் முன்னாள் அதிபர்
கிளி/வேரவில் இந்து ம.வி. விரிவுரையாளர்-யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற்கல்லூரி.

வாழ்த்துவோர்
2005-2009 காலப்பகுதியில்
ஆசிரியருடன் கடமையாற்றிய
அதிபர், ஆசிரியர்கள்
கிளி/வேரவில் இந்து ம.வி

# 'சர்வதேச சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு தினம்' அனைத்து பாடசாலைகளிலும் அனுஷ்டிக்கப்படும்


சர்வதேச சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு தினமாக ஜூன் 12 ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) அனுஷ்டிக்கும் முகமாக நாடு தழுவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களின் காலை ஒன்றுகூடல் நிகழ்வில் (13 ஆம் திகதி திங்கட்கிழமை) சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு தினத்தை அனுஷ்டிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எம்.பந்துசேன அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சர்வதேச சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு தினமான ஜூன் 12 ஆம் திகதியை ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தொழிலாளர் கூட்டமைப்பின் அங்கத்துவ நாடாக சிறுவர் உழைப்பை கண்டிப்பது தொடர்பான ஒப்பந்தத்திற்கு 2006 ஆம் ஆண்டில் இலங்கை உடன்பட்டுள்ளது.

14 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது மற்றும் 14 தொடக்கம் 18 வரையான வயதைக் கொண்ட பிள்ளைகளை அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவது நன்றன்று என்பதோடு அனைத்து பிள்ளைகளுக்கும் அவர்களுடைய ஆரம்ப கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் பூர்த்தி செய்வதற்கு தேவையான சந்தர்ப்பம் வழங்குவது அனைவரதும் பொறுப்பும் கடமையுமாகும்.

இதன் பிரகாரம் இம் மாதம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை நாடு தழுவிய ரீதியிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் காலை ஒன்றுகூடலின் போது சிறுவர் உழைப்பைக் கண்டிக்கும் வகையிலும் சிறுவர் உரிமையை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை விளக்கும் வகையிலும் கருத்துரைகளை வழங்குவதற்கு ஒழுங்கமைப்பை மேற்கொள்வதுடன் சிறுவர் உரிமை தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தை பாடசாலை மாணவர்கள் பார்வையிடுவதற்கும் அறிந்து கொள்வதற்கும் ஏற்பாடு செய்யுமாறு அவர் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (2-15)




அவுஸ்திரேலிய தமிழ் அன்பர் ஒருவரினால் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு மடிக் கணனிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. இதற்கமைய கிளி/ புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலை - 2, கிளி/பரந்தன் அ.த.க. பாடசாலை- 1, கிளி/ சிவபாத கலையகம் அ.த.க. பாடசாலை 2, கிளி/ இராமகிருஷ்ண வித்தியாலயம்-1, கிளி/ சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்-1 ஆகும். (படம்: உருத்திரபுரம் செய்தியாளர்)

# பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த முன்.உப தலைவரை பிணையில் செல்ல அனுமதி

சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்களை கைது செய்யச் சென்ற பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த முசலி பிரதேச சபையின் முன்னாள் உப தலைவரை பிணையில் செல்ல மன்னார் நீதிமன்றம் கடந்த 7 ஆம் திகதி அனுமதி வழங்கியது.

பொலிஸாருக்கு கடமையின் போது இடையூறை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட நிலையில் முசலி பிரதேச சபையின் முன்னாள் உப தலைவருக்கு எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்த நிலையில் குறித்த நபரை கைது செய்த பொலிஸார் மன்னார் நீதிமன்றில் கடந்த 7 ஆம் திகதி ஆஜர்படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ் ராஜா குறித்த நபரை 50 ஆயிரம் ரூபாய் சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார்.

மன்னார்-மல்வத்து ஓயா ஆற்றுப் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி சட்டவிரோதமாக மண்ணகழ்வு இடம் பெற்று வருவதாக வன்னி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அங்கு சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்ட போது முசலி பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் பொலிஸாரின் கடமைகளை செய்ய விடாது இடையூறை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையிலே அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே குறித்த நபரை பிணையில் செல்ல நீதவான் அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (2-4)

# மாகாண மட்ட விளையாட்டு போட்டிகளின் திகதிகளில் மாற்றம்

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் எல்லே, உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ள திகதியில் மாற்றம் தொடர்பாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

19 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான எல்லே போட்டி எதிர்வரும் 26, 27, 28 ஆகிய திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

17,19 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் 8,9,10 ஆகிய திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி, யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் நடைபெறும்.

15,17,19 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் 9,10,11 ஆகிய திகதிகளில் யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறும்.

19 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான எல்லே போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் 10,11,12 ஆகிய திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இதேவேளை உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் ஏனைய வயது பிரிவுகளுக்கான போட்டிகள் மற்றும் ஏனைய விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன்படி நடைபெறுமென அவர் அறிவித்துள்ளார். (2-15)




# மன்னாரில் கம்பன் விழா

(மன்னார்)

மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கிய மன்றம் நடத்தும் கம்பன் விழா -2016 எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு , மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியின் கலாமண்டபத்தில் சடையப்ப வள்ளல் அரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழறிஞர் தமிழருவி த.சிவகுமாரன் முன்னிலை வகிக்க மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கிய மன்ற பொதுச் செயலாளர் சோ.றோகன்ராஜ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.இரகுபரன், சிறப்பு விருந்தினர்களாக, மன்னார், முசலி, நானாட்டான்,மடு ஆகியவற்றின் பிரதேசச் செயலாளர்கள் முறையே கே.எஸ்.வசந்தகுமார், செ.கேதீஸ்வரன்,எம்.பரமதாசன், எம்.என். சத்தியசோதி ஆகியோருடன் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. செ.வனஜா, மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்ரியன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

விசேட விருந்தினர்களாக, மன்னார் கலையருவி இயக்குநர் அருட்பணி தமிழ்நேசன் அடிகள், மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் செயலாளர் பிரம்மஸ்ரீ.மனோ ஐங்கரசர்மா,மன்னார் சர்வ மதப் பேரவையின் தலைவர் ஜனாப்.அசீம் மௌலவி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் ஏ.ஐ.தயானந்தராஜா,மன்னார் புனித சவேரியார் கல்லூரியின் அதிபர் அருட் சகோதரர் ச.இ.றெஜினோல்ட், மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியின் அதிபர் த. தனேஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக மன்னார் மாவட்டத்தின் பல நிறுவனங்களின் பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்விழாவில், இவ்வாண்டுக்கான "கம்பன் புகழ் விருது" வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகர், தமிழ் கூறும் நல்லுலகெங்கும் தன் நாவன்மையால் பெரும்புகழ் பெற்ற தமிழறிஞர் தமிழருவி த.சிவகுமாரனுக்கு வழங்கப்படவுள்ளது.

விழா நிகழ்ச்சிகளின் வரிசையில் தமிழ்த் தாய் வாழ்த்தினை செல்வி.கே.சரண்சிகா குழுவினரும் வரவேற்பு நடனத்தினை மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி மாணவர்களும் வரவேற்புரையினை மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கியமன்றத்தின் நிதிச் செயலாளர் பா.சதீஸும் அரங்கத் ஆகியோர் நிகழ்த்துவாரகள்.

தலைமையுரையைத் தொடர்ந்து வாழ்த்துரையினை மன்னார் கல்வி வலய ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.எம். சிமியானும் கம்பன் இசையாராதனையை சங்கீத ஆசிரியர்களும் வழங்குவார்கள்.

அதனைத் தொடர்ந்து. சிறப்புப் பட்டி மண்டபம் இடம்பெறும். இராமாயணம் காட்டும் வாழ்வியல் நற்பண்புகள் தற்காலத்தில் நிலைத்து நிற்கின்றனவா? நிலையிழந்து போகின்றனவா?" என்னும் தொனிப் பொருளில் இடம் பெறும் பட்டி மண்டபத்தில், சோ.றோகன்ராஜ், மகா தர்மகுமார சர்மா, ச.றமேஸ், பா.சதீஸ், எஸ்.சதீஸ், ஆ.பாலசிங்கம் ஆகியோர் உரையாற்ற தமிழருவி த.சிவகுமாரன் நடுவராகக் கடமையாற்றுவார்.

மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி வழங்கும் நடனம், "இராமபாணம்" நாடகம் ஆகியவற்றோடு கௌரவிப்பும் பரிசளிப்பும் சான்றிதழ் வழங்கல் என்பனவும் இடம்பெறும். பேசாலை பாத்திமா மகாவித்தியாலய மாணவிகளின் தமிழ்மொழி வாழ்த்துடன் கம்பன்விழா நிறைவடையும். (2)

# இந்திய மீனவர்கள் ஆறுபேர் கைதாகினர்

( மன்னார் )

இலங்கை கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 6 பேர் நேற்று வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். தலைமன்னார் வடக்கு கடற்பகுதியில், மீன்பிடித்துக் கொண்டிருந்த போதே இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் பயன்படுத்திய ரோலர் படகையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட மீனவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட கடற்படையினர், மேலதிக நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் மீன்பிடி பரிசோதகர் அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.(2)

## நான்கு தடவைகள் அபராதம் விதித்தும்

# ஐந்தாவது தடவையாக 4 கசிப்பு போத்தல்களுடன் பெண் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் ஐந்தாவது தடவையாக, நான்கு போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு இரண்டு மாதங்கள் கட்டாயச் சிறைத் தண்டனையும், ஒரு இலட்சம் ரூபாய் அபராதமும் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் நான்கு போத்தல் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பிரஸ்தாப பெண்ணை கடந்த 7ஆம் திகதி கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

மேற்படி பெண் ஏற்கனவே 4 தடவைகள் கசிப்புடன் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் 75 ஆயிரம் ரூபாய், ஆயிரத்து 500 ரூபாய், 15 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் என அபராதம் விதிக்கப்பட்டிருந்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் நீதிமன்றத்தால் விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், அதனையெல்லாம் கருத்தில் கொள்ளாத குறித்த பெண், மீண்டும் கசிப்பு வியாபாரத்தில் தொடர்ந்து ஈடுபட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார். (2)

# சைகை மொழிபெயர்ப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திற்கு சைகை மொழிபெயர்ப்பாளராக செல்வி.நிசந்தினி அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறும் பொது நிகழ்வுகளில் வாய்பேசாதோர் பங்குபற்றும் போது சைகை மொழி பெயர்ப்பை இவர் வழங்குவார்.

இவரது சேவைகள் தேவைப்படுவோர் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் 021 228 3363 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்திற்கு அருகாமையில் இயங்கும் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-254)

# மயிலிட்டியில் ஆயுதக்கிடங்கை வைத்துக்கொண்டு துறைமுகத்தை செயற்படுத்தாமல் இருப்பது அநியாயம்

## வடக்கு மாகாண முதலமைச்சர் ஆதங்கம்

மயிலிட்டியில் ஆயுதங்கிடங்கை வைத்துக் கொண்டு எங்களுக்குரிய இயற்கையான துறைமுகத்தை செயற்படாமல் வைத்திருப்பது அநியாயமானது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா உள்ளூராட்சி திணைகளத்தின் அதிகாரிகளுடன் வவுனியா உள்ளூராட்சி திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு பகுதியில் உள்ள இராணுவ முகாம் தொடர்பாக இராணுவ அதிகாரிகளுடன் பேசியிருக்கின்றேன். இராணுவத்தை முற்றுமுழுதாக அகற்றவேண்டும் என்பதையும் நான் தொடக்கத்தில் இருந்து கூறிவருகின்றேன். ஒரு காலத்தில் இலங்கையின் மீன் தேவையில் மூன்றில் ஒரு பங்கை மயிலிட்டியில் இருந்து வழங்கி வந்தோம். ஆனால் தற்போது அதனை முழுமையாக மூடியுள்ளார்கள். இதனை திறக்குமாறு கூறிய போது பல காரணங்களை கூறிவந்து கடைசியாக ஆயுதக் கிடங்கு அங்கு உள்ளதாக காரணம் சொல்லப்பட்டுள்ளது.

எனவே அதனை மயிலிட்டியில் இருந்து மாற்றுமாறு இராணுவ அதிகாரி மகேஸ் சேனநாயக்கவுக்கு நான் கூறியிருந்தேன். அதற்கு சில காலம் எடுக்கும் என ஒரு மாதத்திற்கு முன்னர் சொல்லியிருக்கின்றார். ஆகவே கொஸ்கம போன்று இங்கு நடந்துவிட்டால் எங்களுடைய இடங்கள் எல்லாம் பாழாய்போய்விடும். எனவே நடந்தது வருந்தத்தக்கது என்றாலும் எங்களுக்கு நல்லதொரு படிப்பினை. மக்கள் இருக்கும் இடங்களில் இவ்வாறான இடங்களை வைப்பதனால் வரும் பாதிப்பை இதில் இருந்து நாம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. என்னவாக இருந்தாலும் ஆயுதக்கிடங்கை மயிலிட்டியில் வைத்துக்கொண்டு எங்களுக்கு உரிய இயற்கையான துறைமுகத்தை செயற்படாமல் வைப்பது அநியாயமான ஒன்று. ஆகவே இதற்கு நாம் எங்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றோம்.



இதேவேளை தாண்டிக்குளம் பொருளாதார மத்திய நிலையத்திற்கும் நாங்கள் புதிய இடத்தை தெரிவு செய்துள்ளோம். அதனை அரசாங்கத்திற்கும் கூறியுள்ளோம். அது அவர்களின் கவனிப்புக்கு உள்ளாகியுள்ளது. அநேகமாக இந்த வாரத்தில் எங்களுக்கு தெரியவரும். அத்துடன் இன்றைய கூட்டத்தில் முதலமைச்சருடைய அமைச்சு தொடர்பான விடயங்களை ஆராய்ந்தோம். இந்த வருடத்திற்கு செய்ய வேண்டிய வேலைகள் உள்ளன. கடந்த வருடமும் நாம் செய்யவில்லை என கூறிவருகின்றனர். எனினும் கடந்த வருடம் 95 சதவீத்திற்கு மேல் நிதியை செலவிட்டுள்ளோம்.

அதனடிப்படையில் இந்த வருடம் முன்கூட்டியே வேலைகளை செய்வதற்கு தீர்மானித்துள்ளோம். அதற்கான மீளாய்வை தற்போது செய்துள்ளோம். அதில் எமக்கு திருப்திகரமாக இல்லை. எனினும் அதற்கான உரிய நடவடிக்கைகளை செய்யவேண்டும் என கலந்துரையாடியுள்ளோம். மழைகாலம் வருவதற்கு முன்னர் பல விடயங்களை செய்ய வேண்டியுள்ளது.

கட்டாயமாக இம் முறை நிதி செலவழிக்கப்படும். கடந்த வருடமும் 95 சதவீதத்திற்கு மேல் செலவு செய்து விட்டோம். ஆகவே இம் முறை நூற்றுக்கு நூறு வீதம் செய்ய வேண்டும் என்பதே எமது இலக்கு. இதற்காக கொழும்புடன் சம்பந்தப்படுத்தி பணத்தை முன் கூட்டியே தருமாறு கோரிக்கை விடுக்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இனி குறிப்பிட்ட வேலைகளை செய்து முடித்தால் சரியாக இருக்கும்.

எனினும் போதுமான நிதியை மத்திய அரசிடம் கேட்டும் கிடைப்பதில்லை. ஆனாலும் கிடைப்பதை வைத்து செய்யக்கூடியதை செய்கின்றோம். பல திட்டங்களுக்கு கீழ் பல நிதி சிறிதுசிறிதாக வருகின்றது. அதனை பயன்படுத்துகின்றோம். 10 மில்லியன் ரூபா கூட இரண்டு கிழமைக்கு முன்னர்தான் வந்துள்ளது. அவ்வாறு சில நிதிகள் வந்துகொண்டுள்ளது. எனினும்நாம் வேலைகளை செய்து முடிப்போம் என தெரிவித்தார். (2-250)




# போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உள ஆற்றுப்படுத்தல் வழங்கப்படவேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உள ஆற்றுப்படுத்தல் விரைவில் வழங்கப்பட வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்துவதற்கான செயற்பாட்டு நிலையம் ஒன்றினை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம்அருமைநாயகம்தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்ட கோரிக்கையை முன் வைத்தார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மீள்குடியேற்றப் பிரதேசங்களில் வீதி அபிவிருத்திகள், திணைக்களக் கட்டடங்கள், உட்கட்டுமான வசதிகள் போன்ற அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். இத்தகைய அபிவிருத்திகளை மேற்கொண்டாலும் சமூகத்தில் அபிவிருத்தி முன்னெடுப்பில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது.

இந்த நிலையில் தற்போது நல்ல ஓர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதாவது உளவளத்துறை சமூக மேம்பாடுகள் தொடர்பாக உள்ளூரில் உள்ள வளவாளர்களை வளப்படுத்தி அவர்கள் மூலம் மக்களுக்கான உள ஆற்றுப்படுத்தல்களை மேற்கொள்வதாகும். இதன்மூலம் பாதிக்கப்பட்டவர்களின் மன நிலைகளை ஓரளவு ஆற்றுப்படுத்தமுடியும் என்ற அடிப்படையிலேயே இந்த வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உளவளத்துறை நிலையத்தைச் சேர்ந்த வைத்தியர் தர்சன் பெரேரா, கரைச்சி, கண்டாவளை, பூநகரி ,பச்சிலைப்பள்ளி, ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடமையாற்றும் பெண்கள், சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர், கிளிநொச்சி மாவட்ட உதவிப்பிரதேச செயலாளர் ரீ.பிருந்தாகரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2)

# கிராம அபிவிருத்தி சங்கத்தை சீராக இயக்கி கிராமத்தின் வளர்ச்சிப் பாதைக்கு உதவுங்கள்

## முள்ளியவளை கிராம மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட முள்ளியவளை வடக்கு கிராமத்தின் கிராம அபிவிருத்தி சங்கத்தினை சீராக இயங்க வைத்து குறித்த கிராமத்தின் அபிவிருத்திக்கு உரிய அரச அதிகாரிகள் வழி ஏற்படுத்த வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை ஒன்றை விடுக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சுமார் 350 இற்கு மேற்பட்ட குடும்பங்களை உள்ளடக்கிய குறித்த கிராமத்தில் கிராம அபிவிருத்தி சங்கமானது சீராக இயங்காமை, கிராமத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் இடையூறான விடயமாக காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். தற்போது இக்கிராமத்தில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கமானது சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பு தெரிவு செய்யப்பட்ட போதும் இதுவரையும் கிராமத்தில் உள்ள அனைத்து மக்களையும் அதாவது கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஒரு பொதுக்கூட்டத்தையேனும் கூட்டி மக்களின் கருத்துக்களை பெறக் கூட நிர்வாகத்தில் உள்ளவர்கள் முயற்சிக்கவில்லை.

கடந்த வருடம் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட ரூபா பத்து இலட்சம் பெறுமதியான 100 மீற்றர் தூரமான கொங்கிறீற் வீதி அமைத்தலுக்கான கணக்கு விபரங்கள் கூட இற்றைவரைக்கும் நிர்வாக உறுப்பினர்களுக்கோ பொதுமக்களுக்கோ காட்சிப்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்விடயங்கள் தொடர்பில் பொது மக்களால் பல தடவை உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என பொதுமக்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே குறித்த அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்து கிராமத்தை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச்செல்ல முன்வரவேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)

# வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்குவதற்கு பயனாளிகளின் விபரங்களை பெறும் கலந்துரையாடல்

## வவுனியாவில் நேற்று நடைபெற்றது





(குருமன்காடு)

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்குவதற்கான பயனாளிகளின் தொழில் தொடர்பான விபரங்களை பெறும் முகமாக கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா கிராம அபிவிருத்திச் சங்க கேட்போர் கூடத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்ட புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள், யுத்தத்தில் பிள்ளைகளை இழந்த குடும்பங்கள் என தெரிவு செய்யப்பட்ட நூறு பயனாளிகளுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலான திட்டங்கள் தொடர்பில் பயனாளிகளிடம் இருந்து அவர்களது தேவைகள் தொடர்பிலான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அவர்களுக்கான உதவித்திட்டம் விரைவில் வழங்கப்படவுள்ளது. ஒருவருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வீதம் இந்த உதவித்திட்டம் வழங்கப்படவுள்ளது.

இதில் வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராஜா, ஜி.ரி.லிங்கநாதன், ஜெயதிலக, அமைச்சரின் மாவட்ட இணைப்பாளர் செந்தில்நாதன் மயூரன், கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் மற்றும் கிராம அபிவிருத்திச் திணைக்கள உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(2-250)

# கோத்தபாய வந்தால் வீதியிலிறங்குவோம்

## அசாத் சாலி எச்சரிக்கை



(கொழும்பு)

**ராஜபக்ஷ குடும்பத்தினரை (கோத்தபாய உள்ளிட்டவர்களை) அரசாங்கத்துக்குள் இணைத்துக்கொண்டு நல்லாட்சியை கொண்டு செல்ல முடியாது. அவ்வாறு நடந்தால் வீதியில் இறங்கி போராடுவோம் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி எச்சரித்துள்ளார்.**

நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்குவதற்கு இடமளித்தால் பாரிய பிரச்சினை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுவோம் இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கோத்தபாய ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் இரண்டாம் இடத்துக்கு கொண்டு வருவதற்கு பேச்சுவார்த்தை நடைபெறுவதாக அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

ஆனால் அவ்வாறு எந்த முயற்சியும் இடம்பெறவில்லையென கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் சர்வதேச தலைவர்கள் ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்து வருவதை பொறுத்துக் கொள்ளாத ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்குள் இருக்கும் சிலர் ஜனாதிபதியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர்.

அதனால்தான் இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-10)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா:23சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்A/L/சொந்ததொழில<br>தொ.இ: B/5908 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 79செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L லண்டன் PR<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5921 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 22<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L சுவிஸ் PR<br>தொ.இ: B/5909 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:54<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:Diploma/முன் பள்ளிஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5928 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 44செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்A/L/சொந்த தொழில<br>தொ.இ: B/5912 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 59சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5932 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 50<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்A/L/சொந்த தொழில<br>தொ.இ: B/5913 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி:பா: 57செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: கணனி பொறியியலாளர் கனடா<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: G/5942 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


### மஹோற்சவம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி காட்டுமலைக் கந்த சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணிக்கு கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12தினங்கள் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாம் பழத் திருவிழாவும் 30ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7மணிக்கு கைலாச வாகன உற்சவமும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை திருக்கார்த்திகை உற்சவமும் 2ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7மணிக்கு சப்பறத்திருவிழாவும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு தேர்த் திருவிழாவும் 4ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.(இ-5)

## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு ஐந்தாம் திருவிழா



### கடைக்கண் பாரம்மா

அலைகடல் நடுவே அனுதினம் வீற்றிருந்து
அகிலத்தை காத்திட அவதரித்த நாயகியே
கொலைகள் ,கொள்ளைகள் அகல
கொடியோர் செயல் மறைய
கடைக்கண் பாரம்மா-நம்
கவலைகள் தீர அருள் தாருமம்மா
அன்புள்ளம் கொண்டோர்
அவதியுறும் நிலைகண்டு
அவர் துயர் துடைத்து
அருள் தந்து நலம் சேர்ப்பாய்
நாடி வரும் அடியார்கள்-நலம்
நினைந்து உனை வணங்க
நாளும் அருள் தந்து காத்திடுவாய்
நயினை ஆளும் நல் நாயகியே

சுழிபுரத்தூர்,
க.சிவகுமார்.

### நாகதோச நிவர்த்தி


நயினையம்பதி நாயகியே
நலம் யாவும் அளிக்கும் குணவதியே
நல்ல பாம்பு குடைபிடிக்க நல்லாட்சி புரிபவளே
நாகதோசத்தை நிவர்த்தி செய்பவளே
நயினைப் பட்டர் பூசை செய்த ஊராம்
நயினார் தீவு நாக கன்னியே
நாகம் வழிபட நாகபூஷணி எனப்பெயர் பெற்றவளே
நல்லாட்சி நடந்தேற நல்வழி காட்டிடம்மா

வ.பவளகேசி,
கொய்யாத்தோட்டம்.

### நற்பேறினைத் தந்தருள்வாய்

நயினையில் வீற்றிருந்து நல்லாட்சி புரியும்
நாகபூஷணித்தாயே ...கருணையின் வடிவே
கருமாரித்தாயே...அருவுருவில்லா அண்டமா
சக்தியே... வருமுன் அடியார் துயர் நீக்கிவரமருளும்
ஆனந்த வல்லியே-ஒரு முகமானவளே ஓங்கார
சக்தியே..நற்பேறினைத் தந்தருள்வாய் நயினையின்
நாயகியே நாகம் பூஜித்த நாகவல்லியே

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.



## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# இரக்கமில்லா இரசாயனங்கள்...

கட்டுரைக்குள் நுழைய முன் இரசாயனவியலாளர்களிடம் ஓர் தாழ்மையான வேண்டுகோள்., இத் தலைப்பைப் பார்த்ததும் தயவு செய்து என் மீது கோபம் கொள்ள வேண்டாம்.நிச்சயமாக இக்கட்டுரை உங்கள் முன்னேற்றத்திற்கு முள்ளுப் போடுவதாகவோ முகம் முறிக்கச் செய்வதாகவும் அமையாது. பதிலாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முதுகு கொடுத்தலாகவே அமையும். எனவே என்மீது வீணாகக் கோபப்பட வேண்டாம்.

இன்றைய உலகம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு ஏற்றாற்போல் அனைத்து விடயங்களும் வேகமாய் முடிக்கப்பட வேண்டும் என அனைவராலும் எதிர்பார்க்கப்படுகிறது.அதை நிறைவேற்றும் வகையில் புதுப்புதுக் கண்டுபிடிப்புக்களும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

அவ்வகையில் உணவைக் கூட கண நேரத்தில் சமைத்து உண்பதே நாகரிகமாகக் கருதப்படுகிறது. அவசர உலகில் அனைவரும் நேரச் சுருக்கத்தையே கவனிக்கிறார்கள் தவிர நன்மை ,தீமைகளைப்பற்றிச் சிந்திப்பதே இல்லை. உணவு வகைகள் வெளித்தோற்றத்திற்குப் பளிச்சென்று இருந்தால் அவற்றை ஆராயாமல் வாங்கி வருகிறோம். ஆசையாக உண்ணும் போது அவற்றின் உண்மை நிலையைக் கண்டு முகம் சுழிக்கின்றோம்.

மஞ்சள் நிறத்தில் வாங்கிய மாம்பழம் மாங்காய்ச் சுவையுடன் இருக்கும் மாயமென்ன?பல வேளைகளில் இவ் அதிசயத்தைக் கண்டு நாம் தலையைப் பிய்த்திருக்கிறோம். மாலையில் இரசாயனத்தில் குளித்து காலையில் சந்தையில் விழிக்கும் உணவு வகைகளாலேயே இவ்வதிசயம் சாத்தியம் ஆகின்றது. இது அனைவராலும் செய்யப்படுவதல்ல.மக்கள் வாழ்வில் பிணத்தை நிரப்பி தத்தம் மடியில் பணத்தை நிரப்ப நினைக்கும் ஒரு சிலரின் செயற்பாடே இதுவாகும்.

விவசாயத்திற்கு பயன்படுத்தும் இரசாயனங்கள் மண்ணையும் நீரையும் வளியையும் மாசாக்குகின்றன. மண்ணில் தேங்கி உள்ள இரசாயனம் பிறிதொரு பயிரை நடுகையில் வேர் மூலம் உறிஞ்சப்படும்.சில வேளைகளில் பயிரின் உணவு சேமிப்புப் பகுதியில் சேர்க்கப்படும். அவ்வேளை தாவரம் மட்டுமன்றி அதை உண்ணும் நாமும் பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டி ஏற்படும்.அவ்வகையில் கடந்த 2014 ஆம் ஆண்டு ஆபத்தானதாய் கருதி Car baryl ,propanil ,carbofuran போன்ற விவசாய இரசாயனங்கள் தடைசெய் யப்பட்டன. இவை தவிர உணவுக ளுக்கு நிறம் ,மணம், சுவையூட்ட பல இரசாயனங்கள் சேர்க்கப்படு கின்றன. MSG,BHA,EDTA ஜெல ற்றின், தயமின் போன்றவை அவ் வாறான




சில இரசாயனங்களாகும். இவற்றால் ஒவ்வாமை, வாந்தி தொடக்கம் புற்றுநோய், நீரிழிவு, சிறுநீரக செயலிழப்பு வரை பல நோய்கள் ஏற்படுகின்றன.

இன்று அழகுசாதனப் பொருள்களுக்கு சந்தையிலே அதிக கேள்வி நிலவுகிறது. முடி முதல் அடிவரை ஒவ்வொரு அங்கத்திற்கும் பார்த்துப் பார்த்து இப்பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன. தோல் வெளிற்றி, முடிச்சாயமூட்டி, உதட்டுச் சாய மூட்டி, நறுமணமூட்டி, துர்மண நீக்கி எனப்பல அழகுசாதனப் பொருட்கள் விற்பனையாகின்றன.

இவற்றுள் ஈயம், இரசம் போன்ற பார உலோகங்களும் மதுசாரம் போன்ற ஆவியாகும் பதார்த்தங்களும் உள்ளன. உதட்டுச் சாயங்



களை அதிகம் பயன்படுத்தும் போது உதட்டு வெடிப்பு ,உதட்டு வரட்சி போன்றன ஏற்படலாம்.தோலை வெள்ளை நிறமாக்கும் களிம்புகளை (கீறிம்) பயன்படுத்துகையில் பல தோல் நோய்கள் ஏற்படலாம். வியர்வைத் துளைக்ள் அடைக்கப்பட்டு வியர்வை வெளியேற வழியின்றி புது நோய்கள் ஏற்படலாம். மேலும் தோற் புற்று நோயையும் ஏற்படுத்தும் நகச் சாயங்கள் பூசும்போது உடலிலிருந்து இழக்கும் வெப்பம் தடைப் படுகிறது. இதனால் வெயில் காலங்களில் உடல் வெப்பநிலைச் சீராக்கம் தளம்பலடைகிறது. நாம் தான் நகத்திற்குச் சாயம் பூசுகிறோமெனின் மேலைநாடுகளில் பற்சாயப் பூச்சுக்களும் அறிமுகமாகிவிட்டன. இந்நிலை நீடிக்குமானால் அழகு படுத்தப் பயன்படுத்திய இரசாயனங்கள் அசிங்கத்தையும் அலங்கோலத்தையும் பரிசளித்துச் சென்றுவிடும். உடலுக்குப் பயன்படுத்தப்படும் நறுமணமூட்டிகள் மூலம் CFC வாயு வெளியேற்றப்படுகிறது. மேலும் குறித்த நறுமணம் தொடர்ந்து சுவாசிக்கப்படுகையில் சுவாசத் தொகுதியிலும் பாதிப்பு ஏற்படுகிறது.

கச்சா எண்ணெயைப் பகுதி படக் காய்ச்சி வடிக்கும் போது LPG, டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், தார், இன்கா போன்றன பெறப்படுகின்றன. இவை தகனமடையும் போது ஐதரோ காபன்கள் வெளியேற்றப்படுகின்றன. இவை ஓசோன் படையைச் சிதைவுறச் செய்தல், ஒளி இரசாயனத் தூமம் என்பவற்றை ஏற்படுத்துவதில் பங்களிப்புச் செய்கின்றன. கழியூதாக்கதிர் புவியை வந்தடைதல், தோல், கண் நோய்கள் ஏற்படல், தாவர வளர்ச்சி குறைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதற்கான அடிப்படைகளாக ஐதரோ காபன்கள் அமைந்துவிடுகின்றன.

உலக யுத்தத்தின் போது ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாசி நகர்கள் அணுகுண்டு வீச்சால் தாக்கப்பட்டன. இன்றும் அந்நகரங்கள் அணுகுண்டு செய்த சோகங்களை பல தசாப்தங்களாக நினைவுகூருகின்றன. இதற்குத்தான் அணுவைப் பிளக்க முடியும். ஆனால் பிளந்து காட்டமாட்டேன் என அல்பிரட் ஐன்ஸ்டீன் அன்றே கூறிவைத்தார். அணுக்கழிவுகளிலிருந்து தொடர்ந்து பல வருடங்களுக்கு கதிர்வீசல்கள் வெளியிடப்படும். இவை உடல் அங்கவீனத்தைத் தோற்றுவிக்கும் அபாயமுடையவை. எனவே உலோகத்தாலான தடிப்பான உறைகளால் மூடப்பட்டு தரை, ஆழ்கடலில் அணுக் கழிவுகள் புதைக்கப்படுகின்றன.

சூழலின் ஒவ்வொரு கூறுகளுக்கும் நாம் பயன்படுத்தும் பொருட்களிலிருந்து வெளியேறும் இரசாயனங்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இலத்திரனியல் சாதனங்களிலிருந்து அதிகளவாக பார உலோகங்கள் சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றன. கணனி, தொலைபேசி, மின்கலம், LED, வெப்பமானி



போன்றவை மூலம் பெரிலியம், கட்மியம், ஆசனிக்கு, ஈயம், இரசம் போன்ற உலோகங்கள் வெளியேறுகின்றன. இவை மீள் விற்பனை, மீள் சுழற்சி செய்ய முடியாத தேங்கிக் கிடக்கும் இலத்திரனியல் கழிவுகள் ஆகும்.

இரசாயனக் கழிவுகள் நீரில் அதிகம் சேரும்போது அல்காக்களின் வளர்ச்சி பன்மடங்காக்கப்படுகிறது. இதன்போது நீரில் துர்மணம் உண்டாவதோடு நீர்வாழ் அங்கிகள் இறக்கும் நிலையும் ஏற்படுகிறது. நீரின் ஒளி ஊடுபுகவிடும் தன்மை இல்லாமற் போவதோடு நீர்நிலையின் அழகும் கெட்டுப்போகிறது. இத்தகைய இரசாயனங்கள் சில மனிதன், விலங்குகள், தாவரங்கள் என அனைத்து உயிரிகளையும் ஆட்டிப் படைக்கும் சக்தியாய் எழுந்துள்ளன. சூழலில் விடுவிக்கப்படும் இரசாயனங்களில் அச்சுறுத்தலை உண்டாக்கும் சவால்மிக்க இரசாயனங்கள் நிலைபேறான சேதன மாசாக்கிகள் என அழைக்கப்படுகின்றன. அவற்றுள் 12 இரசாயனச் சேர்வைகள், தொழில்நுட்பக் கழிவு, கைத்தொழில் கழிவு, பீடை நாசினிகளிலிருந்து தெரியப்பட்டு டசின் கழிவு (Dirty Dozen) எனப் பெயரிடப்பட்டுள்ளன. இவை பிறப்பு விகாரம், மந்த புத்தி, புற்றுநோய் என்பவற்றை ஏற்படுத்துவதில் அங்கத்துவம் வகிக்கின்றன.

இரசாயனக் கழிவுகளால் பொரு



ளாதாரா, சமூக ரீதியில் மட்டுமன்றி தனிப்பட்ட ரீதியிலும் பல பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. சூழல் மாசடைதல், நோய்கள் ஏற்படல், தாவர விளைச்சல் குறைவடைதல், உயிர்ப் பல்வகைமை இழப்பு என்பன இப்பிரச்சினைகளுக்கு சில உதாரணங்களாகும். உணவுத் தட்டுப்பாடு, வாழிட இழப்பு, உற்பத்திக் குறைவு,ஆக்கிரமிப்பு, உயிரிகளின் வளர்ச்சி என்பவை இரசாயனங்களால் ஏற்படுகின்றன.

அதிகரித்துவரும் சூழல் பிரச்சினைகளால் மனிதவர்க்கம் தன் நிலைப்பை உறுதிப்படுத்த பல செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையில் உண்ணும் உணவு முதல் அழகு சாதனப் பொருட்கள் வரை அனைத்திலும் இரசாயனங்களைப் பாவித்தால் எதிர்கால சந்ததியின் நிலை தான் என்னவாவது இருக்கும். கொஞ்சக் காலத்திலேனும் மகிழ்ச்சியாய் இருக்க முயற்சிக்க வேண்டும். இரசாயனங்கள் இயமனாய் மாறுமளவிற்கு நாம் அவற்றை அளவுக்கதிகமாகப் பயன்படுத்துகிறோம். இனிவரும் காலத்திலேனும் அவற்றைக் குறைப்போமானால் நிம்மதியாய் மூச்சுவிட சந்தர்ப்பம் கிடைக்கும். இன்றேல் தென்னிந்தியத் தமிழ்த்திரையில் வந்த தசாவதாரம், மிருதன் போன்ற படங்கள் விட்டுச் சென்ற செய்திகள் சாத்தியமாகக் கூட வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன. அவ்வாறு நிகழ நாம் ஒருபோதும் சந்தர்ப்பம் அளிக்கக்கூடாது. நமது எதிர்காலம் நமது கைகளில்தான் சிறகடித்துக் கொண்டிருக்கிறது.

அதை மகிழ்ச்சியாக பறக்க விடுவதும் ஒரே பிடியில் இறக்க விடுவதும் எமது செயற்பாடுக ளில் தான் தங்கியுள்ளது.

ஸ்ரீ.ஜஸ்மிகா
தரம்11, யாழ்.உடுப்பிட்டி
மகளிர் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 162

அலைபேசியில் அழைப்புக்கள் மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் மின்காந்த அலை எது?

புதிர் 162இற்கான விடைகளை 20.06.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 161 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

குணரட்னம் உமாகாந்
793 நாவலர் வீதி,
அரியாலை.

புதிர் 160 க்கான கேள்வியும் விடையும்:

உடலிற்குத் தேவையான கனியுப்புக்களுள் முக்கியமானதொன்றான சோடியம் குளோரைட்டு (NaCl) குறைப்பாட்டால் (Deficiency) உடலில் ஏற்படும் பாதகமான விளைவு யாது?

கைப்போநேற்றிமியா(HYPONATREMIA) எனப்படும் உடலின் மின்பகுபொருள் சமநிலை பாதிப்பு

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 162

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

# தீவிரவாதிகளிடம் 90,000 மக்கள் சிக்கித் தவிப்பு!



## ஐக்கிய நாடுகள் சபை அச்சம்

( பக்தாத் )

**ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் மூலோபாய முற்றுகைப் பகுதியாக விளங்கும் பலூஜா நகரில், சுமார் 90 ஆயிரம் பொதுமக்கள் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை அச்சம் வெளியிட்டுள்ளது.**

நேற்று முன்தினம் புதன்கிழமை ரொயிட்டர்ஸ் செய்திச் சேவைக்கு தொலைபேசி மூலம் பிரத்தியேக செவ்வி வழங்கிய, ஈராக்கில் இயங்கும் ஐ.நா. உதவிப் பணியகத்தின் விசேட துணை பிரதிநிதி லைஸ் கிராண்டி இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், இது வரை கணிப்பிடப்பட்ட ஆரம்பகட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பலூஜா நகரிற்குள் சுமார் 50 ஆயிரம் மக்கள் வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டிருப்பது தெரிய வந்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும், "நாம் பலூஜா நகரிற்குள் சிக்கிக் கொண்டிருக்கும் பொதுமக்கள் தொடர்பான கணக்கெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றோம். அங்கிருந்து வெளியேறியுள்ள மக்களிடம் இருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில், பலூஜாவிற்குள் 80-90 ஆயிரம் வரையிலான மக்கள் சிக்கிக் கொண்டிருக்கலாம் என தெரியவருகின்றது. அவர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான மூலோபாயம் குறித்து நாம் திட்டமிட்டு வருகின்றோம்" எனத் தெரிவித்தார்.

அத்தோடு, "ஐ.எஸ் தீவிரவாதிகளின் தீவிர முற்றுகைக்குட்பட்ட பகுதியாக காணப்படும் பலூஜா நகரில், கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக பொருட்களின் விநியோகம் தடைப்பட்டிருந்தது. இதனால் அங்குள்ள மக்கள் பலத்த நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். தற்போது அங்கு ஈராக்கிய துருப்பினருக்கும், ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் இடையில் தீவிர மோதல் நீடிப்பதனால் அம்மக்கள் உச்சக்கட்ட உணவு நெருக்கடி நிலை மற்றும் மருந்து பொருட்களின் தீவிர பற்றாக்குறை ஆகியவற்றை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

எனவே பலூஜா நகர் விரைவில் மீளக் கைப்பற்றப்பட வேண்டியது அவசியமாகும்" எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை பலூஜாவின் பல்வேறு பகுதிகளூடாகவும் ஈராக்கிய படையினர் முன்னேறி வருவதோடு, ஐ.எஸ் தீவிரவாதிகளின் இலக்குகளைக் குறிவைத்து தொடர்நதும் தாக்குதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)




## 24 பேர் சுட்டுக்கொலை 50 பேர் சிறைபிடிப்பு

### தலிபான்களின் அட்டூழியம் தொடர்கிறது



( கஜினி )

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் தாக்குதல் தொடர்கிறது. அங்கு கார் பயணிகள், பணயக் கைதிகள் என அடுத்தடுத்து 24 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பேருந்து பயணிகள் 50 பேர் பணய கைதிகளாக சிறைபிடிக்கப்பட்டனர.

ஆப்கானிஸ்தானில் கடநத சில மாதங்களாக தலிபான்கள், அரச படையினருடன் கடுமையாக சண்டையிட்டு பல நகரங்களை பிடித்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் தலிபான்கள் அமைப்பின் தலைவர் முல்லா அக்தர் மன்சூர், பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் கடந்த மாதம் 21 ஆம் திகதி காரில் பயணம் செய்தபோது, அமெரிக்கா ஆளில்லா விமான தாக்குதல் நடத்தி கொன்றது. இந்த சம்பவத்தை தொடர்ந்து தலிபான்கள் இயக்கத்தின் புதிய தலைவராக ஹைபதுல்லா அகுந்த் ஜாதா நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றார்.

**அவர் பொறுப்புக்கு வந்துள்ள நிலையில், தலிபான்கள் நிலையில் மாற்றம் ஏற்படுமா, அரசுடன் ஆக்க**பூர்வமான பேச்சுவார்த்தை நடத்துவார்களா என்ற கேள்விகள் உலக அரங்கில் எழுந்தன.

ஆனால் தலிபான்கள் நிலையில் எந்த மாற்றமும் இல்லை என்பதை நிரூபிக்கிற விதத்தில் ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர். கடந்த மாதம் 31 ஆம் திகதி ஆப்கானிஸ்தானின் வட பகுதியில் குண்டூஸ் மாகாணத்தில் அலியாபாத் மாவட்டத்தில் தலிபான்கள், ஒரே நேரததில் 3 பேருந்துகளை வழிமறித்து சரமாரியாக தாக்குதல் நடத்தினர். 16 பயணிகளை சுட்டுக் கொன்ற அவர்கள், 30 பேரை பணய கைதிகளாகவும் பிடித்து சென்றனர.

இந்த நிலையில், குண்டூஸ் நகரில் நெடுஞ்சாலைகளில் தலிபான்கள் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்துவதில் குறியாகவுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அங்கு இரண்டு கார்களை தடுத்து நிறுத்தினர். அந்த கார்களில் இருந்தவர்களை வெளியே வருமாறு உத்தரவிட்டனர். அவர்கள் வெளியே வந்தபோது சரமாரி யாக சுட்டுக்கொன்றனர். இதில் 12 பேர் பலியானதாக தகவல்கள் கூறுகின்றன.

இது தொடர்பாக குண்டூஸ் மாகாண ஆளுநரின் செய்தி தொடர்பாளர் ஜாவித் சாலங்கி நேற்று முன்தினம் நிருபர்களிடம் பேசுகையில், "கார்களில் பயணம் செய்தவரகளை தலிபான்கள் வெளியே வர உத்தரவிட்டு, அவர்கள் வெளியே வந்தபோது சுட்டுக் கொன்று விட்டனர். 12 பேர் இப்படி சுட்டுக்கொல்லப்பட்டு, அவர்களது உடல்கள் கிடந்ததை உள்ளூர்வாசிகள் கண்டிருக்கிறார்கள்" என கூறினார்.

அந்த சம்பவத்தை தொடர்ந்து அடுத்த சில மணி நேரத்தில், அண்மையில் கடத்தி சென்று பணய கைதிகளாக வைத்திருந்த 7 பொலிஸார் உள்ளிட்ட 12 பேரை ஆண்டார் மாவட்டத்தில் தலிபான்கள் சுட்டுக்கொன்று விட்டதாகவும், இந்த சம்பவத்தை உள்ளூர் மக்களை கூடி வந்து பார்க்குமாறு நிர்ப்பந்தித்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

படுகொலை செய்யப்பட்ட 12 பேரும் வெவ்வேறு கால கட்டங்களில் பணய கைதிகளாக பிடிக்கப்பட்டவர்கள் என்று இராணுவ உளவு பிரிவு அதிகாரி குலாம் முகமது தாரி தெரிவித்தார்.

நேற்று முன்தினமும் தங்களது தாக்குதல்களை தொடரந்த தலிபான்கள், குண்டூஸ் நகர் அருகே ஒரு பேருந்தையும், ஒரு காரையும் வழிமறித்து தாக்கினர். அவற்றில் பயணம் செய்த 50 பேரையும் வெளியே வரச்செய்து, பணயக் கைதிகளாக சிறைபிடித்தனர.

இதுகுறித்து பொலிஸ்செய்தி தொடர்பாளர் மகபோசுல்லா அக்பரி கூறும்போது, "தலபான்கள் கடத்திச்சென்ற பயணிகளை மீட்பதற்கு எங்களால் முடிந்த அளவுக்கு முயற்சி எடுக்கிறோம்" என தெரிவித்தார். (இ-10)

## பிரதமரை பதவி விலக வலியுறுத்தி மாணவர்கள் பாரிய ஆர்ப்பாட்டம்



பபுவா நியூகினியில் அந்நாட்டு பிரதமர் பீற்றர் ஓநீலுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகவும் இந்த சம்பவத்தில் பலர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்நாட்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்த சம்பவத்தில் நால்வர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்ற நிலையில் அதற்கு அந்நாட்டு அரசாங்கம மறுப்புத் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் பல மாணவர்கள் காயமடைந்துள்ளதாக உத்தியோகபூர்வ செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர் பீற்றர் ஓநீல் அவர் எதிர்கொண்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளின் நிமித்தம் பதவி விலக வேண்டும் என மாணவ ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிவருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டம் குறித்து பரதமர் கருத்து வெளியிடுகையில், சிறிய மாணவர் குழுவொன்று வன்முறையில் இறங்கி பொலிஸார் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தியதாகவும் அவர் களைக் கலைக்க பொலிஸார கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன் எச்சரிக்கை வேட்டுகளையும் தீர்த்ததாகவும் தெரிய வருகிறது என்று கூறியுள்ளார். (இ-10)

## அமெரிக்காவை ஆக்கிரமிக்கும் காட்டுத்தீ;மக்கள் வெளியேற்றம்



அமெரிக்காவின் ஹரிஜோனா மாநிலத்தில் வேகமாக பரவிய காட்டுத்தீயால் நூற்றுக்கணக்கானோர் வீட்டை விட்டு வெளியேறினர். எர்னல் மலைப்பகுதியில் திடீர் என்று ஏற்பட்ட காட்டுத் தீ வேகமாக பரவியது. 400 ஏக்கர் பரப்பளவில் இருந்த மரங்கள், செடி,கொடிகள் என அனைத்தும் தீயில் எரிந்து சேதமடைநதன. தீ பரவத் தொடங்கியதும குடியிருப்பு பகுதியில் இருந்தவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு அவர்களுக்கு தற்காலிக குடியிருப்புகள் வழங்கப்பட்டன. காட்டுத் தீயை சிறிய விமானம் மூலம் அணைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

காட்டுத் தீயில் வீடு ஒன்று முழுவதும் எரிந்து நாசமானது. மேலும் காயமடைந்தவர்கள் பற்றிய முழுமையான தகவல் வெளியாகவில்லை.


வீடுகள் இன்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்காவின் செஞ்சிலுவை சங்கம் மூலம் பாதுகாப்பு வழங்கப் பட்டது. (இ-10)

# ஆயுதக்களஞ்சியசாலை வெடிப்பு திட்டமிட்ட சதி!

## விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

**சாலாவ ஆயுதக் களஞ்சியசாலை வெடிப்பு திட்டமிட்ட சதியாக இருக்க வேண்டும். அத்துடன் இது அரசாங்கத்தின் செயல் எனக் கூறுவது வேடிக்கையாகும் என நவ சமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.**



அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுவோம் இயக்கம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொஸ்கம சாலாவவில் அமைந்துள்ள ஆயுதக் களஞ்சியமானது மிகவும் பாதுகாப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன் வெடிப்பு இடம்பெற்ற தினம் களஞ்சியசாலை இருக்கும் இடத்தில் பயிற்சி நடவடிக்கைகளிலும் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

ஆயுதக் களஞ்சியசாலை வெடிப்பானது சதி நடவடிக்கையா அல்லது வேறு ஏதேனும் காரணமாக இடம்பெற்றதா என்பது தொடர்பாக இராணுவத்தினருக்கு எதுவும் கூறமுடியாத நிலைமையில் இது இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் இந்த வெடிப்புச் சம்பவமானது திட்டமிட்ட சதி நடவடிக்கையாகவே தோன்றுகின்றது.

மேலும் ஆயுதக் களஞ்சியசாலை வெடிப்பானது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயல் என விமல் வீரவன்ச கூறியுள்ளார். அவ்வாறாயின் யாராவது செய்திருக்கலாம் என அவரும் ஏற்றுக்கொள்கிறார். விமல் வீரவன்சவின் இந்த கூற்றானது அடிப்படையற்றது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் அரசாங்கம் இவ்வாறானதொரு செயலை மேற்கொள்ளப் போவதில்லை.

அரசாங்கம் பொருளாதார பிரச்சினையில் செய்வதறியாது திண்டாடிக்கொண்டிருப்பதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் பல்வேறு விதமாக அரசாங்கத்தை விமர்சித்து வந்தனர்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு மக்கள் பலம் இல்லை. அதனால் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு சதி நடவடிக்கைகளையே மேற்கொள்ள முடியும். அவர்களின் சதி நடவடிக்கைகளுக்குசில இராணுவத்தினரையும் சேர்த்துக் கொள்கின்றனர்.

சர்வதேச நாடுகள் நல்லாட்சி அரசாங்கம் மீது நம்பிக்கை வைத்து உதவிசெய்து வருகின்றன. ஆனால் பாராளுமன்றில் இருக்கும் சிலர் அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதானது மிகப்பெரிய நகைச்சுவையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## கொழும்பு துறைமுகத்துக்கு வரும் பொருட்கள் குறித்து கூடிய கவனம்

கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்பு தொடர்பில் விசேட திட்டம் தீட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக துறைமுக மற்றும் கடற்துறை அமைச்சின் செயலாளர் எல்.பீ.ஜயம்பதி தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் அன்றாடம் இடம் பெற்று வரும் பொருட்கள் பரிமாற்றத்தின் போது பெரும்பாலான பொருட்கள் கூடிய அவதானம் செலுத்த வேண்டியவைகளாக உள்ளன. இதனால், பாதுகாப்பு தொடர்பில் கூடுதல் விசாரணை செய்வதற்கு மேலதிக குழுவொன்றை அமைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் சாலாவ முகாமில் இடம்பெற்ற தீச்சம்பவத்தையும் கருத்தில் கொண்டு பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்தார். (இ-10)


## இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்காக கார் செலுத்திய மெக்சிக்கோ ஜனாதிபதி

பிரதமர் மோடி ஆப்கானிஸ்தான், கட்டார், சுவிட்ஸர்லாந்து, அமெரிக்கா, மெக்சிகோ என ஐந்து நாடுகள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இதன்படி, அமெரிக்க பயணத்தை முடித்துக் கொண்டு புறப்பட்ட மோடி, தனது ஐந்து நாடுகள் சுற்றுப்பயணத்தின் இறுதியாக மெக்சிகோ நாட்டிற்கு நேற்று முன்தினம் சென்றுள்ளார். அங்கு அவருக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அந்நாட்டு ஜனாதிபதி என்ரிக் பினா நீட்டோ, மோடிக்கு இரவு விருந்தளித்தார். இதற்காக நீட்டோவே தனது காரில் மோடியை உணவகத்திற்கு அழைத்துச் சென்றார்.

அந்தக் காரை ஜனாதிபதி என்ரிக்கே செலுத்தி சென்றுள்ளார். இது தொடர்பான



புகைப்படங்கள் பிரதமர் அலுவலக டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (இ-10)

## சாலாவ சம்பவம்; வீதியை மறித்து பொதுமக்கள் நேற்றும் ஆர்ப்பாட்டம்



கொழும்பு - அவிசாவளை வீதியின் சாலாவ இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். கடந்த 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சாலாவ இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியசாலையில் ஏற்பட்ட திடீர் விபத்துக் காரணமாக குறித்த வீதி மூடப்பட்டிருந்தது. இந்த நிலையில், மீளத் திறக்கப்பட்ட இந்த வீதிக்கு முன்பாக நேற்றும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. குறித்த வீதியை திறக்கு முன்னர், தமது வீடுகள் மற்றும் உடமைகளுக்கு ஏற்பட்ட சேதத்தை சுத்தப்படுமாறு கோரியே அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளனர். (இ-10)

## தமிழ் அமுதம்-05 சாவகச்சேரியில்

யாழ்.தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் தமிழ் அமுதம்-05 என்ற நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் சாவகச்சேரி சங்கத்தானையில் அமைந்துள்ள தமிழ்க்கோட்டத்தில் (கம்பன் கல்லூரி வளாகம்) நடைபெறவுள்ளது. இதில் தலைமையுரையினை யாழ்.சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் ந.ஜெயகுமாரன் நிகழ்த்தவுள்ளதுடன் எழிலுரையினை கவிஞர் நாகசிவசிதம்பரம் நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து பெருமைமிகு தமிழ்க்கவிதை மரபை இன்றைய சினிமாக்கவிதைகள் சிறப்பித்து வருகின்றன, சீரழித்து வருகின்றன என்ற தலைப்பிலான கலாநிதி செ.சேதுராஜா நடுவராகப் பங்கேற்கும் சிறப்பு பட்டிமன்றமும் இடம்பெறும். (இ-5)


## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-15

(09.06.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

### பகுதி II

| | | | |
|---|---|---|---|
| 01) | 08) (i)ஒற்றுமை | 2)1101 | 39)3 |
| (i)1867 | (ii) மகிழ்ச்சி | 21) 1)நூறுகள் | 40)1 |
| (ii) தோட்டங்கள் | (iii) நிரந்தரமற்றது | 2)500 | 41) 1 |
| (iii)தாழ்நிலம் | 09)வண்ணமயிலும் | 22)இரண்டு புள்ளிகள் : | 42)3 |
| (iv) தேசம் | ஆடுது | 23)71 | 43)4 |
| (V)முகம் | 10) ஆசையாக | 24)33 | 44) 1 |
| (vi)தேயிலை, அழைப்பார்கள் | வெள்ளைத்தாளை | 25)5055 | 45)2 |
| 02)அ) (i) தொழிலாளி | 11) கண்ட மக்கள் | 26)24Km | 46)4 |
| (ii) உறுதிமொழி | போற்றினர் | 27)21.30/9.30 என கடிகார | 47)4 |
| (iii)பலம் | 12) (i)மழை | முகப்பில் குறிப்பிட | 48)2 |
| ஆ) (i)கலை | (ii)ஆனி | வேண்டும். | 49)4 |
| (ii) திங்கள் | (iii)வால் | 28)8 | 50)1 |
| (iii) முடி | 13)யானைகள் | 29)38 | 51)2 |
| 03)(i)நான் வீட்டிற்குப் | 14)நகருக்குச் | 30)5 | 52)1 |
| போகலாமா? | 15)இரவு | 31) 3 | 53)2 |
| (ii)நான் நாளை வருவேன். | 16)ஒவ்வொரு சரியான | 32)3 | 54)4 |
| 04)Happy birthday | வாக்கியத்திற்கும் 2 | 33)3 | 55)1 |
| 05) | புள்ளிகள் வழங்குக | 34) 1 | 56)2 |
| (i) banana | 17)2660,2710 | 35)3 | 57)3 |
| (ii) Parrot | 18)1352 | 36)2 | 58)1 |
| 06) ඔයාගේ වයස කීයද? | 19)ரூ.125.00 | 37) 1 | 59)2 |
| 07)தம்பியுடன் போவோமா? | 20)1)1100 | 38)3 | 60)1 |



ஒரு பண்ணையில் ஆண் கழுதை யொன்றும், பெண் கழுதையொன்றும் வளர்ந்து வந்தன. ஆண் கழுதை பகலில் கடுமையாக உழைக்கும். பண்ணைக்குள் கொண்டு செல்ல வேண்டிய சரக்குகளை முதுகில் சுமந்து செல்லும். மாலை தங்கு மிடம் வந்ததும் அங்கு கிடக்கும் காய்ந்த புல்லை மேய்ந்து பசியாறும்.

பெண் கழுதை எந்த வேலையும் பார்ப்ப தில்லை. பசுமையாகக் கிடைக்கும் புல் லைத் தின்று விட்டு, தொழுவத்தில் தூங்கி எழும். மிகவும் மகிழ்ச்சியாக, வேலை பார்க்காமல் பொழுதை கழித்தது.

ஒருநாள் உழைத்த களைப்புடன் சோர்வாக ஆண் கழுதை வந்து சேர்ந்தது. களைப்பின் மிகுதியால் வந்தவுடனே படுத்தும் விட்டது. ஆண் கழுதையைப்

"என்ன செய்வது என் நிலை அப்படி, உழைத்தால் தான் முதலாளி விடுவார்!" என்றது ஆண் கழுதை.

இதைக் கேட்டதும் பெண் கழுதை சிரித்தது.

"ஏன் சிரிக்கிறாய்?"

சிரிக்காமல் என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? நான் மட்டும் கஷ்டப்பட்டு வேலையா செய்கிறேன்!" ஆண் கழுதை அதை ஆச்சரியத்துடன் பார்த்தது.

"ஆமாம் நானும் இதைப் பற்றி உன்னி டம் கேட்க வேண்டும் என்று தான் நினை த்தேன். அதை முதலில் கூறு!" என்றது.

"பண்ணையாள் வந்து உன் கயிற்றினை அவிழ்த்து விட்டதும், உடனே நீ வேலை செய்யப் போய் விடுவாய். நான் அப்படிப் போய் விட மாட்டேன்!" "பிறகு என்ன செய் வாய்?"

# ஏன் சிரிக்கிறாய்?

பார்த்து பெண் கழுதை பரிதாபப்பட்டது.

"உன்னைப் பார்க்கவே பாவமாக இருக் கிறது!" என கிண்டல் செய்தது.

"அப்படியே படுத்திருப்பேன். நான் எழ வில்லை என்றதும் சாட்டையால் நான்கு அடி அடிப்பான். பொறுத்துக் கொண்டு படுத்துக் கொள்வேன். பிறகு என்னை விட்டு விட்டுச் சென்று விடுவான்!" என்றது பெண் கழுதை.

"இவ்வளவுதானா!" ஆச்சரியமாகக் கேட் டது ஆண் கழுதை.

"ஆமாம் நீயும் அது போல சண்டித்தனம் செய்து விடு. உன்னையும் பண் ணையாள் விட்டுவிட்டுப் போய் விடுவான். எல்லாம் நம் கையில்தான் உள் ளது!" என அறிவுரை வழங்கியது.

காலைப் பொழுது வேலைக்குச் செல்லும் நேரம் பண்ணையாள் வந்தான். வழக்கம் போல் ஆண் கழுதையைப் பிடி த்துக் கொண்டு செல்ல முயன்றான். இன்று ஆண் கழுதை படுத்துக் கொண்டு சண்டித்தனம் செய்தது.

பண்ணையாள் சாட்டை எடுத்து அடித் தும் பார்த்தான். ஆண் கழுதை எழுவதாய்த் தெரியவில்லை. பண்ணையாள் பல விதங்களிலும் முயற்சி செய்து பார்த்து விட்டு, முதலாளியிடம் சென்றான்.

"ஐயா! இந்த ஆண் கழுதை என்று மில்லாமல் சண்டித்தனம் செய்கிறது!" என்றான்.

"சரி பரவாயில்லை. இன்னைக்கு ஆண் கழுதைக்கு ஓய்வு கொடுத்துவிடு. தினமும் நன்றாகச் சாப்பிட்டுக் கொழுத்து சும்மா இருக்கும், அந்தப் பெண் கழுதையை அடித்து இழுத்துப் போ!" என்றார்.

பண்ணையாளும் வந்து ஆண் கழுதை சாப்பிட பசும் புல்லைக் கொண்டு வந்து போட்டான்.

பிறகு, பெண் கழுதையை இழுத்துச் சென்று வேலையில் ஈடுபடுத்தினான். கெட்டதை சொல்லிக் கொடுக்கப் போய் தன்னுடைய பிழைப்பே போய் விட்டதை எண்ணி மிகவும் வருந்தியது பெண் கழுதை.

## 06.2016 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1190 - மூன்றாவது சிலுவைப் போர்: புனித ரோமப் பேரரசன் முதலாம் பிரெடெரிக் ஜெருசலேம் நகரை நோக்கிய படையெடு ப்பின் போது சாலி ஆற்றில் மூழ்கி இறந்தான்.
- 1786 - சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் பத்து நாட்களுக்கு முன்னர் நிகழ்ந்த நில நடு க்கம் காரணமாக டாடு ஆறு அணைப்பு உடைந்ததில் 100,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1801 - சிவகங்கையின் சின்னமருது "ஆங்கிலே யர்களின் அதிகாரத்தை உதறித்தள்ளி சுதேசி மன்னர்களின் கீழ் ஜம்புத்தீவின் மக்கள் வாழவேண்டும்" என்ற தனது சுதந்திரப் பிரகடனத்தை திருச்சியில் வெளியிட்டார்.
- 1838 - அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் இன்வெரெல் என்ற இடத்தில் 28 அவுஸ்திரேலியப் பழங்குடிகள் ஆங்கிலேய குடியேறிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1846 - கலிபோர்னியாக் குடியரசு மெக்சிக் கோவிலிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1886 - நியூசிலாந்தில் டரவேரா மலை தீக்கக்கியதில் 153 பேஎர் கொல்லப்பட்டனர்.
- 1898 - அமெரிக்கக் கடற்படையினர் கியூபா தீவில் தரையிறங்கினர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியப் படையிடம் நோர்வே வீழ்ந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியா மற்றும் பிரான்சுக்கு எதிராக இத்தாலி போரை அறிவித்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியப் படைகள் ஆங்கிலக் கால்வாயை அடை ந்தனர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலிக்கு எதிராக கனடா போரை அறிவித்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நோர்வே ஜெர்மனியர்களிடம் சரணடைந்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: பிரான்சில் ஒரேடூர்-சர்-கிளேன் என்ற இடத்தில் 642 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: கிரேக்கத்தில் டிஸ்டோமோ என்ற இடத்தில் 218 பொதுமக்கள் ஜெர்மனியர்களினால் கொல்லப்பட்டனர்.
- 1945 - அவுஸ்திரேலியப் படைகள் புரூணை யை விடுவிப்பதற்காக அங்கு தரையிறங்கினர்.
- 1956 - இலங்கையில் அம்பாறையில் 150 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1967 - இஸ்ரேலும் சிரியாவும் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு வந்ததில் ஆறு-நாள் போர் முடிவுக்கு வந்தது.
- 1984 - தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டக்கள ப்பு சிறையை உடைத்து அரசியல் கைதி யாக இருந்த நிர்மலா நித்தியானந்தனை விடுவித்தனர்.
- 1986 - யாழ்ப்பாணம், மண்டை தீவில் குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1990 - இலங்கைக்கு எதிரான விடுதலைப் புலிகளின் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தது.
- 1996 - வடக்கு அயர்லாந்தில் சின் ஃபெயின் பங்குபற்றாத நிலையில் அமைதிப் பேச்சு க்கள் ஆரம்பமாயின.
- 1998 - முல்லைத்தீவு, சுதந்திரபுரப் பகுதியில் இடம்பெற்ற வான் தாக்குதலில் 25க்கும் மேற்பட்ட தமிழர் கொல்லப்பட்டனர்.
- 1999 - கொசோவோவில் இருந்து சேர்பியப் படையினர் விலக எடுத்துக்கொண்ட முடிவை அடுத்து நேட்டோ தனது தாக்குதல்களை நிறுத்தியது.
- 2003 - நாசாவின் ஸ்பிரிட் தளவுளவி செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்டது.
- 2006 - ஈழத்தமிழர் படுகொலைகள், 2006: மன்னார், வங்காலையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 தமிழர் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1925 - வே. தில்லைநாயகம், தமிழக நூலகத்துறையின் முன்னோடி
- 1971 - பாபி ஜிண்டல், அமெரிக்கா, லூசியானா வின் ஆளுனர்

### இறப்புகள்

- கிமு 323 - மகா அலெக்சாண்டர். (பி. கிமு 356)
- 1836 - அன்ட்ரே-மரீ அம்பியர், பிரெஞ்சு இயற்பியலாளர். (பி. 1775)
- 2004 - ரே சார்ல்ஸ், அமெரிக்க இசைக்கலைஞர். (பி. 1930)

### சிறப்பு நாள்

- போர்த்துக்கல் - தேசிய நாள்


## வே.தில்லைநாயகம்



வேதி என்று அழைக்கப்படும் வே. தில்லைநாயகம் தமிழக நூலகத்துறையின் முன்னோடியாகக் கருதப்படுபவர். தேனி மாவட்டம் சின்னமனூரில் 1925 ஆம் ஆண்டு ஜூன் 10 திகதி தொடக்கப்பள்ளி ஆசிரியரான வீ. வேலுச்சாமி - அழகம்மை இணையர்களின் தலைமகனாகப் பிறந்தார். சின்னமனூரில் உள்ள கருங்கட்டான்குளம் நடுநிலைப் பள்ளியில் தன்னுடைய தொடக்கக் கல்வியைப் பெற்றார் . தமிழறிஞர் ஆ. கார்மேகக்கோனார், ஆங்கிலப் பேராசிரியர் இரஞ்சிதம் ஆகியோர் தம் அன்பைப் பெற்ற மாணவராகத் திகழ்ந்தார். இவரது எழுத்தில் சீ.இரா.அரங்கநாதன் எழுத்தின் தாக்கம் உண்டு. மாணவப் பருவத்திலேயே (1936 மே 20) நூலகத் தொடர்பு பெற்றவர். 1949 ஆம் ஆண்டில் அரசாங்கச் செலவில் நூலகப் பயிற்சி பெற்று பொதுக்கல்வித் துறை இயக்க முதல் நூலகர் ஆனார். 1962 ஆம் ஆண்டில் கன்னிமாரா பொதுநூலகத்தில் நூலகரானார். 1972 ஆம் ஆண்டில் தமிழக அரசு பொதுநூலகத் துறையின் முதல் இயக்குநராக உயர்ந்து 1982 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். தேசிய, மாநில பல்கலைக்கழக நூலக குழுக்கள் பலவற்றில் உறுப்பினராக இருந்துள் ளார். நூலக இயக்கத்தின் பண்பும், பயனும் என்றும் இல்லாத அளவு உயர்ந்த வீச்சினைப் பெற்ற இவரது ஆட்சிக்காலம், தமிழக நூலக இயக்க த்தின் பொற்காலம் என்று நூல்சார்ந்த எல்லோரும் இவரைப் புகழ்ந்து ள்ளார்கள். எனவேதான் இந்திய நூலகத்துறை முன்னோடி அரங்க நாதனின் ஏகலைவ மாணவரான இவரைத் தமிழக பொதுநூலக இயக்கத்தின் தந்தை எனப் புகழ்கின்றனர். ஏறத்தாழ 1000 எழுத்துரைகள் எழுதியவர். இதில் 101 ஆங்கில எழுத்துரைகள். இதில் சில இந்தி, மராத்தி, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளில் மொழிமாற்றம் பெற்றுள்ளன.வானொலி நிகழ்வுகளில் பெரும் பங்கு கொண்டுள்ளார். இதில் நூலக இயல் சிறப்பிடம் பெறுகிறது. இந்தியாவின் முன்னோடி முயற்சியாகத் தமிழில் 1951-1982 இல் இவர் பதிப்பித்த நூற்றொகைகள், குழந்தை நூற்றொகைகள், நூல்கள் அறிமுக விழா மலர்கள் முதலியன தமிழ் நூல்கள் வளம் காட்டுவன. இவர் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கைகள், நூலக வளர்ச்சித் திட்டங்கள் ஆய்வேடுகளாகும்.

# இறுதிக் கட்டப்போரில் இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்படவில்லை

## பிரதமர் ரணில் கூறுகிறார்



(கொழும்பு)

**இறுதிக்கட்டப் போரில் பொதுமக்கள் இரசாயன ஆயுதங்களால் பாதிக்கப்படவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"போர்க்காலத்தில் கொல்லப்பட்ட பொதுமக்களின் உடல்களில் இரசாயனப் பாதிப்பு இருந்ததாக அறிக்கைகளில் தெரிவிக்கப்படவில்லை. போரில் இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப் பட்ட தற்கான சான்றுகள் ஏதும் இல்லை.

போரில் பொதுமக்கள் பாதிக்கப்படுவது வழக்கம். குறிப்பாக இறுதிக்கட்டப் போரில், அதுவும், இரண்டு தரப்புகளும் ஆட்டிலறிகளை பயன்படுத்திய சூழலில், பொதுமக்களுக்கு இழப்புகள் ஏற்பட்டிருக்கும்.

எனினும், மனித உடல்களில் ஊடறுத்த எந்த ஆயுதமும் இரசாயன உமிழ்வைக் கொண்டிருந்தது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

அவ்வாறு உடலில் இரசாயன ஆயுதப் பாதிப்பு எவருக்கேனும் ஏற்பட்டிருந்தால் அவர்களுக்கு வெளிநாட்டில் சிகிச்சை அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

அவ்வாறானவர்களின் விபரங்களை, நாடாளுமன்ற உறுப்பினர் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (இ-10)

# சாலாவ ராணுவ முகாமிலிருந்த ஆயுதங்கள் பாகிஸ்தானுக்கு விற்கப்படவிருந்தவையா?

(கொழும்பு)

சாலாவ இராணுவ முகாமில் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் பாகிஸ்தானுக்கு விற்பதற்குத் திட்டமிடப் பட்டிருந்ததாக வெளியான செய்திகளை, இலங்கையின் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன நிராகரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில், சாலாவ முகாமில் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள், பாகிஸ்தானுக்கு விற்கத் திட்டமிடப்பட்டிருந்ததா என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, 'இலங்கை அரசாங்கத்திடம் அத்தகைய திட்டங்கள் ஏதும் இருக்கவில்லை. அவ்வாறு எதையாவது செய்வதானால், அதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட வேண்டும்.

அமைச்சரவைக்குத் தெரியாமல், இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதானால், அது முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் மட்டும் தான் சாத்தியமாகும்" என்று தெரிவித்தார்.

அதேவேளை, இந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர,

'சாலாவ சம்பவத்தினால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படவில்லை. இது இராணுவத்தின் பலத்தையோ, நாட்டின் இராணுவ வலிமையையோ பாதிக்காது.

சாலாவ இராணுவ முகாம் குறைந்தசன அடர்த்திகொண்ட பகுதிக்கு மாற்றப்படும். இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இராணுவ முகாம்களில் வெடிவிபத்து ஏற்படுவது ஏனைய நாடுகளிலும் கூட வழக்கமானது. இராணுவ முகாம்கள் மிக கவனமாக பராமரிக்கப்படுகின்றன.

எனினும், சிறிய தவறு, இதுபோன்ற பாரிய வெடிப் புகளுக்கு காரணமாகிவிடு கிறது என்று தெரிவித்தார். (இ-10)

# பாராளுமன்றத்தில் மாங்காய் கதை கூறிய விமல் வீரவன்ச

(கொழும்பு)

கொஸ்கம, சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவமும் ஒலிவாங்கிகள் செயலிழந்த சம்பவமும் பல்வேறான சந்தேகங்களை தோற்றுவிக் கின்றன என்று கூறிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச, இவ்விரு விடயங்களிலும் அரசாங்கம், ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தியுள்ளது என்றும் குற்றஞ்சாட்டினார்.



நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை ஒன்றிணைந்த எதி ரணி, நடத்திய ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே, அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"முகாமில், படையினர் வெகுவாக இல்லாத நாளான, ஞாயிற்றுக்கிழமையன்று கொஸ்கம சாலாவ முகாமில் வெடிப்பு சம்பவம் ஏற்பட்டுள்ளது. இந்த வெடிப்புச் சம்பவத்தையடுத்து, வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்ற கருத்துக்கள் வலுப்பெற தோன்றியுள்ளன. அது ஒரு மாங்காயாகும். இந்த சம்பவத்தை அடுத்து வெடித்துச் சிதறிய ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்காக விலை மனுக் கோரப்பட்டுள்ளது. இது இரண்டாவது மாங்காயாகும் என்றார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் ஒலிவாங்கிகள் செயலிழந்தமையால், நிதியமைச்சருக்கு எதிராக பொது எதிரணியினால் கொண்டு வரப்படவிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது இது ஒருமாங்காயாகும். செயலிழந்துள்ள ஒலிவாங்கிகளுக்கு பதிலாக புதிய ஒலிவாங்கித் தொகுதியை கொள்வனவு செய்வதற்கு விலைமனுக் கோரப்படலாம் அது இன்னொரு மாங்காயாகும்" என்றார். (இ-10)

## இன்று ஒரு தகவல்

### அவமானமாகப் போய்விட்டதா?

நாம் கேலிப் பொருளாகும் போது நாமும் சேர்ந்து மற்றவர்களோடு சிரித்துவிட்டால் அது சாதாரண சம்பவம். உடனே தலையில் கை வைத்துக் கொண்டு முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டால் அது அவமானச் சம்பவம்.

ஒரு வரிசையில் சற்றுக் கோணலாக நிற்கிறோம். பொலிஸ்காரர் கன்னா பின்னாவென்று நம் மீது சத்தம் போடுகிறார். சுற்றியிருப்பவர்கள் எல்லோரும் நம்மையே பார்க்கிறார்கள். உடனே இத்தனை பேர் நடுவே நம்மை இப்படி மானத்தை வாங்கிவிட்டாரே என்று கூனிக் குறுகிப் போய்விடுவதா? அவசியமில்லை. எவ்வித முகமாற்றமும் இல்லாமல் வரிசையில் ஒழுங்காகச் சேர்ந்து கொண்டு எப்போதும் போல் இயல்பாக இருக்கலாம். ஏதோ யாருமே செய்யாத தவறைச் செய்துவிட்டதாகவும் எல்லோருமே நம்மைக் கேவலமாகப் பார்ப்பதாகவும் கற்பனை செய்து கொள்ள வேண்டாம். இப்படி நாம் நடந்து கொண்டால் சற்று விலகி நின்றதற்கா இந்தப் பொலிஸ்காரர் இப்படிக் கத்துகிறார்? நம்ம ஊர் பொலிஸே இப்படித்தான் என்பதாக மற்றவர்கள் பொலிஸார் மீது கோபம் கொள்வாரே தவிர , அதை ஓர் அவமானச் சம்பவமாக ஏற்கமாட்டார்.

ஒரு டிக்கெட் பரிசோதகர் பலர் முன்னிலையில் இறங்குய்யா மரியாதையாய்! என்பது போல் ஏதோ ஒன்றைச் சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். உடனே அங்கிருந்து நாம் அகன்று விடுவோம். முன்பின் தெரியாதவர்கள் நடுவே இப்படி ஒரு பேச்சைக் கேட்டதற்காகவும் நாம் பெரிதாக வருந்த வேண்டியதில்லை. காரணம் அவர்களையெல்லாம் நாம் மீண்டும் சந்திக்கவே போவதில்லை. அவர்களும் நம்மீது ஈனப் பார்வையைச் சிந்த வழியில்லை. நாம் என்னமோ மேற்கூறிய சம்பவங்களின் பார்வையாளர்களாக இருந்த அனைவருமே நம்மைப் பற்றிய சம்பவத்தையே நினைத்துக் கொண்டிருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். அது உண்மையல்ல. மற்றவர்களுக்கு இது சம்பவக் கீற்றே தவிர வரலாறு அல்ல . மாறாக , நாம் தான் அதையே எண்ணிப் பூதாகரப்படுத்திப் பார்க்கிறோம்.

நெருங்கியவர்கள் நடுவே வேறு ஒருவரால் அவமானப்படுத்தப்படும் போது நாம் எப்படி ஆறுதல் அடைவது? இது தொடர்பாக ஒன்றை இங்கே வலியுறுத்த வேண்டியது அவசியமாகிறது.

நாம் திமிர் பிடித்தவர்களாகவும் பழிவாங்கும் குணம் மிக்கவர்களாகவும் அதிகார பலத்தைக் காண்பிப்பவர்களாகவும் சுயநலம் உள்ளவர்களாகவும் இருக்கும் பட்சத்தில் நாம் அவமானப்படுத்தப்பட்டால்- நமக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண் டும் என்றே நம்மைச் சுற்றிலுமுள்ளவர்கள் எண்ணுவார்கள்.

மாறாக, நம் மீது எவ்விதத் தவறும் இல்லாத பட்சத்தில் அல்லது நம் சுபாவமே இனிமையுடைய ஒன்றாக இருக்கும் பட்சத்தில் அல்லது நம்மீது அவர்களுக்கு உண்மையான அன்பு இருக்கும் பட்சத்தில் நமக்கு நேர்ந்த அவமானத்திற்காக மற்றவர்கள் வருந்துவார்களே தவிர நாம் எண்ணிக் கொள்வது போல் அவமானச் சம்பவமாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள்.

இவற்றிற்கெல்லாம் அடங்காமல் மீறிப்படும் அவமானம் இருக்கிறதே. அதற்காக ஒரு நாள் நம் மனத்தைக் கஷ்டப்படுத்திக் கொள்ள அனுமதிக்கலாம். அதற்கு மேல்கூடாது. அதற்கான அவசியமும் இராது . மாறாக நாள் செல்லச் செல்ல நமக்கு நேர்ந்த அவமானச் சம்பவத்தை மற்றவர்களிடம் ஒரு நகைப்புக்குரிய சம்பவமாகச் சொல்லிச் சிரிக்கும் அளவிற்கு மனதைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இது நம்மால் முடியும்.

லேனா தமிழ்வாணன்

## இராணுவ களஞ்சிய சாலையை மீள அமைக்க முடியாது — ஜயநாத் ஜயவீர தெரிவிப்பு

தீயினால் அழிவடைந்த சாலாவ இராணுவ முகாம் மீண்டும் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு வருவதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இராணுவ களஞ்சியசாலையை மீண்டும் சாலாவ இராணுவ முகாமில் அமைக்க முடியாது எனவும் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார்.

மேலும், வெடிப்பு இடம்பெற்ற பகுதிகளில் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இராணுவ முகாமிலிருந்து 500 மீற்றர் தூரத்திற்கான பகுதி பாதுகாப்பு வலயமாகவே தொடர்ந்தும் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முன்னர் காணப்பட்டதை காட்டிலும் முகாமை நேர்த்தியாக வடிவமைக்கவே திட்டமிடப்பட்டுள்ளது எனவும், குறித்த பகுதியில் இருந்து இராணுவத்தினர் வெளியேற மாட்டார்கள் எனவும் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பிலான குறைப்பாடு அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றதாகவும் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்துள்ளார். (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-09.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.49 | 147.27 |
| பிரிட்டன் | பவுண்ட் | 207.31 | 214.72 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 162.70 | 169.21 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 148.74 | 155.03 |
| கனடா | டொலர் | 112.41 | 1167.10 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 106.32 | 111.33 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.02 | 110.13 |
| இந்தியா | ரூபா | 2.1896 | ------- |
| சீனா | யுவான் | 22.2107 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.5731 |
| குவைத் | டினார் | 483.8035 |
| ஓமான் | ரியால் | 378.5359 |
| கட்டார் | ரியால் | 40.0401 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8619 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6814 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 300 | 180 | 240 | 220 | 240 | 220 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 300 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 700 | 1000 | 650 | 700 | 600 | 800 | 600 |
| தக்காளி | 740 | 300 | 200 | 200 | 200 | 250 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 | 100 | 80 |
| கோவா | 180 | 200 | 140 | 80 | 160 | 200 | 180 |
| கரட் | 200 | 400 | 150 | 160-240 | 240 | 400 | 200 |
| பூசணி | 60 | 100 | 50 | 80 | 60 | 80 | 60 |
| புடோல் | 100 | 120 | 100 | 100 | 120 | 120 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 50 | 60 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 130 | 160 | 140 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 70 | 100 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 240 | 400 | 200 | 240 | 220 | 200 | 130 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 100 | 120 | 130 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 200 | 100 | 120 | 120 | 200 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 130 | 240 | 240 | 160 | 180 |
| லீக்ஸ் | 180 | 200 | 180 | 200 | 240 | 280 | 200 |
| பீற்றூட் | 120 | 200 | 150 | 150 | 190 | 200 | 160 |
| கறிமிளகாய் | 200 | 200 | 240 | 240 | 240 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 150 | 240 | 200 | 280 | 400 |
| போஞ்சி | 300 | 400 | 200 | 280 | 280 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 170 | 200 | 200 | 240 | — |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 30 | 50 | 50 | 50 | 40 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 | 300 | 300 | 250 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 40 | 25-35 | 20-25 | 40 |
| இராசவள்ளி | 150 | 300 | 120 | 240 | 160 | 240 | 260 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | 280 | — | — | 300 |
| முள்ளங்கி | 100 | 200 | — | 150 | — | 120 | 150 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 120 | — | 80 | 120 | 100 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ரணில் விக்கிரம சிங்க புதிய பிரதமரானார் 201

விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதில் அரசுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள அந்த அம்சத்தை (2 ஆவது பிரிவு) நீக்க வேண்டும். அப்போதுதான் சமரசப் பேச்சு வார்த்தைகளை தொடங்க முடியும்.

இவ்வாறு பாலசிங்கம் கூறினார்.

### புதிய அமைச்சரவை பதவியேற்பு

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை 14.01.2001 அன்று பதவியேற்றது.

இந்தப் புதிய அமைச்சரவையில் 19 பேர் காபினெட் அமைச்சர்களாகவும் 20 பேர் ஜீனியர் மந்திரிகளாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஜனாதிபதி மாளிகையில் பதவியேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

ஜனாதிபதி சந்திரிகா இடதுசாரி கட்சிகளான ஜனதா விமுக்தி பெரமுனாவின் ஆதரவுடன் தனது ஆட்சியைப் பாதுகாக்க இப்புதிய அமைச்சரவையை அமைத்தார்.

பழைய அமச்சரவையில் பதவி வகித்த 4 மந்திரிகள் இராஜினாமா செய்து விட்டனர்.

### தொண்டமான்

அமைச்சரவையின் முக்கிய பொறுப்புக்களான நிதி, பாதுகாப்பு ஆகியவற்றை சந்திரிகாவே வைத்துக் கொண்டார்.

பதவி விலகிய 4 அமைச்சர்கள் தவிர மூத்த அமைச்சர்கள் மீண்டும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

ஆனால் சந்திரிகாவின் புதிய அமைச்சரவையின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான தொண்டமானுக்குப் பதவி வழங்கப் படவில்லை.

இவர் நாட்டில் இந்திய வம்சாவழித் தமிழர்களான தோட்டத் தொழிலாளருக்காகப் பாடுபட்டவர்.

ஆளும் கட்சியின் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவரும் அமைச்சரவையில் இடம் பெற்றனர்.

பாராளுமன்றத் தேர்தலில் சந்திரிகாவின் ஆளும் மக்கள் கூட்டணி தோல்வியடைந்தது. ஐக்கிய தேசிய கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார்.

ஜனாதிபதி சந்திரிகா அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர். அதில் அரசு கவிழும் ஆபத்து ஏற்பட்டதால் 2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டுத் திடீர் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்திற்கு 5.12.2001 அன்று தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

### 29 கட்சிகள்

இந்தத் தேர்தலில் 29 அரசியல் கட்சிகள் போட்டியிட்டன. 99 சுயேட்சை வேட்பாளர்களும் களத்தில் உள்ளனர்.

மொத்தம் 5 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். 1 கோடியே 87. இலட்சம் பேர் வாக்காளர்கள்.

பல்வேறு அரசியல் கட்சிகள் போட்டியிட்ட போதும் சந்திரிகா தலைமையிலான மக்கள் கூட்டணிக்கும் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே தான் கடும் போட்டி நிலவியது.

தேர்தல் தொடர்பான வன்முறைக்கு 5 வாரத்தில் 41 பேர் பலியானார்கள் 700 பேர் காயம் அடைந்தனர் இதனால் இலங்கையிலுள்ள 10 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### வாக்குப் பதிவு

தேர்தலுக்கான வாக்குப் பதிவு 5 ஆம் திகதி காலை 7 மணிக்குத் தொடங்கியது.

தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதி தவிர இதர இடங்களில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடந்தது. மாலை 4 மணிக்கு வாக்குப் பதிவு முடிவடைந்தது. சுமார் 60 சதவீத வாக்குகள் பதிவானதாக அறிவிக்கபர்பட்டது.

### தமிழர்களுக்குத் தடை

விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டிலுள்ள தமிழர்களை வாக்குப் போட அனுமதிக்காததால் விடுதலைப் புலிகள் வன்முறையில் ஈடுபடுவார்கள் என்ற அச்சம் நிலிவயதால் இராணுவத்தினர் தமிழர்களை வாக்குப் போட அனுமதிக்கவில்லை. இதனால் 85 ஆயிரம் தமிழர்கள் வாக்குப் போடவில்லை.

### 7 பேர் சுட்டுக் கொலை

தேர்தலுக்கு முன்தினம் நடந்த வன்முறையில் பல்வேறு பகுதிகளில் 4 பேர் கொல்லப்பட்டனர். அநுராதபுரப் பகுதியில் 40 இடங்களில் தீ வைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

தேர்தலின்போது வாக்காளர்களை விரட்டுவது வாக்குத் சீட்டுக்களைக் கிழிப்பது போன்ற முறைகேடுகள் நடந்தன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள் 7 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கண்டியருகே உள்ள மத்திய தலை நகரில் தேர்தல் முடிந்து வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

வாக்குப் பெட்டிகள் சென்ற அரசு வாகனத்தைத் தொடர்ந்து அவர்கள் ஒரு வாகனத்தில் செல்லும் போது அடையாளம் தெரியாத ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில் இந்தச் சம்பவம் நடந்தது.





(தொடரும்)

## மாணவிக்கு இரண்டாமிடம்



வடமாகாண மட்ட தமிழ் மொழித்தின வாசிப்புப் போட்டியில் பிரிவு I ஒன்றில் இரண்டாமிடத்தினைவடமராட்சிகல்வி வலயத்திற்குட்பட்டகரவெட்டிவிக்னேஸ்வர ஆரம்பப் பாடசாலை மாணவி கஜதாரணி ரவீந்திரா பெற்றுள்ளார். (இ-5-60)

## பயிற்சி வகுப்பு

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்பு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் செயற்பட்டு மகிழ்வோம் செயற்றிட்டம் தரம் 3,4 இற்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது இழந்து கொள்ளுமாறு தெரிவித்த யாழ்.வலயகல்வி முகாமைத் துவ பிரதிப் பணிப்பாளர் ஏ.அகிலதாஸ், கலந்து கொள்கின்ற ஆசிரியர்கள் பயிற்சியின்போது அணியவேண்டிய பொருத்தமான உடை, சப்பாத்துடன்வருகைதரவேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார். (இ-136)

## அரசியல்வாதிகள் ஊடகக் கண்காட்சி

# தகரத்துண்டுகூட தரப்படவில்லை

### சாலாவ் மக்கள் விசனம்



(கொழும்பு)

**இராணுவ முகாமில் ஏற்பட்ட தீ விபத்தினால் சேதமடைந்த எமது வீடுகளைப் பார்க்க எந்தவொரு அரசியல் வாதிகளும் இதுவரையில் வரவில்லை. தற்காலிக வீடொன்றில் வசிப்பதற்கு ஒரு தகரத் துண்டையாவது எவரும் எங்களுக்குத் தரவில்லையென சாலாவ பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

நாம் பல வருடங்கள் சம்பாதித்து சேமித்து வைத்த சொத்துக்கள் அனைத்தும் அழிந்து போயின. பக்கத்தில் இருக்கும் இராணுவ கிராமத்தைப் பற்றி மாத்திரமே இராணுவத்தினர் குறைகளைக் கண்டறிகின்றனர். அவர்கள் இராணுவத்தில் இருந்தவர்கள் என்பதனால், அதிகம் கவனம் செலுத்துகின்றனர்.

எம்மைப் பார்ப்பதற்கு யாரும் வரவில்லை. தறபொழுது எங்களுக்கு இருக்க இடமில்லை.எமது கவலையைக் கேட்க யாரும் இல்லை.

அரச அதிகாரிகள் வாகனங்களில் வந்து ஊடகக் கண்காட்சியை நடத்தி விட்டுச் செல்கின்றனர்.

தற்காலிகமாக இருப்பதற்கு ஒரு வீட்டையேனும் செய்து தரவில்லை.

முருதகம, கடியகம, ஆனந்தகம உட்பட பல கிராமங்களிலுள்ள மக்கள் இன்று வீடின்றி வீதியில் உள்ளனர்.

எமக்கு உண்ணக் குடிக்க மாத்திரம் கொஞ்சம் தருகின்றனர். வேறு எதுவும் கிடைக்கவில்லையெனவும் சாலாவ கிராமவாசிகள் தங்களது கவலையைத் தெரிவித்துள்ளனர். (இ-10)

## கலந்துரையாடல்

யாழ்.வயாவிளான் மானம்பிராய் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் ஆலயப் புனரமைப்பு தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணியளவில் வயாவிளான் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (இ-5)

## ஆண்டு நிறைவும் ஒன்று கூடலும்

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத் திறனாளிகள் சமூக வள நிலையத்தின் ஆண்டு நிறைவு விழாவும், அங்கத்தவர் ஒன்று கூடல் நிகழ்வும் நாளை மறுதினம் பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கருவி மாற்றுத் திறனாளிகள் சமூகவள நிலையச் செயலாளர் து.யசிந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர ஆணையாளர் பி.வாகீசன் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவைத் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர்வைரவநாதன் செல்வம், கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளர் எஸ்.ஸ்ரீக்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 746

சர்மிலா




நண்பா...! மனித நேயம்....!!
வாழ்க்கை வாழ்வதற்கே... மனிதநேய மனிதருக்கு பாராட்டுக்கள்

தர்மா




உற்றுப் பாருங்கள் ஒரு அதிசயம் இருக்கு


ரதி





மது




நிஷா



தர்சினி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## வித்தகம் நல்லூரில்

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் வித்தகம் நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் இடம்பெறும்.

இதன்போது தலைமையுரையினை யாழ்.போதனா வைத்தியசாலைச் செயலாளர் செ.பிரசாத் நிகழ்த்தவுள்ளார். கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவராகப்பங்கேற்கும்விவாத அரங்கும் இடம் பெறும்.

இவ் விவாத அரங்கில் பேராசிரியர் தி.வேல்நம்பி ''யானோ அரசன்'' என்ற பாண்டியனே என்ற தலைப்பிலும் ந.விஜயசுந்தரம் ''தருமம் தான் சலியாதோ'' என்ற மனுநீதிச் சோழனே என்ற தலைப்பிலும் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் ''தத்தா நமர்'' என்ற மெய்ப் பொருள்நாயனாரேஎன்ற தலை ப்பிலும் விவாதங்களை நடத்தவுள்ளனர்.(இ-5)

## இரத்ததான முகாம்

நவக்கிரி சித்த மருந்தகப் பிரிவு நடத்தும் இரத்ததான முகாம் ஒன்று நாளை மறுதினம்ஞாயிற்றுக்கிழமைகாலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை கோப்பாய் வடக்கு முதியோர் சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

இவ் இரத்ததான முகாமில் கோப்பாய் முதியோர் சங்கத்திற்குட்பட்ட அனைத்து முதியோர்களையும் கலந்து கொள்ளுமாறு முதியோர் சங்கச் செயலாளர் என்.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (இ-5-134)

# திக்கம் வடிசாலையினை நிரந்தரமாக மூட முயற்சி

திக்கம் வடிசாலையினை மீள இயக்குவதற்கான முயற்சிகள்நடைபெற்றுவரும்நிலையில் அதனை முடக்குவதற்கான முயற்சியில் சிலர் ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வடமராட்சிப்பகுதியில்உள்ள திக்கம்வடிசாலையினைநம்பி இரண்டாயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் உள்ளனர். இதனை மீள இயக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அது முடியாமல் போனது.

அதன்பின்னர்வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயின் கவனத்திற்கு கொண்டு வருவதையடுத்து திக்கம் வடிசாலைக்கு விஜயம் செய்த ஆளுநர் அப்பகுதியைப் பார்வையிட்டு அதனை இயக்குவதற்கான முயற்சியில் ஈடுபடுவதாகவும் அப்பகுதியைச் சேர்ந்த மக்களிடம் கலந்துரையாட இருப்பதாகவும் அதற்கு ஒருநாள் ஒதுக்கித் தருவதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் வடிசாலையினை மீள இயங்க விடாமல் தடுப்பதற்காக சிலர் செயற்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

இவ்வாறு தென்பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிற்கு 1134 கிலோக்கிராம் இரும்பு விற்பனை செய்யப்பட்டுள்ளமை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. மேலும் அங்கிருந்த 5000 வெற்றுப் போத்தல்களும் விற்பனை செய் யப்பட்டுள்ளமைநம்பத்தகுந்தவட்டாரங்கள்மூலம்தெரிய வருகிறது

1134 கிலோக்கிராம் இரும்பு 10900 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. லொறி ஒன்றின் மூலம் முஸ்லிம் இன வர்த்தகர் இரும்பைக் கொழும்புக்கு எடுத் துச் சென்றுள்ளார்.

அதற்கு மறுநாள் 5000 வெற்றுப் போத்தல்களும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

வடிசாலையினைத் திறக்கும் முயற்சிகள் நடைபெ றும் வேளையில் இவற்றை விற்பனை செய்து திறக்கும் முயற்சியை தடுப்பதற்கான வழிகள் இடம்பெற்று வருவது வேதனைக்குரியது என வடிசாலையினை நம்பி இருப்போர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-5-60)

# யாழ்.அரச அதிபர் உள்ளிட்ட குழுவினர் வாதரவத்தை கிராமத்திற்கு விஜயம்



யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன்,யாழ்.மாவட்ட காணி மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் உள்ளிட்ட குழுவினர் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வாதரவத்தை கிராமத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை நேற்றைய தினம் மேற்கொண்டிருந்தனர்.இதன்போது அக்கிராமமக்களைச் சந்தித்து மக்களின் குறைகளை கேட்டறிந்து கொண்ட அக்குழுவினர் யாழ்.வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு சென்று பாடசாலையை பார்வையிட்டதுடன் கிராமத்தின் பல இடங்களையும் சென்று பார்வையிட்டனர்.

# இரவு 9 மணிக்குப்பின் கூடினால் விசாரணைகளின்றி உடன் கைது

## நெல்லியடிப் பொலிஸார் அறிவிப்பு

இரவு வேளைகளில் குறிப்பாக 9 மணிக்குப் பின்னர் வீதிகளில்தேவை யற்றுக் கூடுபவர்கள் எந்தவொரு விசாரணைகளுமின்றி கைது செய்யப்படுவர் என நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.பி.பிரியந்த அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

யாழ். குடா நாட்டில் அண்மைக்காலமாகக் கொள்ளைகள், வாள் வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்தி பொது மக்களின்பாதுகாப்பினைஉறுதிப்படுத்தவேண்டியது பொலிஸாரினது கடமையாகும்.

இரவு வேளைகளில் சந்திகள், மதகுகள், சந்தைகளின் சுற்றாடல்களில் தேவைய ற்று நிற்போர் சட்டவிரோத நடவடிக்கைளில் ஈடு பட்டு வருவதாக பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இரவு 9 மணிக்கு பின்னர் தேவையற்ற விதத்தில் சந்திகள், மதகுகள், சந்தை சுற்றுப் புறங்கள், வீதிகளில் கூடுவோர் உடனடியாக கைது செய்யப்படுவர் எனப் பொறுப்பதிகாரி கூறினார்.

மேலும்முன்னர்தேவையற்று வீதிகளில் நின்ற சிலர் கைது செய்யப்பட்டு பெற்றோர் அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப்பட்டனர்.

எனவே தேவையற்று வீதிகளில் நின்று வீண் வம்பு அளப்போர்,பெண்கள்ளகேலி செய்வோர் என வீதிகளில் தேவையற்று நிற்போர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்துவதன் மூலம் குற்றச் செயல்கள் குறைக்கப்படும் எனவும் பொறுப்பதிகாரி மேலும் கூறினார். (இ-5-60)

# தொடரும் கைது நடவடிக்கை; அச்சத்தில் தமிழக மீனவர்கள்

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 6 பேர் கச்சதீவு கடற்பரப்பில் வைத்து, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம், தங்கச்சிமடம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த 6 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இவர்களிடமிருந்து ஒரு படகு கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கச்சதீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் 600 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடி நடவ டிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். 3 சிறிய ரோந்து கப்பல்களில் வந்த இலங்கை கடற்படையினர் அவர்களை எசசரித்துள்ளதுடன் 6 பேரை கைது செய்துள்ளனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்த மற்றைய மீனவர்கள் தாங்களும் சிறைபிடிக்கப் படுவோமோ என்ற. அச்சத்தில் கரை திரும்பியுள்ளனர்.

இதுகுறித்து கரை திரும்பிய மீனவர்கள் கூறுகையில், நாங்கள் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற படையினர் அங்கு வந்து எங்களை எச்சரித்தனர். இதனால் நாங்கள் மீன்பிடிப்பதை நிறுத்தி விட்டு திரும்பும்போது, 6 மனவர்களையும் ஒரு விசைப்படகையும் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து சென்றனர்.

தொடர்ந்து இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதால் மீன் பிடித் தொழில் செய்ய முடியவில்லை. இதனால் எங்கள் குடும்பங்கள் வறுமையில் தவித்து வருகின்றன. இதற்கு எப்போது தான் விடிவு காலம் பிறகும் என்று தெரியவில்லை என மீனவர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன, (இ-10)

# நான்கு ஈழ அகதிகள் போராட்டம்

தமிழகம் - திருச்சி சிறப்பு தடுப்பு முகாமில் உள்ள நானகு ஈழ அகதிகளின் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று வியாழக்கிழமை இரண்டாவது நாளாக தொடர்ந்தது.

தமது குடும்பங்களுடன் இணைந்து வாழ அனுமதிக்குமாறு கோரி, குறித்த அகதிகள் நேற்றுமுன் தினம் புதன்கிழமை முதல் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமிழகத்திற்கு அகதிகளாக வந்த ஈழத் தமிழர்களில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட வழக்கிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான வழக்கிலும் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின்னர், இவர்களை நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது.

எனினும், சிறை வாசலில் வைத்து மீண்டும் கைது செய்யப்பட்டு சிறப்பு முகாம் எனும் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், குடும்பத்தில் இருந்தும் தனிமைப்படுத்தி கடந்த சில வருடங்களாக அடைக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக தங்களை நம்பியிருக்கும் குடும்ப உறுப்பினர்களே பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள ஈழ அகதிகள், தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் விடுத்துள்ளனர்.

எனினும் தமது போராட்டத்திற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை எனவும், பதில் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனவும் குறித்த ஈழ அகதிகள் அறிவித்துள்ளனர்.

ஸ்ரீ சுவராஜா, செந்தில் குமார், பிரதீபன், சந்திரன் ஆகியோரே இவ்வாறு சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (இ-10)



தாவடி, ஸ்ரீ காளியம்பாள் சனசமூக நிலையமும் கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கமும் இணைந்து நடத்திய தாவடி ஸ்ரீகாளியம்பாள் முன்பள்ளி விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலையத்தைச் சேர்ந்த பா.வதைரன் தலைமையில் தாவடி தெற்கு அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினராக ஜே/192 பிரிவு கிராம உத்தியோகத்தர் திருமதி கே.சபாநாயகமும் கலந்து கொண்டார். (படங்கள்-கிஷோர்)

# பல்குழல் ரொக்கெட்டுக்களை இலங்கைக்கு விற்பனை செய்ய இரண்டு நாடுகள் மறுப்பு

(கொழும்பு)—

**இலங்கை இராணுவத்தினருக்குத் தேவையான பல்குழல் (மல்டிபெரல்) ரொக்கெட்டுக்களை விற்பனை செய்வதற்கு இரண்டு நாடுகள் மறுப்புத் தெரிவித்துள்ளன.**

அண்மையில் அவிசாவளை அருகே சாலாவ இராணுவக் களஞ்சியம் வெடித்துச் சிதறியதில் அங்கிருந்து அனைத்து வகை ஆயுதங்களும் அழிந்து போயுள்ளன.

அதிலும் குறிப்பாக அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 20 ஆயிரம் கிராட் ரொக்கெட்டுக்கள் முற்றாக அழிந்துள்ளன. இந்த வகை ரொக்கெட் எறிகணைகள் மல்டிபெரல் கனரக பீரங்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் ரொக்கெட் வகையாகும்.

விடுதலைப் புலிகளுடனான இறுதிப் போரின் போது இராணுவத்தினரின் கை ஓங்கி நிற்பதற்கு மல்டிபெரல் தாக்குதல்களே காரணமாக இருந்திருந்தன.

இந்நிலையில் இறுதிப் போரின் போது இராணுவத்தினர் பொதுமக்கள் மீது கனரக ஆயுதங்களை பயன்படுத்தியதாக ஜெனிவாவில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டினை அடுத்து ஐரோப்பிய ஒன்றியம் தனது அங்கத்துவ நாடுகள் இலங்கைக்கு கிராட் ரொக்கெட்டுக்களை விற்பனை செய்வதற்குத் தடைவிதித்துள்ளது.


இலங்கை இராணுவத்தினர் இதுவரை காலமும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளான செக் குடியரசு மற்றும் ஸ்லோவாக்கியா நாடுகளிலிருந்தே கிராட் ரொக்கெட்டுகளைப் பெற்று வந்திருந்தனர்.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை காரணமாக குறித்த நாடுகள் இலங்கைக்கு கிராட் ரொக்கெட்டுக்களை விற்பனை செய்வதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளன.

இதன்காரணமாக இலங்கை இராணுவத்தினரின் ஆயுத வலிமையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (இ-10)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியராக இணைய அரிய வாய்ப்பு

## வைத்தியசாலை பணிப்பாளரின் வேண்டுகோள்



2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் உயர்தரக் கல்வியினை பூர்த்தி செய்த மாணவர்கள் ஓர் அரச நியமனம் பெறவும் அரச சேவையிலிருந்து கொண்டே ஓர் பட்டதாரியாக வருவதற்கும் அரியதோர் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனை எமது பிரதேச மாணவர்கள் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் எமது பிரதேசத்திலேயே மனங்கவர் கொடுப்பனவுடைய அரச தொழில் பெற சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. பயிற்சிக்காலத்திலும் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிந்தவுடனேயே அரச நியமனம் பெறவும் வாய்ப்புள்ளது.

தற்போது சுகாதார அமைச்சினால் அரச தாதிய சேவைக்காக தாதிய மாணவர்களினை இணைப்பதற்கு 03.06.2016 வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அனைத்து புத்தகசாலைகளிலும் தாதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் விற்பனையாகின்றன.

விண்ணப்பங்களின் முடிவுத் திகதி:- 2016.06.24 என்பதுடன் இதற்கான தகைமைகளாக,

1.2014 அல்லது 2015 ஆம் ஆண்டுகளில் க.பொ.த (உ/த)பரீட்சையில் உயிரியல், பௌதீக விஞ்ஞான பாடத்தில் 3 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த(சா/த) பரீட்சையில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

2.வயதெல்லை 18 வயதிலிருந்து 28 வயது வரை,

3.உயரம்:- 4'10'' ஆகும்

4.அத்துடன் திருமணமாகாத ஒருவராகவும் இருத்தல் வேண்டும்.

இப்பயிற்சிக்காக 95 சதவீதம் பெண்களும் 5 சதவீதம் ஆண்களும் தெரிவு செய்யப்படுவர்.

இத்தாதிய மாணவர்களுக்கு 3 வருட பயிற்சியின் போது மாதாந்த பயிற்சிப் படியாக 30 ஆயிரம் ரூபாவினை படித்துக்கொண்டு பணம் சம்பாதித்து கொள்ளும் அரிய வாய்ப்புமுள்ளது.

அத்துடன் பாதுகாப்புடன் கூடிய தங்குமிட, உணவு வசதிகளும் வழங்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி வட-கிழக்கு மாகாணங்களிலுள்ள தகுதியுடைய மாணவர்கள் ஒவ்வொருவரும் எமது பிரதேசத்திலேயே பயின்று எமது பிரதேசத்திலேயே அரச தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் வாய்ப்பும் உள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலையானது இலங்கையிலேயே சிறந்த ஓர் தாதிய பயிற்சிக்கல்லூரியினையும் வளவாளர்களினையும் கொண்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது 200 வரையான தாதிய வெற்றிடங்கள் உள்ளதால் தாதிய மாணவ பயிற்சியினை 3 வருடத்தினுள் முடித்தவுடனேயே இங்கேயே தாதியராக நியமனம் பெறுவதற்கான வாய்ப்புக்களுண்டு.

தற்போது வடக்கு மாகாணத்தில் ஓர் தனித்துவமான போதனா வைத்தியசாலையாக திகழும் போதனா வைத்தியசாலையானது வடக்கிலுள்ள ஏறத்தாழ 1.2 மில்லியன் மக்களுக்கான சுகாதார சேவையினை வழங்கி வருவதுடன், தாதியராக வருவதற்கான அடிப்படைப் பயிற்சிகளினை வழங்கும் ஓர் சிறந்த தாதிய பயிற்சி கல்லூரியினையும் கொண்டுள்ளது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நீண்டகாலமாக 407 ஆக இருந்த தாதிய ஆளணியின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையானது தற்போது 3 மாதங்களுக்கு முன்னர் 607 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் வைத்தியசாலையில் தற்போது ஏறத்தாழ 200 தாதிய வெற்றிடங்கள் தோனறியுள்ளன.

இன்னும் ஒரு சில வருடங்களில் தாதிய சேவைக் காக அனுமதிக்கப்படும் ஆளணியினரின் எண்ணிக்கையானது பெருமளவில் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் மிக விரைவாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் விசேட சிகிச்சைப் பிரிவுகளாக நரம்பியல் சத்திரசிகிச்சைப்பிரிவு, இருதய சத்திரசிகிச்சைப் பிரிவு, சிறுநீரக மாற்றுச் சததிரசிகிச்சைப்பிரிவு எனபன ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதனால் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு மேலும் அதிகளவில் தாதியர்கள் இணைக்கப்படக் கூடிய வாய்ப்பு காணப்படுகிறது. எனவே எமது பிரதேசத்தில் எமது மக்களுக்கு இவ்வைத்தியசாலையிலே இணைந்து தாதியராகக்கடமையாற்றும் சந்தர்ப்பம் உயர்தரத்தில் விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தாதிய சேவையை புனிதமான சேவையாக கருதுவதால் இவர்களுக்கு ஏனைய சேவையினரைப் போலல்லாது விசேட அதிகரித்த சம்பள கொடுப்பனவுகள் பயிற்சிக்காலத்திலிருந்து வழங்கப்படுகின்றன.

அத்துடன் அரச தாதியராக கடமையாற்றிக் கொண்டே ஓர் விஞ்ஞானமாணி தாதிய பட்டதாரியாக வருவதற்கான வாய்ப்புக்களையும் வழங்கும் முகமாக அரசாங்கத்தினால் ஒவ்வொரு ஆண்டும் விசேட கல்வி விடுப்புக்கள் வழங்கப்படுகின்றன. இதனால் அரச தொழிலில் ஈடுபட்டுக்கொண்டே இளம் வயதில் பட்டதாரியாக வருவதற்கான வாய்ப்பும் காணப்படுகிறது.

எனவே வட-கிழக்கிலுள்ள க.பொ.த (உ/த) விஞ்ஞான பாடத்தில் 3 பாடத்தில் சித்தி பெற்ற ஒவ்வொருவரும் இவ் அரிய சந்தர்ப்பமான பயிற்சிக் காலத்திலேயே அதிகூடிய கொடுப்பனவு, பயிற்சி முடிந்தவுடன் எமது பிரதேசத்திலேயே அரச தொழில் வாய்ப்பு மற்றும் இளம் வயதிலேயே அரச தொழிலுடன் ஓர் பட்டதாரியாக மாறும் வாய்ப்பு என்பனவற்றினை நழுவவிடாது மாணவ தாதியர்களினை இணைப்பதற்கான விண்ணப்பங்களினைப் புத்தகசாலைகளில் பெற்று விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்.(இ)

**Dr.த.சத்தியமூர்த்தி**
**பணிப்பாளர்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

# செய்தித்துளிகள்

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை மஞ்சத்திருவிழாவும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை கைலாய வாகனத்திருவிழாவும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் 19 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை தேர்த்திருவிழாவும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (இ-5)

## அருளுரை இனி வெள்ளியில்

இதுவரை யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத் சைதன்யாவினால் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் நடைபெற்று வந்த அருளுரை இன்று முதல் வாரந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வழமை போல் நல்லூரான் வடக்கு வீதி மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 6.30 முதல் 7.30 மணி வரை நடைபெறும் இவ்வாரத் தலைப்பு 'நாட்டத்தில் நின்று பயின்றாடும் நாதனே என்பதாகும்'.(இ-10)

## தொகை மதிப்பீட்டுச் செயலமர்வு

யாழ்.புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியில் கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கு இடையேயான தொகை மதிப்பீட்டு செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெறும்.

இச் செயலமர்வில் பாடசாலை அதிபர் உட்பட ஒரு ஆசிரியர் தவறாது பங்கேற்க வேண்டும் என அறிவிககப்பட்டுள்ளது. (இ-136)

## தங்கச் சங்கிலி வைத்தியசாலையில்

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் பென்ரனுடனான தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-10)

## இரண்டாயிரம் கிலோ சந்தன மரக்குற்றிகள் கைப்பற்றல்

அம்பாந்தோட்டை, ரொடவல பிரதேசத்தில் சட்ட விரோதமான முறையில் சந்தன மரக்குற்றிகளை விற்பனைக்காக வைத்திருந்த இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை, பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, 2 ஆயிரம் கிலோகிராம் இற்கும் மேற்பட்ட வெள்ளைச் சந்தன மரக்கட்டைகள் பொலிஸரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-10)

## மதுபான உற்பத்திக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை

மதுபானம் உற்பத்தி செய்வதற்காக எந்தவொரு அனுமதிப்பத்திரமும் அண்மையில் வழங்கப்படவில்லை என மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் எல்.கே.ஜீ.குணவர்தன தெரிவித்துள்ளார். (இ-10)

## மரம் முறிந்து விழுந்ததில் 6 வீடுகளுக்குச் சேதம் 40 பேர் வெளியேற்றம்

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெட்டபுலா கடியன்லென தோட்டத்தில் பழைமைவாய்ந்த மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் 6 வீடுகள் சேதமாகியுள்ளன. இதில் மூன்று வீடுகள் முற்றாகவும், மேலும் மூன்று வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

அத்தோடு பாதிக்கப்பட்ட 6 குடும்பங்களை சேர்ந்த 40 பேர் தற்காலிகமாக தோட்ட கலாசார மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (இ-10)

## சிறுமி கர்ப்பம்; இளைஞன் கைது

பதினான்கு வயதுடைய சிறுமியை கர்ப்பிணியாக்கிய 23 வயது இளைஞன் அப்புத்தளைப் பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அப்புத்தளைப் பகுதியின் இதல்கஸ்ஹின்ன தோட்டத்தைச் சேர்ந்த 14 வயது நிரம்பிய சிறுமியே இவ்வாறு கர்ப்பிணியாக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக, அப்புத்தளைப் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து, அப்புத்தளை பொலிஸார் இதல்கஸ்ஹின்ன தோட்டத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனை சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளனர். (இ-10)

# தமிழ் சினிமா வரலாறு

## மெக்கானிக் வேலை பார்த்தார் சிவாஜி 180

பெரியாருடன் அறிமுகம்

சரஸ்வதி கான சபா என்ற பெயரில் நாடகக் கம்பெனி யைத் தொடங்க ராதா முடிவு செய்தார். நாடகப் பொருட் களுடன் ஈரோடு சென்றார். அங்கு லட்சுமி காந்தன், விமலா அல்லது விதவையின் கண்ணீர் ஆகிய நாடகங்களை நடத்தலானார்.

திரவிட கழகத் தலைவர் ஈ.வெ.ரா.பெரியாரின் வீட்டு க்குப் பக்கத்தில் தான் ராதா வின் நாடகக் கம்பெனி இருந்தது. பெரியார் வீட்டு க்குப் பேரறிஞர் அண்ணா ஈ.வெ.கி.சம்பத் ஆகியோர் அடிக்கடி வருவார்கள். அவர் களுடன் சிவாஜிக்கு அறி முகம் ஏற்பட்டது. பெரியார் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டார்.

ராதாவின் நாடகக் கம்பெனி ஈரோட்டிலிருந்து பொள்ளாச்சிக்கு சென்றது அப்போது ராதாவுக்கும் அவருடைய பங்கு தாரர்களு க்கும் தகராறு ஏற்பட்டது. நாடகப் பொருட்களுக்கு அவர்கள் தான் முதலீடு செய் திருந்தார்கள். எனவே நாடகக் கம்பெனியை பங்குதாரர்க ளிடம் ஒப்படைத்துவிட்டு ராதா சென்னைக்குச் சென்று விட்டார். நாடகக் கம்பெனி யில் தொடர்ந்து நடிக்க வேண்டிய கட்டாயத்தில் சிவாஜி இருந்தார்.


நாடகக் கம்பனி கேரளா வுக்குச் சென்று பாலைக் காட்டில் முகாமிட்டது. சிறு வேடங்களில் நடித்து வந்த சிவாஜி மனோகரா நாடகத்தில் கதாநாயகனாக- மனோகரனாக நடித்தார்.

இந்த நாடகத்தை கொல்ல ங்கோடு மகாராஜா ஒருநாள் பார்த்தார். சிவாஜியின் நடிப் பைப் பாராட்டி வெள்ளித் தட்டு ஒன்றைப் பரிசளித்தார்.

சிவாஜி கணேசன் சில காலம் பேருந்து கம்பெனியில் மெக்கானிக்காக வேலை பார்த்தார் என்றால் நம்பமுடிய வில்லையல்லவா? ஆனால் அது உண்மை. மாதம் 7 ரூபாய் சம்பளத்தில் அவர் மெக்கானிக் வேலை பார்த்தி ருக்கிறார்.

சிவாஜிகணேசன் நடித்துக் கொண்டிருந்த சரஸ்வதி கானா சபா கொல்லங்கோட்டில் முகாமிட்டிருந்த போது குறு கியகாலம் அவர் நாடக உலகைவிட்டு விலகி இருக்க நேர்ந்தது.

நாடகக் கம்பெனியில்



நடித்துக் கொண்டிருந்த தங்க வேலு என்ற நடிகர் சிவாஜி யின் நெருங்கிய நண்பர் இவரும் திருச்சியைச் சேர்ந்த வர். அவரைப் பார்க்க அவர் தாயார் வந்திருந்தார். நாடக்க கம்பெனியில் மகன் கஷ்ட ப்படுவதைப் பார்க்க சகிக்காத அந்த அம்மா மகனை வீட்டு க்கு அழைத்துக் கொண்டு போய்விடத் தீர்மானித்தார்.

கணேசா நீயும் என்னுடன் வந்து விடு என்று தங்கவேலு அழைத்தார். சிவா ஜிக்கு ஒரு மாறு தல் தேவைப் பட்டது.

எனவே நண்பருடன் கிளம் பத் தயாரானார். தங்க வேலு வின் உறவினர்கள் பொள்ளாச் சியில் இருந்தார்கள். அங்கு சென்று அவர்களி டம் உதவி பெற்றுக் கொண்டு திருச்சி க்குப் போக முடிவு செய்தார் கள்.

காட்டுப் பாதை

கொல்லங்கோட்டையில் இருந்து பொள்ளாச்சிக்கு நடந்தே சென்றார்கள் காட்டுப் பாதையில் 40 மைல் நடக்க வேண்டும். வழியில் பலத்த மழை பிடித்துக் கொண்டது. மழையில் நனைந்து கொண்டே சென்றார்கள்.

வழியில் ஐயோ என்று தங்கவேலு அலறினார். சிவாஜி திரும்பிப் பார்த்தார். தங்க வேலுவின் கால் அருகே பாம்பு ஒன்று நெளி ந்து போய்க் கொண்டிருந்தது.

தங்கவேலுவை பாம்பு கடித்து விட்டது என்பதை சிவாஜி உணர்ந்து கொண் டார். அலறிக் கொண்டிருந்த தங்க வேலுவை துக்கித் தோளில் போட்டுக் கொண் டார். தங்கவேலுவின் தாயா ரையும் அழைத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக அரு கில் உள்ள கிராமத்தை அடைந்தார் அங்கு உள்ள வர்கள் வைத்தியரை அழை த்து தங்கவேலுவுக்கு தகுந்த சிகிச்சை அளித்தார்கள் தங்க வேலு பிழைத்துக் கொண்டார்.

பிறகு கிராம வாசிகளின் உதவியுடன் தங்கவேலும் அவர் தாயாரும் பொள்ளா ச்சிக்குச் சென்று அங்கிருந்து திருச்சிக்குப் போய் சேர்ந் தார்கள். (தொடரும்)


# தீவிரவாதத்தை ஊட்டி வளர்க்கும் பாகிஸ்தான்

# அமெரிக்க பாராளுமன்றில் மோடி குற்றச்சாட்டு

**(வோஷிங்டன்)**

**பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஊட்டி வளர்ப்பதாக அமெ ரிக்க பாராளுமன்றத்தில் இந்திய பிரதமர் நரேந்திரமோடி பர பரப்புக் குற்றச்சாட்டு முன் வைத்துள்ளார்.**





அமெரிக்க பாராளுமன்ற கூட்டு கூட்டத்தில் நேற்று முன்தினம் உரை யாற்றிய இந்திய பிரதமர் மோடியை அந்நாட்டு எம். பிக்கள் எழுந்து நின்று கைதட்டி வரவேற்றனர்.

**6ஆவது பிரதமர்**

ஆப்கானிஸ்தான், கட் டார், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளை தொடர்ந்து பிர தமர் நரேந்திர மோடி அமெ ரிக்காவுக்கு சென்றார். அந் நாட்டு சபாநாயகர் பால்ரியான் ஏற்கனவே விடுத்த அழை ப்பை ஏற்று அவர் நேற்று முன்தினம் அமெரிக்க பாரா ளுமன்ற கூட்டு கூட்டத்தில் உரையாற்ற சென்றார்.

இதன்மூலம், அக் கூட்ட த்தல் உரையாற்றிய 6 ஆவது இந்திய பிரதமர் என்ற பெரு மையை அவர் பெற்றார்.

பாராளுமன்ற மண்டப த்துக்குள் மோடி நுழைந்த போது, அமெரிக்க எம்.பி க்களிடையே உற்சாகம் கரை புரண்டு ஓடியது. அவர்கள் எழுந்து நின்று கைதட்டி வரவேற்றனர். முக்கிய பிரதி நிதிகளுடன் மோடி கைகு லுக்கினார். அவர் மரியா தையுடன் மேடைக்கு அழை த்து செல்லப்பட்டார்.

**அரசியல் சட்டமே புனித நூல்**

பாராளுமன்ற கூட்டு கூட் டத்தில் மோடி மேலும் உரை யாற்றுகையில்,

அமெரிக்க பாராளுமன் றத்தில் பேசுவதற்கு நான் பெருமைப்படுகிறேன். இந்த வாய்ப்பை அளித்த சபாநா யகருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வாய் ப்பை அளித்ததன்மூலம், உலகின் மிகப்பெரிய ஜன நாயக நாடான இந்தியா வையும் அதன் 125 கோடி மக்களையும் நீங்கள் கௌர வப்படுத்தி இருக்கிறீர்கள்.

அரசியல் சட்டமே எங் களது உண்மையான புனித நூல். அதில் மத சுதந்திரம், பேச்சு சுதந்திரம், அனைத்து குடிமக்களுக்கும் சம அந் தஸ்து ஆகியவை அடிப்படை உரிமைகளாக கூறப்பட்டுள்ளன.

சுதந்திரமும் ஜனநாய கமும் சமத்துவமும் நிறை ந்த நவீன இந்தியாவை எங்களது முன்னோர்கள் உருவாக்கினர். இன்று இந்தியா ஒன்றாக வாழ் கிறது, ஒன்றாக வளர்கிறது, ஒன்றாக கொண்டாடுகிறது.

இந்தியாவும் அமெரிக் காவும் கடந்தகால முட்டு க்கட்டைகளை பின்னுக்கு தள்ளிவிட்டு, வருங்காலத்து க்கான அடித்தளத்தை உறு தியுடன் அமைக்க வேண்டும.

**தீவிரவாதம்**

நாம் தீவிரவாதத்தை ஒரே குரலில் எதிர்க்க வேண் டும். தீவிரவாதத்தை முறிய டிக்க இராணுவம், உளவுத் துறை ஆகியவை மட்டும் போதாது.

எல்லா தீவிரவாத இயக் கங்களுமே வெறுப்பை தூண் டுதல், கொலை செய்தல், வன்முறை என்ற ஒரே கொள் கையை கொண்டுள்ளன. எனவே, நல்ல தீவிரவாதி கள், கெட்ட தீவிரவாதிகள் என்று வேறுபடுத்தி பார்க் காமல் அனைத்து அமை ப்புகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தீவிரவாதத்தின் நிழல் உலகம் முழுவதும் பரவி இருந்தாலும், இந்தியாவின் அண்டை நாட்டில் (பாகிஸ் தான்) தீவிரவாதம் ஊட்டி வளர்க்கப்படுகிறது. அரசி யல் ஆதாயத்துக்காக தீவிர வாதத்தை போதிக்கும் அவர் களுக்கு எதிரான நிலைப் பாட்டை எடுத்ததற்காக இந்த பாராளுமன்றத்தை நான் பாராட்டுகிறேன். தீவிரவாதி களுக்கு அடைக்கலம் கொடு த்து ஆதரிப்பவர்களை நாம் தனிமைப்படுத்த வேண்டும.

யோகாவுக்கு நாங்கள் அறிவுசார் சொத்துரிமை கோரவில்லை.

இவ்வாறு பிரதமர் மோடி உரையாற்றினார்.

**எம்.பீக்கள் ஆர்வம்**

மோடியின் உரை 45 நிமிட நேரம் நீடித்தது. அவ ரது பேச்சு அமெரிக்க எம். பிக்களை பெரிதும் கவர் ந்ததால் அவரது பேச்சுக் கிடையே 40 தடவை கைத ட்டினர். சில சமயங்களில், எழுந்து நின்றும் கைதட்டி னர். (இ-10)

முதன் முதலாக நீங்கள் எதையாவது செய்யுங்கள். பின்னால் வருபவர்கள் அதை இன்னும் அழகாகச் செய்வார்கள்.

-பிக்காசோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மண்ணில் வீழ்ந்த குண்டும் எங்களில் புகுந்த குண்டும்

தமிழர்களுக்கும் வெடிகுண்டுகளுக்கும் நிறையவே தொடர்பு உண்டு என்பதாக நிலைமை உள்ளது.

கடந்த முப்பது ஆண்டு காலத்தில் எங்கள் தமிழர் தாயகம் குண்டு மழையில் நொருங்குண்டு போனது. எங்கிருந்து குண்டு வீசினாலும் அது தமிழன் தலையில் வீழ்ந்தால் சரி என்பதே அரசினதும் படைத்தளபதிகளினதும் நிலைப்பாடாக இருந்தது.

தரை, வான், கடல் என்ற மூன்று வழிகளிலும் இருந்து ஏவப்பட்ட குண்டுகள் தமிழர் தாயகத்தில் – தமிழ் மக்களின் குடிமனைகளில் வீழ்ந்து வெடித்து சங்காரம் செய்தன.

யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்து ஏவப்பட்ட செல் ஒன்று திருமண வீட்டில் வீழ்ந்து வெடித்ததில் அந்த இடத்திலேயே மணமகன் இறந்து போன மிகப்பெரும் கொடூரம் நிகழ்ந்தது எனில் ஏவப்பட்ட குண்டுகளின் வெறித்தனம் எத்தன்மையது என்பதை அறிய முடியும்.

இது ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் என வடபுலம் முழுமையிலும் குண்டுகள் புதைக்கப்பட்டதால், நிலத்தில் கால் வைப்பதே முடியாத காரியம் என்றாயிற்று.

இந்தக் கொடூரங்களை எல்லாம் அனுபவித்த நமக்கு என்றோ ஒருநாள் விடிவு கிடைக்கும் என்று நம்பியிருந்த போது, வன்னியில் வீழ்ந்த குண்டுகள் அந்த நம்பிக்கைகளை தகர்த்தெறிந்து எங்கள் உடல்களிலும் புகுந்து கொண்டன.

தமிழர்களுக்கு விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கை மீண்டும் எழாத வகையில் குண்டுகள் தங்கள் துகள்களை தமிழர்களின் உடல்களில் செருகிக் கொண்டனவோ என்று நினைக்கும் அளவில் நிலைமை உள்ளது.

இதேவேளை தமிழ் மக்களின் உடல்களில் நுழைந்து மறைந்துள்ள குண்டுத்துகள்கள் அகற்றப்படாமல் இருப்பது வடபுலத்தில் அகற்றப்படாத இராணுவ முகாம் போன்றதே.

இத்தகைய நிலையில் குண்டு வீச்சில் பாதிக்கப்பட்டு குண்டுச் சிதறல்களை தம் உடலில் தாங்கிய வண்ணம் சதா துன்பப்படுவோருக்கு சிகிச்சை அளித்து குண்டுத் துகள்களை அகற்ற எடுக்கப்படும் நடவடிக்கை உண்மையில் அவசியமானது.

என் உடலில் இருக்கின்ற குண்டுத் தகட்டை அகற்றாததால் என்னால் எழுந்து நடமாட முடியவில்லை என்று ஏங்குவோர் எத்தனைபேர்? இந்தக் கவலைகள் நீக்கப்பட வேண்டும். இதேவேளை போரினால் அங்கவீனமானோரின்– பாதிக்கப்பட்டோரின் எதிர்காலம் பாதுகாக்கப்படுவதற்கான நிவாரணப் பணிகளை அரசு முன்னெடுப்பது மிகவும் அவசியமானது.

இதை செய்வதானது போர் பாதிப்பின் பின் விளைவுகளை குறைப்பதற்கு உதவுவதாக அமையும்.

எனவே நல்லாட்சியில் இந்தப் பணிகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதை அனைத்து அரசியல் தலைமைகளும் உறுதி செய்து கொள்வது நல்லது.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை சனிக்கிழமை **யாழ் பிரதேசத்தில** மயிலங்காடு, குப்பிளான், வில்லூன்றி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், முத்தமிழ் வீதி, குருநகர், பாசையூர் ஒரு பகுதி, பழைய பூங்கா வீதி ஒரு பகுதி, பிரதான வீதி பஸ்ரியன் சந்தியிலிருந்து விஜிதா கபே வரை, பூதர்மடம், கோப்பாய் சந்தி, இருபாலை, வட்டக்குளம், கட்டைப் பிராய், கல்வியன்காடு, ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டு, இராமலிங்கம் சந்தி, கோப்பாய் பொலிஸ், திருநெல்வேலி பாற்பண்ணை, GPS றோட், திருநெல்வேலி சந்தை, SOS சிறுவர் பூங்கா, திருமகள் வீதி, GTZ , நல்லூர், நாவலர் வீதி, மாம்பழ சந்தி, புங்கன்குளம், அரியாலை, DIMO அரியாலை, முள்ளி, பூம்புகார், Cey- Nor பவுண்டேசன் லிமிற்ரெட், யாழ் மாவட்ட கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம், NEFAD பவுண் டேஷன் லிமிற்ரெட், குருநகர் இலங்கை கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகாவித்தியா லயம், நாயன் மார்கட்டு Carlton Sports Network (CSN), யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், ஆளுநர் தங்கும் விடுதி, ஆளுநர் செயலாளர் அலுவலகம், யாழ் மாவட்டச் செயலாளர் அலுவலகம், பெனிசுலா புறப்பர்ட்டி டெவலப் பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட் (துளசிமகால்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம், றக்கா வீதி பிரிட்டிஸ் கவுன்சில்,நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையம், நாவற்குழி சங்கேன் கொன்ஸ்ரக்சன், அம்பலவாணர் வீதி, உடுவில் பிரதேச செயலக வீதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** ஆனந்தபுரம், உதயநகர், தொண்டமாநகர், விவேகானந்தநகர், கிருஸ்ணபுரம், கனகாம்பிகை குளம், இரணைமடு, முறிகண்டி, அறிவியல்நகர், கொக்காவில் விக்கிரம ரட்ண பிறைவேற் லிமிற்ரட், மத்தியவங்கி, இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், MAS Active, யுனிச்செலா, பொறியியல்பீடம், விவசாயபீடம், Corth Cargill's Agri foods, இராணுவ பாசறை I மற்றும் II , இராணுவ பாசறை, 7வது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்திய சாலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** ஒமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, குருமன்காடு பிள்ளையார் கோவிலடி, குருமன் காடு கிராமம், வவுனியா நகரம், வவுனியா வைத்தியசாலை, இலங்கை வங்கி, தொலைத்தொடர்பு நிலையம், வவுனியா நீர்பாசன திணைக்களம், புகையிரத நிலைய வீதி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும்.

(இ-9)

# இணுவில் கந்தசுவாமி கோவில்



இன்று முதலாம் நாள் கொடியேற்றம் (10.06.2016)

**வேல் ஊன்றிய நாயகன்**

பேரெழில் கொஞ்சும் இணுவைக் கந்தனுக்கு
பெரும் குறை தீர்க்கும் இணுவைக் கந்தனுக்கு
வெற்றிலைத் தோட்டத்தின் நடுவிலே
வேரோடி வேல் ஊன்றிய நாயகனுக்கு
நோன்பிருந்து நோய் தீர்க்கும்
நொச்சியோலை நாயகனுக்கு
அருளெனும் அமுதை அடியவர்க்கு அருள்பாலிக்க
அகிலமே சுவடி நிற்கும் ஆறுமுகப் பெருமானுக்கு
பெருவிழா எடுக்கும் இணுவைக் கந்தனுக்கு
இன்று கொடியேற்றத் திருவிழா

இணுவை. V.V.சஜிந்தன்

# ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



இரண்டாம் நாள் (10.06.2016)

செயல்களின் துவக்கமானவனே போற்றி!
தமிழ்க் கடவுளின் தனயனே போற்றி!.
பெற்றோரை உலகமாக்கியவனே போற்றி!
உன் பாதம் பணிந்து வந்தோம் போற்றி!
எமக்கருள் புரிந்திடுவாய் போற்றி போற்றி!

மு.வைஷ்




## தவறைத் திருத்தினால் மன்னிப்பு

❖ இறைவன் தான், தன் அடியார் மீது தெளிவான வசனங்களை இறக்கிக் கொண்டிருக்கின்றான். உங்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் கொண்டு வருவதற்காக! உண்மையாதெனில், இறைவன் உங்கள் மீது மிகுந்த பரிவும் கருணையும் கொண்டவனாயிருக்கின்றான்.

❖ மனிதர்களைப் படைத்து வாழ்வாதாரம் வழங்கியதோடு நின்றுவிடாமல், தன் தூதர்கள் வாயிலாக அவர்களை நேர் வழியில் செலுத்தும் பொறுப்பையும் இறைவனே ஏற்றுக் கொண்டான். நேர்வழியை அருள்வதும் இறைப்பண்புகளில் ஒன்றாகும்.

❖ உங்களின் இறைவன் கருணை பொழிவதைத் தன் மீது கடமையாக்கிக் கொண்டுள்ளான். உங்களில் எவரேனும் அறியாமையால் ஒரு தவறைச் செய்துவிட்டு பின்னர் அதற்காக மன்னிப்புக் கோரி, மேலும் தன்னைத் திருத்திக் கொண்டால் திண்ணமாக இறைவன் (அவரை) மன்னித்து விடுகின்றான் மேலும் அவருடன் இரக்கத்தோடு நடந்து கொள்கின்றான்.

❖ இறைநம்பிக்கையாளர்கள் ஒருவர், மற்றொருவர்க்கு சகோதரர் ஆவார். உங்கள் சகோதரர்களுக்கு இடையில் தொடர்புகளை சீர்படுத்துங்கள்.

**(வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து)**



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## நன்றியுணர்ச்சியுடனிருக்காதே!

எச்சரிக்கை, கவனம் இவ்வார ஞான இதழில் வெடிமருந் துகள் உள்ளன! அது உங்கள் அறிவையோ அல்லது மனதையோ தகர்க்கக்கூடும். உங்கள் மனதைத் தகர்க்குமானால் எதுவுமே மிஞ்சியிருக்காது. உங்கள் அறிவைத் தகர்க்குமானால் எல்லாமே அடைந்து விட்டாய் என்று அர்த்தம்.

ஸ்ரீஸ்ரீ: எத்தனை பேர் நன்றியுணர்ச்சியுடன் இருக்கிறீர்கள்? (எல்லோரும் கைதூக்குகிறார்கள்)

**ஸ்ரீஸ்ரீ:**நீங்கள் நன்றியுடையவர்களானால் நீங்கள் என்னு டையவர்கள் இல்லை (எல்லோருக்கும் அதிர்ச்சி)

யாராவது உனக்கு ஏதாவது கொடுத்தால் நீ நன்றியுடன் இருக்கிறாய். அப்படியானால் நீ அவரிடமிருந்து வேறாக தனித் திருக்கிறாய். நீ உனக்கே நன்றியுடன் இருக்கமாட்டாய். நன்றியு ணர்ச்சியிருந்தால் நீ குருவின் ஓர் பாகமாக இல்லையென்று அர்த்தம்.

**மெய்க்:** உணவை எடுத்துச் சாப்பிட உதவும் உன் கைகளுக்கு நீ நன்றி சொல்ல வேண்டுமென்று உணர்வதில்லை.

**ஏஞ்சலிகா:** சிறு குழந்தைகள் எல்லாவற்றையும் தங்களுடை யதாக நினைக்கும் வரை அவர்கள் நன்றியுணர்வை அறிவதில்லை.

**ஸ்ரீஸ்ரீ:** நீ நன்றியுணர்ச்சிக்கும் அப்பால் செல்லும் போது நான் நீ என்று வித்தியாசமில்லாத ஒன்றிய (ஐக்கிய) உணர்வு ஏற்படுகின்றது. நீ உன் குருவின் அங்கமாக இருக்கிறாய். ஆயிரம் தலைகளும் ஆயிரம் கைகளும் இருந்தாலும் நீ ஒரே இதயத்தைக் கொண்ட இறைவன்.

நன்றியுணர்வு தவிர்க்க முடியாதது. ஞானப்பாதையில் நீ நன்றியுணர்வு உடையவனாக இருக்கவேண்டும். ஆனால் நீ அதையும் விஞ்ச வேண்டும். உன்னில் நன்றியுணர்வு ஏற்படும் பொழுது உனது கவனம் முழுவதும் உன்னிடத்தி லேயே இருக்கிறது. உனக்கு அழகிய கண்பார்வையைக் கொடுத்ததற்காக நீ கடவுளிடம் நன்றி கொள்ளும் பொழுது யார் முக்கியம்? நீயா அல்லது கடவுளா?

நீதான் உனது நன்றியுணர்வு உனது அகந்தையைக் குறைக் கிறது.

**ரிச்சர்டு:** அப்படியென்றால் உங்களிடம் நன்றியுணர்ச்சியில் லையா?

**ஸ்ரீஸ்ரீ:**நான் உத்தமமாயும் முழுமையாயும் இருக்கின்றேன். நன்றியுணர்ச்சியைக் கொண்டிருக்கவேண்டாம். நீங்கள் உயர்ந்து பூரணமாக முழுமையாக இருங்கள். இந்த ஞானம் பக்தியில்லாதவர்களுக்கு அபாயமானதாகும்.

நீ குருவின் அங்கமாகி விட்டபொழுது ஆனந்தம், ஞானம், கடவுளின் முழுப் படைப்பு இவற்றில் உனக்கு முழு உரிமையுண்டு.

**பால்டா:** நண்பர்களுடன் எங்களுக்கு உள்ள உறவும் குருவுடன் உள்ள உறவும் எத்தகையது?

உன் நண்பர்கள் உன்னை இவ்வுலக விடயங்களுடன் கட்டிப் போடுவர். குருவானவர் என்னை தெய்வத்துடன் உன் ஆன்ம சொரூபத்துடன் சேர்ப்பார்.

ஹென்றீசியன் சவால் கிண்ணம்

# கம்பர்மலை யங்கம்பன்ஸை வென்றது இளவாலை சென்ஹென்றீஸ் கல்லூரி



ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் லீக் சுற்று ஆட்டங்கள் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் நடைபெற்ற ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து இளவாலை சென்ஹென்றீஸ் கல்லூரி அணி மோதியது.

பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய போட்டி என்பதனால் அதிக ரசிகர்களின் ஆரவாரத்துடன் களமிறங்கியது சென்ஹென்றீஸ் கல்லூரி அணி.

ஆட்டம் ஆரம்பமாகி நான்காவது நிமிடத்திலேயே ஹென்றீஸ் அணியின் நட்சத்திர வீரர் தனேஸ் கோலடித்து அசத்தினார்.

கடந்த இரு போட்டிகளிலும் எதிர்பார்க்காத ஆட்டம் ஆடி அதிக கோல்களை அடித்து அசத்திய கல்லூரி அணியை இப்போட்டியில் யங்கம்பன்ஸ் அணி கட்டுப்படுத்தியது.

ஆரம்பத்தில் கல்லூரி அணி ஆட்டத்தை வேகப்படுத்தி ஆடிய போதும் கோல் வாய்ப்புக்கள் உருவாகுவதற்கு யங்கம்பன்ஸ் அணியின் பின்களம் அனுமதிக்கவில்லை. குறிப்பாக பின்கள மத்திய வீரர் (centre diffender) பார்த்தீபன் சிறப்பாக ஆடியிருந்தார்.

இரண்டாவது பாதியில் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பை ஏற்படுத்தியது. யங்கம்பன்ஸ் அணியின் முன்கள வீரர்கள் ஆட்டத்தை விரைவுபடுத்தினர். இதனால் யங்கம்பன்ஸ் அணிக்கு கோல் வாய்ப்புக்கள் ஏற்பட்டது. அதனை ஹென்றீஸ் கோல்காப்பாளர் சிறப்பாகத் தடுத்தார்.

இறுதிவரை போராட்ட ஆட்டத்தை வெளிப்படுத்தியது யங்கம்பன்ஸ். இதனால் இறுதி நிமிடம் வரை போட்டி பரபரப்பை ஏற்படுத்தியது. கடைசி நிமிடத்தில் கிடைத்த இலகுவான வாய்ப்பை யங்கம்பன்ஸ் அணி வீரர் ரகுவரன் தவறவிட்டார்.

இறுதியில் 1:0 எனும் கோலடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதி வாய்ப்பை தக்கவைத்தது ஹென்றீஸ் கல்லூரி அணி.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென்ஹென்றீஸ் கல்லூரி அணியின் கோல்காப்பாளர் அமல்ராஜ் தெரிவானார். (க)

# நாமகள் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ்









தெல்லிப்பழை நாமகள் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம்.

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் 53ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டுகழகங்களுக்கு இடையேநடத்திய அணிக்கு 7பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று சம்பியனாகியது.

இப்போட்டியின் ஆட்டநாயனாக நவஜீவன்ஸ் வீரர் சங்கமும் சிறந்த கோல்காப்பாளராக நவஜீவன்ஸ் வீரர் ரஜிவனும் தொடர் ஆட்டநாயகனாக விண்மீன் விளையாட்டுக்கழக வீரர் அமலதாசனும் சிறந்த விளையாட்டுக்கழகமாக உடுப்பிட்டி நவஜீவன்ஸும் அனுபவ வீரராக றோயல் விளையாட்டுக்கழக வீரர் தர்மகுலநாதனும் தெரிவாகினர்.

முன்னர் நடைபெற்ற காட்சிப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்டநேர முடிவில்2:2 என போட்டி சமநிலையில் முடிவுற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து சிறப்பித்திருந்தார்.

சம்பியனான அணிக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் இரண்டாம் இடத்தை பெற்ற அணிக்கு 25ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## இன்றைய போட்டிகள்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்97ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டு யாழ்.உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் திருக்குமரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து எல்லாளன் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஞானகலா விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

✦✦✦✦✦✦✦✦✦✦

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் அடம்பன் ஐக்கியம் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

✦✦✦✦✦✦✦✦✦✦

யாழ்.உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து எல்லாளன் விளையாட்டுக்கழகமும் மாலை 4.45மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குறிஞ்சி குமரன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

# ஞானமுருகன் வெற்றி

இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் 06.06.2016 நடைபெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் வெற்றி பெற்றது.

கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியுடன் நடைபெற்ற போட்டியில் 0-1 என்ற கோல்கணக்கில் ஞானமுருகன் வெற்றி பெற்றது.

ஞானமுருகன் அணியின் நடுக்கள வீரர் சுபாஸ் நீண்ட தூரத்தில் கிடைத்த நேர் உதை வாய்ப்பை அற்புதமாக பயன்படுத்தி கோலாக்கினார்.

தொடர்ந்து கிடைத்த கோல்போடும் சந்தர்ப்பங்களை சிறப்பாக செயற்பட்ட யங்கம்பன்ஸ் கோல்காப்பாளரினால் தடுக்கப்பட்டது.

இந்த வெற்றி மூலம் ஞானமுருகன் அணி லீக் சுற்றுக்கு நுழைந்தது. (க)



நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் இறுதி நாள் நிகழ்வுகள் (05-06-2016) ஞாயிற்றுக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது. இதில் 6 சம்பியன்கள் ஒரு உப சம்பியன் பெற்று 2016 ஆம் ஆண்டுக்கான ஓவரோல் சம்பியனாகியது அரியாலை சரஸ்வதி இளைஞர் கழகம்.

# இரண்டாம் மகிந்தவே மைத்திரி!

## துமிந்த நாகமுவ சாடல்

நாட்டில் வற்வரி அதிகரிப்பின் காரண மாக மக்கள் பெரும் துன்பத்தில் உள்ளதாக வும், ஆனால் அமைச்சர்களின் சொகுசு வாகன கொள்வனவு தொடர்ந்தும் மேற்கொ ள்ளப்படுவதாகவும் முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

கொழும்பு - கோட்டை புகையிரத நிலை யத்தில் வற் வரி அதிகரிப்பிற்கு எதிராக மக்க ளிற்கு துண்டுப்பிரசுரம் வழங்குவதற்கு தொழிலாளர் போராட்ட மத்திய நிலையத் தினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்து கொண்டபின் ஊடகங்களிற்கு கருத்து தெரி விக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட நாக முவ, அமைச்சர்களின் சொகுசு வாகனக் கொள்வனவிற்கான செலவினத்தை குறைப் பதற்கே மக்கள் மீது அதிக வரிச்சுமை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் மகிந்த எதை செய் தாரோ அதனையே மைத்திரியும் தற் போது செய்வதாக குற்றச்சாட்டினார்.



மேலும் மகிந் தவின் இன்னொரு வடிவமாகவே மைத் திரியும் உள்ளதாக முன்னிலை சோசலிசக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் துமிந்த நாகமுவ மேலும் தெரிவித்தார். (செ-12)

## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை கரவெட்டி

## நெல்லியடி நவீன சந்தை புதிய கட்டடத்தொகுதியிலுள்ள கடைகள் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் – 2016

**கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளினை உள்ளூராட்சித் திணைக்களத்தின் 1980/46 ம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஒரே முறையில் செலுத்தக்கூடிய ஆகக் கூடிய கேள்வித் தொகையினை இச் சபைக்கு செலுத்துபவர்களுக்கு ஆனி மாதம் தொடக்கம் வாடகைக் குத்த கைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.**

01. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி :- 24/06/2016.
02. கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி :- 24/06/2016. நண்பகல் 12.00மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 27/06/2016. பி.ப.2.00 மணி.
04. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையானது அரக்கு முத்திரையி டப்படல் வேண்டும். இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடை இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு உரிய காலத்திற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்க்கப்படல் வேண்டும்.
05. கேள்விப் படிவத்தினை தலைமை அலுவலகத்தில் தேசிய அடையாள அட்டையை காண்பித்து உரிய படிவக் கட்டணம், மீளளிக்கப்படும் வைப்புப் பணம் என்பவற்றைச் செலுத்தி பெற்றுக் கொள் ளலாம்.
06. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
07. விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 05 வருடங்களுக்கு ஒரு முறை வாடகைப்பணம் மீளாய்வு செய்யப்படும். இம் மாற்றத்திற்கேற்ப வாடகைக் கட்டணம் மாற்றம் அடையும்.
08. அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் இக் கேள்வி நடைமுறைக் கமைவாக விண்ணப்பிக்கலாம்.
09. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திரக் கேள்விக்காரர் தமது கேள்வித் தொகைக்கு மேலதிகமாக 15 சதவீதம் பெறுமதி சேர்வரியாகவும் (VAT) 02 சதவீதம் தேசத்தை கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT) வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத் துதல் வேண்டும்.
10. மாதாந்த வாடகைப் பணத்தை அடுத்து வரும் மாதம் 10-ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பண மாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப் பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
11. கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் அட்டவணைப் படுத்தப்பட்டோர் அல்லது இச் சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாக நிலுவையில் உள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்ற வராவார்.
12. குத்தகைக்கு பெற்ற கடையின் மின்சார இணைப்புக் கட்டணங்கள் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.

**மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

**கேள்வி அட்டவணை**

| தொ. இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| UPPER FLOOR | | | | | |
| 15 | UF15 | 920,550.00 | 9,250.00 | 1,000.00 | 4,250.00 |
| 16 | UF16 | 920,550.00 | 9,250.00 | 1,000.00 | 4,250.00 |
| 17 | UF17 | 920,550.00 | 9,250.00 | 1,000.00 | 4,250.00 |
| 18 | UF18 | 703,950.00 | 7,050.00 | 1,000.00 | 3,250:00 |
| 19 | UF19 | 703,950.00 | 7,050.00 | 1,000.00 | 3,250.00 |
| 20 | UF20 | 703,950.00 | 7,050.00 | 1,000.00 | 3,250.00 |
| 21 | UF21 | 703,950.00 | 7,050.00 | 1,000.00 | 3,250.00 |
| 22 | UF22 | 649,800.00 | 6,500.00 | 1,000.00 | 3,000.00 |
| 23 | UF23 | 433,200.00 | 4,500.00 | 1,000.00 | 2,000.00 |
| 24 | UF24 | 433,200.00 | 4,500.00 | 1,000.00 | 2,000.00 |
| 26 | UF26 | 649,800.00 | 6,500.00 | 1,000.00 | 3,000.00 |
| 27 | UF27 | 649,800.00 | 6,500.00 | 1,000.00 | 3,000.00 |

அ.வினோராஜ்
செயலாளர்,
வடமராட்சி தெற்கு,மேற்கு
பிரதேச சபை, கரவெட்டி.
09/06/2016 (சி-4855)

## இராணுவம் இருப்பதால்தான்...

ற்றடாது உள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்திருந்த கருத்திற்கு பதில் தெரிவிக்கையிலேயே முதல மைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா, மன்னார்,முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான துறை சார் கூட்டம் வவுனியா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவல கத்தில் நேற்று இடம்பெற்றது.

அதில் பங்கேற்ற முதலமைச்சர் அங்கு உரையாற்றுகையில்,

எம்முள் சிலரின் கடந்த கால வாழ்க்கை முறையும் தற்கால நடை முறைகளும் சற்று வேறுபட வேண்டும். வட மாகாணசபை வர முன்னிருந்த காலம் வித்தியாசமானது. இப்பொழுது மக்களே மக்களை ஆளுங் காலம். ஆகவே நாங்கள் யாவரும் எமது மக்கள் சார்பில் கடமையாற்றுகின்றோம் என்பதை நாங்கள் மறக்கக் கூடாது. மக்கள் என்று கூறும் போது உங்கள் ஒவ்வொருவரினதும் குடும்பங்களும் உற்றார் உறவினர்களும் கூட அச்சொற் பதத்தினுள் அடங்குவர். எங்கோ இருக்கும் மத்திக்கோ சுயநலத்துடன் எம்மை அண்டப் பார்க் கும் மத்தியின் அமைச்சர்களுக்கோ மற்றையவர்களுக்கோ நாங்கள் ஜால்ரா தாளம் போட வேண்டிய காலத்தை நாம் இப்பொழுது தாண்டி விட்டோம்.

வெகு விரைவில் அரசாங்க அதிபர்கள்கூட எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட இருக்கின்றார்கள். எமது மக்களுக்கு எது நன்மை பயக்கும், மத்தியின் எந்தெந்த உள்ளீடல்கள் எமக்குத் தீமை பயக்கும் என்பதை எல்லாம் நாம் யாவரும் நன்கு ஆராய்ந்து, உணர்ந்து செயற பட வேண்டிய காலம் இது. உதாரணத்திற்கு இராணுவத் திற்குப் பயந்து காடுகளையோ, வீடுகளையோ, காணிகளையோ அவரிக ளிடம் கையளித்திருந்தீர்களானால் அது நீண்ட காலப் பாதிப்பை எம் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

காணிகளைக் கையேற்கும் சட்டத்தின் கீழ் பொது நோக்கத்திற் காகக் காணிகளைச் சுவீகரிக்கலாம் என்பது இராணுவ முகாம் கட்டு வதற்கும் முடியும் என்று சில அலுவலர்கள் தீர்மானித்து போர் முடிந்த பின்னர் கூட இராணுவம் கேட்டவாறே அவற்றைக் கொடுத்தும் வந் துள்ளனர். அதனால் அவர்களுக்கு இராணுவத்தினரின் தோழமை யும் உதவிகளும் கிடைத்தது உண்மைதான். ஆனால் அவ்வாறு செய்ததால் நாம் எமது மக்களுக்குத் துரோகம் இழைத்து விட்டோம் என்பதை மறக்கக்கூடாது.

இப்பொழுது வரும் போது தான் பத்திரிகையில் இராணுவப் பேச்சா ளர் ஜயநாத் ஜயவீர இராணுவத்தை வடமாகாண த்தில் இருந்து அக ற்றினால் அசம்பாவிதங்கள் நடைபெறும் என்று கூறியிருப்பதைப் பார் த்தேன். வடமாகாணத்தில் யாரால் அசம்பாவிதங்கள் ஏற்படும் என்று அவர் எதிர்பார்க்கின்றார் என்று தெரியவில்லை. இராணுவம் போர் முடிந்து 7 வருடங்களின் பின்னர் இங்கு தரித்து நிற்பதே எமது பிரச்சினை.

எங்கள் காணிகளை எடுத்துள்ளனர், வீடுகளை எடுத்துள்ளனர், வளங்களைப் பாவிக்கின்றனர், வணிகத் தொழில்களை எடுத்துள் ளனர், எமது பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை, அசம்பாவிதங்கள் இராணுவம் இருப்பதால்தான் ஏற்பட்டுள்ளன. அவர்கள் அனைவ ரும் வடமாகாணத்தை விட்டுப் போய்விட்டால் பொலிஸார் எமது பாது காப்பைப் பார்த்துக் கொள்வார்கள்.

அசம்பாவிதங்களும் நடைபெற மாட்டாது என்ற கருத்தை இங்கு கூற விரும்புகின்றேன். எமது அலுவலர்களில் சிலர் இராணுவத் திற்குப் பயந்து தமது முறையான சட்ட ரீதியான செயற்பாடுகளில் ஈடுப டாது எமக்குப் பாதகமான முறையில் நடந்து கொள்வது வரவேற்கத்த க்கதல்ல.

உங்கள் ஒவ்வொருவரின் பழைய கால நடைமுறைகள், உங் கள் பழைய சிநேகங்கள், நேயங்கள், குறைபாடுகள் யாவையும் அப் போதைக்கப்போது எமக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தாலும் அவற்றை வைத்து உங்களைப் பழிவாங்கவோ இம்சைப் படுத்தவோ நாங்கள் முனையவில்லை. புதிய சூழலுக்கு ஏற்ப உங்களை மாற்றி மக்கள் சார்பாக நடந்து கொள்ளுங்கள் என முதலமைச்சர் தனது உரையில் தெரிவித்துள்ளார். (செ-12)

(மற்றுமொரு செய்தி 6-ம் பக்கத்தில்)

## பள்ளிவாசலை...

வாகத்திற்கு தெகிவளை - கல்கிசை மாநகர சபையினால் பள்ளிவாசல் விஸ்தரி ப்புக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அந்த அனுமதியை ரத்து செய்யும் வகையிலான உத்தரவொன்றை மாநகர முதல்வர் அறிவித்துள்ளதோடு அதன் பிரதியை பொலிஸாருக்கும் அனுப்பி வைத்துள்ளதாக பள்ளிவாசல் நிர்வாகம் கூறுகின்றது.

இந்த தடை பற்றி பொலிஸாராலும் தங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பள்ளிவாசல் நிர்வாகம் தெரிவிக்கின்றது.

புனித ரம்ழான் நோன்பு காலத்தில் பள்ளிவாசல் விஸ்தரிப்பு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை குறித்து பிரதமர் ரணில் விக்கிரசிங்க, சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கா உட்பட உரிய தரப்பினரின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரகுமான் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள அனுமதியை மாநகர முதல்வரால் ரத்து செய்ய முடியாது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு அமைச்சர்களான ரிஸாத் பதியுதின் , ஹபீர் ஹாஸிம், எம். எச் அப்துல் ஹாலீம்ஃடி, நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உட்பட பலரும் பள்ளிவாசலுக்கு நேரடியாக சென்று இந்த தடை குறித்தும் அடுத்தகட்ட செயல்பாடுகள் குறித்தும் பள்ளிவாசல் நிர்வாகத்துடன் கலந்துரையாடியுள்ளனர்.

ஏற்கெனவே கண்டியில் பள்ளிவால் கோபுர நிர்மாணப் பணிகளுக்கு பௌத்த கடும்போக்காளர்களின் எதிர்ப்பை அடுத்து, அந்தப் பணிகளுக்கு அதிகாரிகள் கடந்த வாரம் தடை விதித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-12)

## இளைஞர்களை...

ஈடுபட்ட பலர் தற்போது சிறைகளில் உள்ளமையால் கொக்குவில் பகுதியில் இடம்பெற்று வந்த குற்றச்செயல்களும் வெகுவாக குறைவடைந்துள்ளது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கி கொடுத்துவிட்டு, அவர்கள் எங்கே செல்கின்றார்கள்? என்ன செய்கின்றார்கள்? என்பது தொடர்பில் கண்காணிப்பதில்லை. இதனால் அவர்கள் வழிதவறி செல்லும் நிலை அதிகமாகவே காணப்படுகின்றது.

இதனால் குற்ற சம்பவங்களில் விரும்பியோ விரும்பாமலோ அவர்கள் தொடர்புபடுகின்றனர். இவ்வாறான நிலையில் அரசியல் வாதிகளாலும் வன்முறையில் ஈடுபட வைப்பதற்காக குறித்த இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட வைக்கின்றனர். ஆகையால் தமது பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர்கள் கண்காணிக்க வேண்டும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை திருத்த முடியாவிட்டாலும் பொலிஸார் திருத்த வேண்டி ஏற்படும். பொலிஸார் பிள்ளைகளை கைது செய்து சிறையில் அடைத்து விசாரணை செய்து, பின்னர் நீதிமன்றில் முற்படுத்தி நான்கைந்து மாதங்கள் விசாரணை நடைபெற்று பின்னர் தண்டனை வழங்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

ஆகையால் இது தொடர்பில் பெற்றோர்களே கவனமாக இருக்க வேண்டும். தமது பிள்ளைகளின் எதிர்காலம் சீரழியாமல் இருப்பதற்கு தமது பிள்ளைகள் என்ன செய்கின்றனர்கள் என்பது தொடர்பில் தெரிந்திருக்க வேண்டும். தமது பிள்ளைகள் குற்ற செயல்களுடன் தொடர்புபட்டிருந்தால் அது தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்துவதன் மூலம் எச்சரிக்கை செய்து பிள்ளைகளை திருத்த முடியும் என யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.(செ-4)

## ஒலிவாங்கி கோளாறு...

தலைவர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றின் தொடர்பாடல் கட்டமைப்பின் குறைபாடுகளை நன்கு அறிந்து கொண்ட சிரேஷ்ட உறுப்பினர்கள், விமர்சனம் செய்வது வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தொடர்பாடல் கட்டமைப்பை மாற்றியமைப்பதற்கு 125 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் 51 உறுப்பினர்களினால் அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் நியாயமான சந்தேகம் எழுந்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார். பாராளுமன்றின் ஒலிவாங்கிக் கட்டமைப்பு செயலிழந்தமைக்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். இந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டியது பாராளுமன்றின் கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லா தீர்மானத்தை முன் வைத்த தரப்பினருக்கே விவாதங்களின் போது கூடுதல் கால அவகாசம் வழங்குவது வழமையானதாகும் எனவும், எனினும் தற்போதைய அரசாங்கம் அதற்கான சந்தர்ப்பத்தை உரிய வகையில் வழங்க மறுப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை உருவாக்க நினைக்கும் அனைத்து உறுப்பினர்களும் இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாராளுமன்றில் ஒலிவாங்கி செயலிழந்தமை குறித்து உடனடி விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் பாராளுமன்றில் இவ்வாறான ஓர் சம்பவம் இடம்பெற்றதில்லை எனவும் எனவே குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## நிதியமைச்சருக்கு...

நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிப்பினை வாக்கெடுப்பின் பின்னர் சபாநாயகர் கருஜயசூரிய சபைக்கு அறிவித்தார்.

தீர்மானத்திற்கு ஆதரவாக 51 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக 145 வாக்குகள் கிடைத்தன.

மேலதிகமாக 94 வாக்குகள் வித்தியாசத்தால் பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் உறு ப்பினர்களும், கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்களுடன் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தவர் நேற்று காலை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாடாளு மன்றத்தில் சமர்ப் பித்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, கட ந்த வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்த போது நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பொருளாதாரம் தொடர்பாக தவறான புள்ளி விபரங்களை நாடாளுமன்றதில் சமர்ப்பித்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

தற்போது அரச நிதி நிர்வாகத்தில் பாரிய முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக கூறிய தினேஷ் குணவர்த்தன, அத்தியாவசிய பொருட்கள் மீது அதிக வரி விதிப்பதன் மூலம் நிதி அமைச்சர் பொது மக்களை மேலும் சிரமத்தில் ஆழ்த்தியுள்ளதாக குற்றம்சாட்டினார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் நிதி அமைச்சர் மீது நாடாளுமன்றம் வைத்திருந்த நம்பிக்கையை இழந்துள்ளதாக கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, ஆதலால் கருணாநாயக்க தொடர்ந்து அமைச்சர் பதவி வகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் எதிர் கட்சியினர் அரசியல் லாபங்களை பெற முயற்சிப்பதாக ஆளும் கட்சியின் சார்பில் உரையாற்றிய அமைச்சர் ரிஷாத் பதியூதின் குற்றம்சாட்டினார். தொடர்ந்து பிரேரணை தோற்கடிப்பின் பின்னர் உரையாற்றிய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தனது கருத் துக்களை தெரிவித்த போது, அரச நிதித்துறையில் கடந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஊழல்களை எதிர்த்து நடவடிக்கை எடுத்ததன் காரணமாகவே எதிர்க்கட்சியினர் தன் மீது பொய் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகத் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் தேசிய பொருளாதாரம் பாரிய வளர்ச்சி கண்டுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் கருணாநாயக்க, நாடு அபிவிருத்தியை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தாங்கள் சுமத்திய அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க எதிர்க் கட்சியினர் இன்று (நேற்று) தவறியுள்ளதாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நேற்று பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்தார்.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு மீதான விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற போது சிறிது நேரம் அவ் விவாதத்தை செவிமடுத்தவாறு ஜனாதிபதி பாராளுமன்ற சபையில் அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## இளைஞர்கள்...

தொற்று அதிகரித்துள்ளதாவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எச்.ஐ.வி தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காண மேற்கொள்ளப்படும் பரிசோதனை நடவடிக்கைகளை தொடர்ந்தும் விஸ்தரிக்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளது.

மாவட்ட மட்டத்தில் இந்த நோய் தொடர்பில் மக்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் அவர்களை வைத்திய சிகிச்சைகளுக்கு உட்படுத்துவது, விஷேடமாக விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்கள் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையானர்களை வைத்தியப் பரிசோதனைகளுக்கு உட்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கம் என, சிசிர லியனகே தெரிவித்துள்ளார். (செ-12)

## ஜே.வி.பி ஆதரவு...

பட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும், மங்கள சமரவீர, டப்ளியூ.டீ. ஜே.செனவிரத்ன, சந்திரசிறி கஜதீர, ஆறுமுகன் தொண்டமான், அங்கஜன் ராமநாதன் ஆகியோரும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

இதேவேளை, ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, ஜாதிக ஹெல உறுமய ஆகியன குறித்த பிரேரணைக்கு எதிராகவும், மக்கள் விடுதலை முன்னணி ஆதரவாகவும் வாக்களித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## பிரபல சோதிடர்...

யுள்ளார்.

மேலும் அரசியல் ரீதியான குழப்பங்கள் மற்றும் மக்கள் போராட்டங்களும் அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைவார் எனவும் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெறுவார் எனவும் இந்திக்க தொட்டவத்த முன்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## திட்டத்தை...

ளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா யாழ்.மாவட்ட குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வாக இரணைமடு குள நீரை யாழ். குடாநாட்டுக்கு கொண்டு செல்வதில் காணப்படும் இடர்பாடுகள் பூநகரி குளங்களை ஒருங்கிணைத்தல், கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் ஆகியன தொடர்பாக விசேட கூற்றை முன்வைத்திருந்தார். அதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு பதில் தெரிவித்துள்ளார்.(செ-12)

## யாழ்ப்பாண...

சாவகச்சேரி, கிளிநொச்சி பொலிஸ் நிலையங்களில் உதவிப் பொலிஸ் பரிசோதகராகப் பணியாற்றியிருந்தார்.

சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின் யாழ்ப்பாண மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

1984ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் முதலாவது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய ஐ.ரி.கனகரட்ணத்தின் மருமகனே ஸ்ரனிஸ்லஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் சேவையில் 38 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இவர் மட்டக்களப்பை சொந்த இடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)


அலுவலக உத்தியோகத்தர்கள் தேவை

காலி நகரில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் கடமைபுரிய
- அலுவலக உத்தியோகத்தர்கள்
- ஊழியர்கள் தேவை

ஆர்வமும் விருப்பமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய தமது விண்ணப்பத்தை
NO.3, Kelan kaduwa Place, Colombo 06
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
குறிப்பு: தங்குமிட வசதி வழங்கப்படும்.
(C-4818)

தேவை
ALTO / N16 கார்கள் விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்
077 996 1250
(4908)

நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management
UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி (பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் பணியிடப்பயிற்சி (பணியிடப்பயிற்சியின் பின் நிரந்தர தொழில் ஏற்பாடு)
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
SCHOLARSHIPS AVAILABLE
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
SIKARAM ACADEMY Business - Hospitality - English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.